# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, ஆவணி (ஆகஸ்ட்) 03, 2018. இதழ் - 24



இலஞ்சம் ,ஊழல் மற்றும் மோசடி தொடர்பிலான

இலவச சட்ட ஆலோசனைக்கு

அழையுங்கள்

011 2 501 503

மாத்தறை - 041 22 33 522 - வவுனியா - 024 222 76 76

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA

நேர்மையின் புகலிடம்

இல: 5/1, எல்பேங்க் வீதி, கொழும்பு - 05




**இலங்கை மீண்டும் இராணுவ மயமாகிறது! ஆனால் இது உள்நாட்டுப் போருக்கான ஏற்பாடல்ல!**

ஏனைய நாடுகள் இனாமாக கொடுத்தாலும்கூட பழைய போர்க்கப்பல்களை வாங்குவதில் இலங்கை அவதானமாக இருக்க வேண்டும்...

பக்கம் - 05



**மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வினை நடாத்துவதற்கும் கூட வசதியின்றியேங்கும் படுவான்கரைப் பாடசாலைகள்**

பக்கம் - 09



**என்.எம்.பெரேரா சிறையிலிருந்து தப்பிய கதை**

“பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளின் யுத்தத்திற்கு இலங்கைவாசிகளின் பணத்திலிருந்து

பக்கம் - 08



# உன்னிச்சைக்குளம் நீர்ப்பாசனத் திட்ட விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுகோள்

அண்மையில் மட்டக்களப்பு உன்னிச்சைக் குளத்தின்



வான் கதவுகள் திறக்கப்பட்டதால் ஏற்பட்ட நீரோட்டத்தில் பாதிக்கப்பட்ட உன்னிச்சைக்குளம் நீர்ப்பாசனத் திட்ட விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்க்குமாறு நீர்ப்பாசன அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவிடம் உன்னிச்சைக் குளம் நீர்ப்பாசனத் திட்ட விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அநுராதபுரத்திலுள்ள அமைச்சு அலுவலகத்தில், வியாழனன்று அமைச்சரைச் சந்தித்த உன்னிச்சைக்குளம் விவசாய நீர்ப்பாசனத் திட்டத்தின் முகாமைத்துவக் குழுத் தலைவர் கே. யோகவேள் தலைமையில் சென்ற விவசாயிகள் குழுவினர், தாம் தற்சமயம் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் பிரச்சினைகள் குறித்த மகஜரையும் அமைச்சரிடம் கையளித்தனர்.

அம் மகஜரில், தமது பிரதேச விவசாயிகளுக்கான எந்தவிதமான வேலைத் திட்டத்தையும் கடந்த மே மாதம் 25ஆம் திகதியிலிருந்து நீர்ப்பாசன அதிகாரிகள் செய்து தரவில்லை என்று விவசாயிகள் குறிப்பிட்டுள்ளனர்.


உன்னிச்சைக்குளம் மடை திறக்கப்பட்டதால் ஏற்பட்ட நீரோட்டத்தில் பாதிக்கப்பட்ட உன்னிச்சைக்குளம் நீர்ப்பாசனத் திட்ட விவசாயிகளின் மனக்குமுறல்களை அறிந்து சிபார்சுகளைச் செய்வதற்காக அமைச்சு மட்டத்திலிருந்து சுயாதீன குழுவொன்றை அனுப்ப அமைச்சர் கடந்த மாதம் இணங்கியிருந்தும் அக்குழு இன்னமும் களத்துக்கு வரவில்லை என்றும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். மேலும் உன்னிச்சைக் குளம் நிர்ப்பாசனத் திட்டத்திற்குப் பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியியலாளரின் சேவையில், பிரதேச விவசாயிகள் திருப்திப்படாததால் அவரை இடமாற்றம் செய்து விவசாயிகளின் நலனில் அக்கறையும் அர்ப்பணிப்பும் உள்ள புதிய அதிகாரியை நியமிக்குமாறும் கோருகிறோம் என்றும் தமது மகஜரில் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.இந்தக் கோரிக்கைகளுக்குப் பதிலளித்த அமைச்சர், சனிக்கிழமை 04.08.2018

(வவுணதீவு நிருபர்)

தனது குழுவினருடன் தான் நேரடியாக உன்னிச்சைக்குளப் பிரதேசத்திற்கு வருகை தந்து விவசாயிகளின் நிலைமைகளை ஆராயவுள்ளதாக வாக்குறுதியளித்தார்.

கடந்த மே மாதம் 24ஆம் திகதி உன்னிச்சைக்குளத்தின் வான் கதவுகள் சடுதியாகத் திறக்கப்பட்டதன் காரணமாக உன்னிச்சை நீர்ப்பாசனக் குளத்தினை அண்டிய சுமார் 6000 ஏக்கர் வயல் நிலங்கள் அழிவடைந்திருந்தன.

தொடர்ச்சி... (பக்கம் -23 )



**அச்சத்தில் யாழ் மக்கள் !**

யாழ்ப்பாணம் மீண்டும் அச்சத்தில் உறைந்துபோய் இருக்கிறது. வன்செயல் குழுக்களின் தாக்குதல்கள், கத்தி வெட்டுக்கள் என்று மக்கள் அச்சத்தில் இருக்கிறார்கள்.

பக்கம் - 04

# யாழ்ப்பாணம் பொலிஸாரின் விடுமுறைகள் ரத்து




வன்முறை குழுக்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணத்தில் சில பகுதிகளை சேர்ந்த பொலிஸாருக்கான விடுமுறைகள் காலவரையற்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக வடமாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் பாலித பெர்னான்டோ அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கோப்பாய், மானிப்பாய் மற்றும் சுன்னாகம் பொலிஸ் நிலையங்களில் கடமை புரியும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான விடுமுறையே இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக யாழ்ப்பாணத்தில் பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. ஆவா குழு உட்பட சில குழுக்கள் மீது இது குறித்து குற்றஞ்சாட்டப்படுகின்றது.

பல வீடுகள் தாக்கப்பட்டதுடன், சில அரச பணியாளர்களும் மிரட்டப்பட்டுள்ளனர்.

இப்படியான சம்பவங்களில் ஈடுபடுவதாக சந்தேகிக்கப்படும் குழுக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இந்த அறிவிப்பும் வந்துள்ளது.




## விளாவட்டவான் விநாயகர் வித்தியாலயத்திற்கு ஒலிபெருக்கி அன்பளிப்பு



மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேசத்திற்குட்பட்ட விளாவட்டவான் ராஜா விளையாட்டுக் கழகத்தினால், விளாவட்டவான் விநாயகர் வித்தியாலயத்திற்கு வியாழக்கிழமை (02.08.2018) ஒலிபெருக்கி அன்பளிப்பு செய்யப்பட்டது.

இந்த ஒலிபெருக்கி ராஜா விளையாட்டுக் கழக வீரர்களினால் பாடசாலை அதிபர் கே.ராகவன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.
(விளாவூர் நிருபர்)

## சர்வதேச கணிதப் போட்டியில் சாதித்த புனித மிக்கேல் மாணவர்கள்

மட்டக்களப்பு புனித மிக்கேல் தேசிய பாடசாலையில் இருந்து 11 மாணவர்கள், சிங்கப்பூரில் நடைபெற்ற சர்வதேச கணித வினா விடைப் போட்டியில் பங்கேற்றனர்.

இவர்களில் இருவர் வெள்ளிப் பதக்கங்களையும் மூவர் வெண்கலப் பதக்கங்களையும் ஆறு பேர் திறமைச் சான்றிதழையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்தனர்.

படத்தில் மாணவர்களையும், அவர்களை பயிற்றுவித்த ஆசிரியர் என். நவசீலனையும், அதிபர் பயஸ் ஆனந்தராஜாவையும் காணலாம்.



## கிழக்கில் வேம்புமரங்கள் படுகின்றன!

கிழக்கு மாகாணத்திலுள்ள பெரும்பாலான வேம்பு மரங்களில் பரவலாக இலைகள் கருகிவருகின்றன. உஸ்ணத்தின் தாக்கமா? அல்லது நோய்த்தாக்கமா? என்பது புரியாமலுள்ளது. வேம்புமரங்கள் பட்டுவருவது நல்லசகுனமல்ல என்பது சிலரின்கருத்து. எது, எப்படியிருந்தபோதிலும் தினமும் பல வேம்புமரங்கள் இவ்விதம் பட்டுவருகின்றன.கருகிய இலைகளால் குப்பைகள் நிறைந்துவருகின்றன. வேம்புமரங்கள் கருகிவருவதைக் காணலாம்.

படங்கள் (காரைதீவு சகா)

## இரண்டாவது நாளாகவும் மாணவர்பகிஸ்கரிப்பு தொடர்ந்தது!

கல்முனை மரிய தெரேசியாஸ் சர்வதேச பாடசாலை மாணவர்களின் வகுப்புப் பகிஸ்கரிப்பு நேற்று (2) வியாழக்கிழமை இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

பாடசாலை அதிபர் அருட்சகோதரி எம். லூக்ரிஸ் மன்னாருக்கு இடமாற்றப்பட்டதை ஆட்சேபித்து, பெற்றோர்கள் இந்த எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர். அதனால் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு கடந்த இரு நாட்களாக அனுப்பவில்லை. குறித்த அதிபரது இடமாற்றம் ரத்துச்செய்யப்படவேண்டும் என குறித்த பாடசாலை பெற்றோர்கள் கொழும்பு அருட்சகோதரிகளின் மேலிடத்திற்கு வேண்டுகோள் விடுத்தபோதிலும் அது கணக்கெடுக்கப்படவில்லை எனக் கூறி, அதனைக் கண்டித்து இப்பகிஸ்கரிப்பை நடத்துகின்றனர். இப்பாடசாலையில் எல்.கே.ஜி தொடக்கம் தரம் 9 வரை ஆங்கிலமொழி மூலம் 150 மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர். அதிபருடன் சுமார் 10ஆசிரியர்கள் கற்பித்துவந்தனர்..

பெற்றோர் சங்க பிரதிநிதியொருவர் கருத்துரைக்கையில்: 'அதிபர் அருட்சகோதரி லூக்ரிஸின் இடமாற்றம் ரத்துச் செய்யப்படும்வரை எமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பமாட்டோம். நாளை விடுமுறை விடும் தினம். அன்றும் அனுப்பமாட்டோம்', என்று தெரிவித்தார்.
(காரைதீவு நிருபர் சகா)

## அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் கிழக்கு மாகாணத்திகான கள விஜயம்



அண்மையில் இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் HE Bryce Hutchesson கிழக்கு மாகாணத்திகான கள விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார். இதன் போது 2018.7.19 அன்று காத்தன்குடி நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் காரியாலயத்திற்கும் சென்றிருந்தார். கிழக்கு மாகாணத்தின் பொதுவான அரசியல் சூழ்நிலைகள் குறித்தும் குறிப்பாக முஸ்லிம் சமூகம் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கட்சியினருடன் அவர் கலந்துரையாடினார். இதனைத் தொடர்ந்து 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3 ஆம் நாள் விடுதலைப்புலிகளினால் தாக்குதல் நடத்தப்பட்ட பள்ளிவாயல்களில் ஒன்றான மீரா ஜும்மா மஸ்ஜிதிற்கும் அவர் விஜயம் செய்தார். இந்த சந்திப்பில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தேசிய அமைப்பாளர் நஜா மொஹமத் தலைமைத்துவ சபை உறுப்பினர். ஏ.எல்.எம் சபீல், கட்சியின் காத்தான்குடி நகரசபை உறுப்பினர்களான சகோ.இல்மி அகமட் லெப்பே, சகோதரி. ரிபாயா, சகோதரி ரகீபா ஆகியோரும் கலந்து கொண்டனர். அது குறித்த படம்

## முல்லைத்தீவு ஆர்ப்பாட்டத்தால் பதற்றம்



முல்லைத்தீவில் சட்டவிரோத மீன்பிடியை தடுக்கக் கோரி பொதுமக்கள் மற்றும் மீனவர்கள் அடங்கலானோர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

முல்லைத்தீவின் சுனாமி நினைவு இடத்தில் ஆரம்பமான ஊர்வலம் முல்லைத்தீவு கடற்தொழில் மற்றும் நீரியல் வள அலுவலகத்தை சென்று சேர்ந்தது.

அங்கு திணைக்கள தலைமை அதிகாரிகளுடன் பேசவேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமெழுப்பினர்.

ஆனாலும், நீண்ட நேரமாக அதிகாரிகள் பேச வராததால், கோபமடைந்த மக்கள் அலுவலகத்தை தாக்கியதாக தெரிகிறது. பொலிஸார் அவர்களை கட்டுப்படுத்த முனைந்தும் மக்கள் அலுவலகத்துக்கு சிறு சேதத்தை ஏற்படுத்தியதாக அங்கிருந்த செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

பின்னர், கூட்டத்துக்கு தலைமை தாங்கிய சிலர் அதிகாரிகளோடு பேச்சுவார்த்தை நடத்தியதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

## 'அறக்கொட்டி அழிய வேண்டும் அல்லது நாம் அழிவோம்!'



'அம்பாறை மாவட்டத்தில் இன்று ஏற்பட்டுள்ள மிகமோசமான அறக்கொட்டி பூச்சி தாக்கத்திற்கு அடிப்படைக்காரணம் காலம்தப்பிய பிந்திய நீர்ப்பாசனமே. எது எப்படியிருப்பினும் குறித்த வயல் நிலங்களைக் காப்பாற்றவேண்டும். அதற்காக அறக்கொட்டியுடன் போராடுகின்றோம். ஒன்றில் அறக்கொட்டி அழியவேண்டும் அல்லது நாம் அழிவோம்.'

இவ்வாறு அறக்கொட்டியால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட அம்பாறை உகன மாயாதுன்ன வயல் பிரதேசத்தில் நின்று கூறுகின்றார் அம்பாறை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் எம்.எவ்.எ.சனீர்.

நெற்பயிரை அழிக்கும் ஒரு பூச்சி வகையே இந்த அறக்கொட்டியான்.

மாவட்டத்திலுள்ள விவசாய உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் சகிதம் அங்கு இரு வாரங்களாக முகாமிட்டுள்ள

தொடர்ச்சி... (பக்கம் -10 )

## அம்மா விமானப் பணிப்பெண் : மகள் விமானி



எல்லா பெற்றோர்களுக்கும் தன் பிள்ளைகள் குறித்து ஏதாவது ஒரு கனவு இருக்கும்தானே? அப்படித்தான் விமானப் பணிப்பெண்ணாக இருந்த பூஜா சின்சான்கருக்கும் ஒரு கனவு இருந்தது.

ஏறத்தாழ 38 ஆண்டுகள் விமானத்தில் பணிப்பெண்ணாக புரிந்து விட்டோம், தான் பணியிலிருந்து ஓய்வு பெறும் நாளில், தாம் பணியாற்றும் ஏர் இந்தியா விமானத்தில் தன் மகள் விமானியாக இருந்தால் எப்படி இருக்கும் என்ற கனவுதான் அது. அந்தக் கனவை நிறைவேற்றி இருக்கிறார் அவரது மகள் அஸ்ரிதா சின்சான்கர்.

தொடர்ச்சி... (பக்கம் -23 )

## மறைந்த மட்டக்களப்பு அருட்தந்தையர்களுக்கான செப அஞ்சலியும், ஒன்றுகூடலும்.



மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் கடந்த யுத்தகாலத்தில் கொல்லப்பட்டும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுமான அருட்தந்தையர்கள் சந்திரா பெர்னாண்டோ, இயேசு சபைத்துறவி இயூஜின் ஹேபயர், செல்வராஜா சவரிமுத்து ஆகியோரை நினைவுகூர்ந்து இறைவனுக்கு நன்றிகூறி நிறைவேற்றப்பட்ட நன்றி நவில் கூட்டுத்திருப்பலியானது மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் அதிவந். கலாநிதி யோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் புளியந்தீவு, புனித மரியாள் பேராலயத்தில் 30.07.2018 அன்று இடம்பெற்றது.

ஆயர் அவர்கள் தமது மறையுரையில் அருட்தந்தையர்களின் தியாகப் பணியினை எடுத்துரைத்தார். திருப்பலி நிறைவில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதிவந்.கலாநிதி நோயல் இம்மனுவல் ஆண்டகை தலைமையில் மறைசாட்சிகளாக விதைக்கப்பட்ட அருட்தந்தையர்களின் தியாகத்தை வாழ்த்தும் சிறப்பு ஒன்றுகூடல் நிகழ்வானது ஆலய முன்றலில் இடம்பெற்றது.

தொடர்ச்சி... (பக்கம் -06 )

# முஸ்லிம் பெண்களுக்கு ஆதரவு வழங்கும் கிழக்கு மாகாண பெண்கள் அமைப்புக்கள்










கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பெண்கள் ஆகிய நாங்கள் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தை சீர்திருத்த கோருகின்ற முஸ்லிம் சகோதரிகளின் போராட்டத்தில் உடன்நிற்கின்றோம் என்று கிழக்கு மாகாண பெண்கள் அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தினை இலங்கையில் திருத்துவதில் ஏற்பட்டு வரும் தாமதங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அதன் திருத்தங்களின் முக்கியத்துவம் ஆகியவற்றினை உணர்த்தும் வகையிலும் கடந்த புதன்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்ற கவன ஈர்ப்புப் போராட்டத்திலேயே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

இவ்விடயம் குறித்து அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கிழக்கு மாகணத்தில், அடக்குமுறை, வன்முறைக்கு எதிராகவும், நீதிக்காகவும், பெண்கள் மற்றும் சிறுமியருடன் பணியாற்றும் பெண்களாகிய நாங்கள், முஸ்லிம், விவாக விவாகரத்துச் சட்டமானது அனைத்து முஸ்லிம்களுக்கும் சமத்துவத்தையும், நீதியையும் உத்தரவாதப்படுத்தக்கூடிய வகையில் சீர்திருத்தப்படல் வேண்டும் என்கின்ற முஸ்லிம் பெண்களின் பரிந்துரைகளின்படி, மாற்றி அமைக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்க விரும்புகிறோம். இப்பரிந்துரைகளே முஸ்லிம் பெண்கள் மற்றும் சிறுமியருக்கெதிரான பாரபட்சத்தை அகற்றி நீதிகிடைக்க வழிவகுக்கும்.

எமது முஸ்லிம் சகோதரிகள் கடந்த முப்பது வருடங்களாக இந்தச் சட்டத்திற்கு எதிராக கருத்து தெரிவித்தும், சட்டத்தை சீர்திருத்த கோரியும் போராடி வருவதை நாங்கள் நன்கறிவோம். நாங்கள் அவர்களுடன் பல ஆண்டு காலமாக துணை நின்றும் வருகின்றோம். தொடர்ந்து கைகோர்த்து நிற்போம்.

அமைச்சரவை அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது பணிகளைச் சரிவர செய்யும் வகையில், முஸ்லிம் பெண்களின் பரிந்துரைகளின்படி இச்சட்டத்தில் மாற்றங்கள் கொண்டுவர வேண்டியது அவசியமாகும் என்பதை திடமாய் முன்வைக்க விரும்புகிறோம். இதனை செய்தால் மட்டுமே முஸ்லிம் பெண்களும் சிறுமியரும் தினசரி வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை கருத்தில் கொள்ளமுடியும். இதனூடாக நமது நாட்டின் அடிப்படை மனித உரிமைகள், அரசியலமைப்பு சார் கடமைகள், மற்றும் சர்வதேச உடன்படிக்கைகள் சார் கடமைகள் ஆகியவற்றை நிறைவேற்றமுடியும். அது மட்டுமல்லாமல் உலகலாவிய ரீதியில் முஸ்லிம் பெண்கள் உரிமைகளுக்கேற்ப செய்துவரப்படும் சட்ட மாற்றங்களுடன் இலங்கையும் இணைய வழிவகுக்கும்.

இதனால் இப்பரிந்துரைகளை அமைச்சரவை ஒரு முக்கிய, அடிப்படை மனித உரிமை சார் பிரச்சனையாகக் கருதி விரைவில் மாற்றம் கொண்டு வரவேண்டும் எனும் முஸ்லிம் சகோதரிகளின் கோரிக்கைக்கு ஒன்றிணைந்து நாமும் குரல் கொடுப்பதோடு, அவர்களோடு உடன் நிற்கின்றோம்.

"எம் அனைவருக்கும் விடுதலை கிடைக்கும் வரை எமக்கு விடுதலை இல்லை" என்னும் கோட்பாட்டை என்றென்றும் முக்கியமாக கருதுவோர் நாங்கள். இக்கோட்பாட்டின்படி இந்த போராட்டம் முஸ்லிம் பெண்களின் தனிபட்ட போராட்டம் அல்ல. எமது பல வருட போராட்டமானது அவமதிக்கப்படுவதை கண்டு நாங்கள் அமைதி காக்கமாட்டோம். நீதிபதி சலீம் மர்சூ∴ப் குழு அறிக்கை ஆக்கப்பட்டு ஒன்பது வருடங்கள் ஆகிவிட்டன. இதற்கு மேலும் அறிக்கை சார் மாற்றங்கள் கொண்டு வருவதில் கால தாமதம் காட்டுவதை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்.

முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தை சீர்திருத்துவதற்கான முன்னெடுப்புகள் பலமுறை தோல்வி அடைதல் என்பது அரசாங்கத்திற்குள்ளும், அதற்கு அப்பாலும் உள்ள அனைவரினதும் பொறுப்பாகும். அதுமட்டு மல்லாது, இதுதொடர்பில் மௌனம்காத்துவருகின்ற அரசும் சமூகமும் இலங்கையில் வாழுகின்ற முஸ்லிம் பெண்களின் அடிப்படை உரிமை மறுக்கப்படுகின்றமைக்கு உடந்தையாக உள்ளீர்கள் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

பெண்களாகிய நாங்கள் நீதியுடனான சுதந்திர உலகு உருவாகும் வரை என்றென்றும் ஒருவருக்கொருவர் தொடர்ந்து துணைநிற்போம். அனைவருக்குமான நீதியுடனான விடுதலைகாணும் வரை எங்களது ஒன்று கூடிய போராட்டம் தொடரும் என்று தெரிவித்துள்ளனர்.

## தாந்தாமலை தீர்த்தம்



மட்டக்களப்பு, மண்முனை தென் மேற்கு பிரதேசத்துக்குட்பட்ட தாந்தாமலை முருகன் ஆலய தீர்த்தோற்சவம் 28.07.2018 காலை இடம்பெற்றது.

மக்களால் சின்னக் கதிர்காமம் என்று அழைக்கப்படும் தாந்தாமலை முருகன் ஆலயத்தில் கடந்த 07.07.2018 அன்று திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, மட்டக்களப்பில் உள்ள கிராம மக்களால் கூட்டாகா சேர்ந்தோ அல்லது தனி கிராமமாகவோ பூஜை நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டன.

27. 07.2018 வெள்ளிக்கிழமையன்று இறுதி நாள் இரவுத் திருவிழாவை முனைக்காடு கிராம மக்கள் வெகு சிறப்பாக நடாத்தியிருந்தனர், இதன்போது சுவாமிக்கு அபிசேகம், பூஜைகள் இடம்பெற்று, கணபதி மற்றும் பார்வதி சமேதர் ஆலய வீதி நடைபெற்றது.

சனிக்கிழமை அதிகாலை பூஜைகள் இடம்பெற்று, தீர்தோற்சவம் நடைபெற்றது, இவ் உற்சவத்தில் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் புண்ணிய தீர்த்தம் ஆடி தங்களது நேர்த்தியை பூர்த்திசெய்தனர்.

## ஜிம்பாப்வே தேர்தல் வன்முறை-3 பேர் பலி




ஜிம்பாப்வே நாட்டில் நடந்த தேர்தலில் ஆளும் சானு பி.எ.∴ப் கட்சி அதிக நாடாளுமன்றத் தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளதாக இன்னும் முழுமையாக வெளியாகாத அதிகாரபூர்வ முடிவுகள் தெரிவிக்கின்றன.

ஆளும் ஜானு-பிஎ.∴ப் கட்சி தேர்தலில் வெற்றிபெற்றதை அடுத்து, போராட்டக் காரர்கள் மீது அரசு அடக்குமுறையை ஏவி வரும் நிலையில், ஐக்கிய நாடுகள் அவையும், பிரிட்டனும் வன்முறைகள் குறித்து கவலை தெரிவித்திருக்கின்றன. அரசுத் துருப்புகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் மூவர் கொல்லப்பட்டனர்.தேர்தலில் முறைகேடுகள் நடந்ததாக எதிர்க்கட்சி குற்றம்சாட்டுகிறது. இந்நிலையில், ஜிம்பாப்வே அரசியல்வாதிகள் நிதானத்தைக் கடைபிடிக்கவேண்டும் என்று ஐ.நா. தலைமைச் செயலாளர் அண்டோனியோ கட்டர்ஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார். பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் ஹாரியட் பால்ட்வின், இந்த வன்முறையால் "ஆழ்ந்த கவலை" அடைந்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

திங்களன்று நடந்த தேர்தலில் அதிபர் எமர்சன் முனங்காக்வாவின் கட்சி நாடாளுமன்றத்தில் கணிசமான பெரும்பான்மையை பெறும் நிலையில் உள்ளது. சுமார் 37 ஆண்டு காலமாக ஆட்சியில் இருந்த முன்னாள் அதிபர் ராபர்ட் முகாபே பதவியில் இருந்து நீக்கப்பட்டபின் நடைபெற்ற முதல் தேர்தல் இது.

## பாராளுமன்ற உறுப்பினர் சம்பளத்தை அதிகரிக்க எதிர்ப்பு



பொதுமக்கள் மீது வரிச்சுமை அதிகரிக்கப்பட்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஊதியத்தை அதிகரிப்பது என்ற அரசாங்க முடிவு தவறானது என்று கூட்டு எதிர்க்கட்சி கூறியுள்ளது.

அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை 215 வீதத்தால் அரசாங்கம் அதிகரிக்கவுள்ளதாக கூறப்படுகின்றது. சம்பளத்தை அதிகரிப்பதற்கான தேவை குறித்து ஜுலை 17இல் நடந்த கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினரான ஷெஹான் சேமசிங்க, பொதுமக்கள் கவனத்தை திசை திருப்புவதற்கான நடவடிக்கையே இது என்று கூறியுள்ளார்.

அடுத்த பாராளுமன்ற அமர்வில் தமது கட்சி இந்த எதிர்ப்பை முன்னெடுக்கும் என்று அவர் கூறியுள்ளார்

## இலங்கை மருத்துவச் சங்க தலைவர் இராஜினாமா




இலங்கை மருத்துவக் கவுன்ஸிலின் தலைவர் பேராசிரியர் கொல்வின் குணரத்ன தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அவர் தனது இராஜினாமா கடிதத்தை சுகாதார அமைச்சரிடம் ஒப்படைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மருத்துவக் கவுன்ஸிலின் முன்னாள் தலைவர் காலோ பொன்சேகவின் பதவிக்காலம் முடிவடைந்து பிறகு கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி அந்த பதவிக்கான பேராசிரியர் கொல்வின் குணரத்ன நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பித்தக்கது.



# அச்சத்தில் யாழ் மக்கள் !

யாழ்ப்பாணம் மீண்டும் அச்சத்தில் உறைந்துபோய் இருக்கிறது. வன்செயல் குழுக்களின் தாக்குதல்கள், கத்தி வெட்டுக்கள் என்று மக்கள் அச்சத்தில் இருக்கிறார்கள்.

இதனைவிட, “குள்ள மனிதர்கள்” என்ற அச்சத்தை ஏற்படுத்தும் கூட்டத்தின் செயற்பாடும் மக்களை கட்டிப்போட்டு வைத்திருக்கிறது.

சில வருடங்களுக்கு முன்னதாக வடக்கு, கிழக்கின் ஏனைய பகுதிகளைப் போல, போரில் இருந்து யாழ்ப்பாணம் அழிவுகளுடன் மீண்டு வந்தது. மோதல்கள் நின்றதால் மக்கள் பெருமூச்சு விட்டுச் சுவாசித்தனர். கைதுகள் போன்றவை தொடர்ந்தாலும் தாக்குதல்கள் குறைந்திருந்தன.

அதனையடுத்து கிறீஸ் மனிதர்களின் அச்சம் நாடெங்கிலும் உருவானது. சில காலம் அது எங்கிலும் மக்களை அச்சத்தில் வைத்திருந்தது. அது குறித்து பல சந்தேகங்கள் தொடர்ந்தாலும், இன்றுவரை அது என்ன என்பது குறித்த எந்த முடிவும் பாதுகாப்புத் தரப்பால் வெளியிடப்படவில்லை.

இப்போது மீண்டும் யாழ்ப்பாணத்தில் இந்த நிலை. இது இப்படியே போனால், ஏனைய இடங்களுக்கும் அது பரவலாம்.

பொலிஸாரின் விடுமுறைகள் ரத்துச் செய்யப்படுவதாக வரும் அறிவிப்பு நிலைமையின் தீவிரத்தை எடுத்துக் காட்டுகின்றது.



தமிழர்களின் கலாசாரத் தலைநகராக திகழும் யாழ்ப்பாணத்தில் ஏன் இந்த வன்முறைகள்?, என்ற கேள்வி பலராலும் எழுப்பப்பட்டாலும், அதற்குத் தீர்வு எதுவும்

**பூபாலரட்ணம் சீவகன்**

இன்னமும் கிடைக்கவில்லை.

ஒரு பெரும் போரையே வென்றதாகக் கூறிக்கொள்ளும் பாதுகாப்புப் படையினரால் ஒரு சிறிய வன்முறைக் குழுவை அடக்க முடியாமல் இருப்பது ஏன்? என்பது அடுத்த கேள்வி.

மாகாண மற்றும் மத்திய அரசுகளாலும் இவற்றை தடுக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க முடியவில்லை.

போரில் தோற்றுப் போன மனநிலை ஒருபுறமும், நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றுக்கான வாய்ப்பு தென்படாமை மறுபுறமுமாக வாழும் மக்களுக்கு, இது மேலதிகமான ஒரு பாரம்.

இந்தச் சுமைகளை இறக்கி வைக்க உரியவர்கள் உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால், சமூகம் இடுப்பொடிந்து போகும். வளர்ச்சியில் நீண்ட தூரம் செல்ல வேண்டிய ஒரு நாட்டுக்கு இது ஒரு நல்ல சமிக்ஞை அல்ல.

# நேற்று ஈ.பி.ஆர்.எல்.எஃப், இன்று ரெலோ, நாளை புளொட்?

”வடக்கிற்கான அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் யார்?” என்று சம்பந்தன் தெரிவிக்க வேணும் என்று கேட்டிருக்கிறது ரெலோ. (கவனிக்கவும், கிழக்கைப் பற்றிய பேச்சே இல்லை)

அதாவது இதைப்பற்றி தமிழரசுக் கட்சி தெரிவிக்க வேண்டும் என்பது ரெலோவின் கோரிக்கை.

இதற்கான பதிலை ஓகஸ்ற் 10 ஆம் திகதிக்குள் தெரிவிக்க வேணும் என காலக்கெடுவையும் ரெலோ விடுத்திருக்கிறது.

## வடக்கு முதல்வரை அறிவிக்கக் கேட்ட ரெலோ ஏன் கிழக்கு முதல்வர் பற்றிக் கேட்கவில்லை?

இதுதொடர்பாக கடந்த வாரம் (28.07.2018) திருகோணமலையில் ரெலோவின் உயர் மட்டக்குழுவினருக்கும் தமிழரசுக் கட்சியினருக்குமிடையில் சந்திப்பு நிகழ்ந்தது. ரெலோ தரப்பிலிருந்து கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், செயலாளர் சிறிகாந்தா, மூத்த உறுப்பினர் சிவாஜிலிங்கம், பிரசன்னா, நித்தியானந்தம் ஆகியோர் பங்கேற்றனர். தமிழரசுக் கட்சியின் தரப்பிலிருந்து கட்சியின் மூத்த உறுப்பினர் சம்மந்தன், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதில் ரெலோவுக்கு உரித்தான தேசியப்பட்டியலைத் தமிழரசுக் கட்சி வைத்திருக்கிறது எனவும் அதை ரெலோவுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையையும் ரெலோ விடுத்துள்ளது.

அத்துடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கான யாப்பை உருவாக்கி, கட்சியைப் பதிவு செய்ய வேணும். கூட்டமைப்பை விட்டு வெளியே சென்ற ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஸ் அணி) உட்பட, வெளியே உள்ள ஏனைய சக்திகளையும் உள்ளீர்க்க வேணும் என்று ரெலோ கூறியுள்ளது. இவற்றை எல்லாம் செய்வதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை விரைவில் கூட்ட வேண்டும் என்றும் கேட்டிருக்கிறது ரெலோ.

இதன்போது ரெலோ இன்னொரு விடயத்தையும் வலியுறுத்தியுள்ளது. இதையெல்லாம் உரிய காலத்தில் செய்யாமல் வழமையைப்போல, தேர்தல் நெருங்கி வரும் சந்தர்ப்பத்தில் செய்ய முற்பட்டால் அது தேவையில்லாத பிரச்சினைகளையும் மனக்கசப்பையுமே உண்டாக்கும் என.

இதைப்பற்றி தாம் ஆராய்ந்து எதிர்வரும் 10 ஆம் திகதி தெரிவிப்பதாக சம்பந்தனும் மாவை சேனாதிராஜாவும் பதிலளித்திருக்கிறார்கள். ஆனால், சம்பந்தனுக்கு இதைப் பற்றி நன்றாகத் தெரியும். “இதெல்லாம் மாகாணசபையில் கூடுதல் ஆசனங்களைக் கேட்பதற்கான விளையாட்டே தவிர, மெய்யாகவே சரியான முதலமைச்சர் ஒருவரைக் கண்டு பிடிப்பதற்கான சங்கதி அல்ல” என. அதனால் இதைப் பற்றிப் பொருட்படுத்தாமல் அவர் தன் பாட்டுக்கு இருப்பார். 10ம் திகதிய கூட்டத்தில் எந்த உறுதியான முடிவுகளையும் அறிவிக்காமல், அப்படி அறிவித்துச் சலசலப்புகளை உண்டாக்காமல் கூட்டத்தில் பங்கேற்பார். எல்லோரும் தங்கள் கருத்துகளை முன்வைக்கவும் விவாதிக்கவும் இடமளித்து விட்டு, இங்கே பேசப்பட்ட விடயங்களைப் பற்றி ஆராய்ந்துதான் முடிவெடுக்க வேணும் என்று சொல்லி விட்டு மெல்ல வெளியேறிப் போய் விடுவார். இப்பொழுது ரெலோ அறிவித்திருக்கும் இந்த விடயங்களையும் விட, நெருக்கடிகளையும்

**கருணாகரன்**

விட பலமான நெருக்கடிகளை மன்னாரிலும் வவுனியாவிலும் கூட்டமைப்பின் இளைஞர் அணித்தலைவர் சிவகரன் உண்டாக்கினர். சுரேஸ் பிரேமச்சந்திரனும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் உண்டாக்கியதுண்டு. அதையெல்லாம் நைஸாகக் கடந்து சென்றார் சம்மந்தன். ஒரு சிறு அளவுகூட அவர் சேதாரப்படவில்லை. ஆகவே இப்பொழுதும் அத்தகைய வழிமுறையையே – உத்தியையே கடைப்பிடிப்பார் என்று துணிந்து கூறலாம்.

இதற்கு இந்தச் சந்திப்பிலேயே இரண்டு சங்கதிகள் உதாரணமாக உள்ளன. ஒன்று, “ஈ.பி.ஆர்.எல்.எவ்வை நாங்கள் வெளியே போகச்சொல்லவில்லையே. அவர்களாகத்தானே போனார்கள். ஆகவே விரும்பினால் அவர்கள் வந்து மீளச் சேர்ந்து கொள்ளலாம்” என்று மிகச் சாதாரணமாகப் பதிலளித்திருக்கிறார் சம்பந்தன். இரண்டாவது, கூட்டமைப்புக்கான யாப்பொன்று தமிழரசுக் கட்சியினால் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளது. அதைப் பயன்படுத்தலாம் என்றிருக்கிறார் மாவை. உண்மையில் கூட்டமைப்பு ஒன்றுக்கான யாப்பை உருவாக்கும்போது ஏனைய தரப்பினரின் பங்களிப்புகள் உள்வாங்கப்பட்டிருக்க வேண்டும். அப்படிச் செய்யப்படவில்லை. ஆகவே தமிழரசுக் கட்சி தனக்கு ஏற்ற விதத்தில் யாப்பை உருவாக்கியிருக்கிறது. இதை விரும்பினால் ஏற்றுக்கொள்ளுங்கள். அல்லது விடுங்கள் என்ற மாதிரியான கருத்தே இதில் தொனிக்கிறது.

ஆனாலும் இதை ஏற்க முடியாது என்றிருக்கிறது ரெலோ. இருந்தாலும் சம்பந்தன் தரப்பு இதற்கு உடனடியாக மறுத்தான் கொடுக்கப்போவதில்லை.

பதிலாக தேர்தல் நெருங்கி வரும் நாட்களில் தமிழரசுக் கட்சியின் கீழ்மட்ட உறுப்பினர்களை ரெலோவுக்கு நெருக்கடி கொடுக்குமாறு இரகசியமாக – அதேவேளை நுட்பமாகத் தூண்டுவார்கள். தன்னுடைய நிகழ்ச்சி நிரலை மாற்றவே மாட்டார் சம்பந்தன். இறுதிக்கட்டத்தில் சில மெல்லிய அசைவுகளை மட்டும் உண்டாக்குவார். “வாருங்கள். எதைப் பற்றியோ கதைப்பதற்கு முயற்சிக்கிறீர்கள் போலுள்ளது” என்ற மாதிரி.

அதுவும் ரெலோ நன்றாக நெருக்கடிப்பட்ட பிறகுதான். இவ்வாறு செய்வதன் மூலமாக ரெலோவின் நிலைமையைப் பார்த்து ஏனைய பங்காளியாக இருக்கும் புளொட் வாயே திறக்கக் கூடாது என்கிற மாதிரியாக.

இறுதியில் சம்பந்தன் தீர்மானிப்பதன்படியே காரியங்கள் நடக்கும். இதொன்றும் புதிய விசயமல்ல. இதற்குக் காரணமே ரெலோ போன்றவற்றின் பலவீனம்தான்.

இந்தப் பலவீனத்தை வெளிப்படுத்திக் காட்டிச் சம்பந்தனைப் பலப்படுத்தியது சுரேஸ் பிரேமச்சந்திரனும் அவருடைய ஈ.பி.ஆர்.எல். எவ்வுமே. கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்பு சுரேஸ் பிரேமச்சந்திரனும் ஈ.பி.ஆர்.எல். எவ்வும் சம்பந்தனுக்கும் தமிழரசுக்கட்சிக்கும் கொடுத்த நெருக்கடிகள் கொஞ்சமல்ல. சாதாரணமானவையும் அல்ல.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்ய வேணும் என்பதிலிருந்து கூட்டமைப்பிற்குள் ஜனநாயகத்தைப் பேண வேண்டும், தீர்மானங்களைக் கூடி ஆராய்ந்து முடிவெடுக்க வேணும் என்பதுவரையில் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் கோரிக்கைகள் அத்தனையும் நியாயமானவையாக இருந்தன.

ஒரு கட்டத்தில் கூட்டமைப்பில் இருந்து கொண்டே அதற்கு மேலும் நெருக்கடியைக் கொடுக்கும் விதமாக தமிழ் மக்கள் பேரவையில் இணைந்து செயற்பட்டார்

தொடர்ச்சி... (பக்கம் -23 )

# இலங்கை மீண்டும் இராணுவ மயமாகிறது! ஆனால் இது உள்நாட்டுப் போருக்கான ஏற்பாடல்ல!

ஏனைய நாடுகள் இனாமாக கொடுத்தாலும்கூட பழைய போர்க்கப்பல்களை வாங்குவதில் இலங்கை அவதானமாக இருக்க வேண்டும் என்று இலங்கையின் முன்னாள் கடற்படைத்தளபதி, அட்மிரல். ஜயநாத் கொலம்பகே எச்சரித்துள்ளார்.

சீனா ஒருபுறமும், மேற்கு நாடுகளும் இந்தியாவும் மறுபுறமும் இருந்து நடத்தும் பூகோள ரீதியிலான போட்டியில், இந்து சமுத்திரத்தை தம்வசம் வைத்திருக்க ஏதுவாக, இலங்கையையும் தம்பக்கம் ஈர்க்கும் வகையில், இரு தரப்பில் உள்ளவர்களும் இலங்கைக்கு ஆயுதம், பயிற்சி மற்றும் போர்க்கப்பல்களை வழங்கி வருகிறார்கள்.

இலங்கையின் முன்னாள் கடற்படைத் தளபதியும், "சமச்சீரற்ற கடற்போர்" என்ற நூலை எழுதியவருமான ஜயநாத் கொலம்பகேயின் கருத்துப்படி, யுத்த நன்கொடைகளை பெறும்போதுகூட இலங்கைக்கு எச்சரிக்கை அவசியம் என்கிறார் அவர்.

நன்கொடையாக வரும் அல்லது வாங்கப்படும் பழைய கடற்கலங்கள், தமது சொந்த நாட்டுக் கடற்படையில் முழுமையான சேவையை முடித்துவிட்டுத்தான் இலங்கைக்கு வரும். அப்படியான கப்பல்களுக்கு பெரும் எடுப்பிலான பழுதுபார்த்தல், மற்றும் மேம்படுத்தல் தேவைப்படும். அவற்றுக்காக அவை நீண்ட நாட்கள் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்படவேண்டி வரும். இது அவற்றுக்கான செலவை அதீதமாக அதிகரிக்கச் செய்துவிடும். அந்தக் கப்பல்

**இனாமாக கிடைத்தாலும் பழைய போர்க் கப்பல்களை பெறுவதில் இலங்கை அவதானமாக இருக்கவேண்டும்**

இலவசமாக வழங்கப்பட்டிருந்தாலும் அதற்கான மேம்பாட்டுச் செலவு சில சமயங்களில் மிகவும் அதிகமாகிவிடும் என்பது கொலம்பகேயின் கருத்து.

ஆகவே இப்படியான கப்பல்களை பெறுவதற்கான செலவை இலங்கை மிகவும் அவதானமாக கணிப்பதுடன், அவை இலவசமாக கிடைக்கிறது என்பதற்காக மாத்திரம் அவற்றைப் பெற்றுக்கொள்ள முன்வரக்கூடாது என்று அவர் எச்சரிக்கிறார்.

இதுவரை காலத்தில் இந்தியாதான் இலங்கையுடன் இப்படியான நல்ல ஒப்பந்தங்களை செய்துள்ளபோதிலும், இந்தியாவால் வழங்கப்பட்ட சில பழைய கப்பல்கள் பெரும் செலவை இலங்கைக்கு ஏற்படுத்திவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஒரு கப்பலை கொள்வனவு செய்யும்போது அது செயற்படும் முறைமை குறித்தும் அதிக கவனம் தேவைப்படுவதாகவும் முன்னாள் கடற்படைத் தளபதி கூறுகிறார். ஏற்கனவே இருக்கும் கப்பல்களுடன் சேர்ந்து ஒருங்கிணைந்து செயற்படுவதற்கு ஏதுவானதாக அவற்றின் பொறிமுறையும், அவற்றை இயக்கும் முறையும் அமைந்திருக்கிறதா என்பதையும் ஒப்பு நோக்க வேண்டும் என்றும் அவர் கூறுகிறார்.

இலவசங்களின் பூகோள அரசியல்

விடுதலைப் புலிகளுக்கு எதிரான 30 வருடப் போர் அவர்களது ஆயுதங்களை முற்றாக நிர்மூலமாக்கி, முடிவுக்கு வந்துள்ள இன்றைய சூழ்நிலையில் இலங்கைக்கு அவசரமான பெரிய ஆயுதத்தேவை எதுவும் கிடையாது.

ஆனால், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் எழுந்துள்ள போட்டி காரணமான சர்வதேச மற்றும் பிராந்திய வல்லரசுகள் இலங்கைக்கு அதிக ஆயுதப் பயிற்சியையும், குறிப்பாக போர்க்கப்பல்களையும் அதிக அளவில் தரமுயலுகின்றன.

இந்த இந்துசமுத்திரப் போட்டியில் இந்தியாவும் மேற்கு நாடுகளும் ஒரு புறமும், மறுபுறம் சீனாவும் பெருத்த கடல்வலயப்

பி. கே. பாலச்சந்திரன்

போட்டியில் இறங்கியுள்ளன. "சமச்சீரற்ற கடற்போர்" என்னும் புத்தகத்தை எழுதியுள்ள கொலம்பகே இதனை வலியுறுத்துகிறார்.

விடுதலைப்புலிகளுடனான உள்நாட்டுப் போர்க்காலத்தில், தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் சரி, ஆயுதத்தீர்வு கிடையாது என்று கூறி, இலங்கை





அரசுக்கு ஆயுதங்களை தரத் தயங்கிய மேற்குநாடுகள் சில, இப்போது பூகோள அரசியலை முன்னிட்டு ஆயுதங்களை தர முன்வருகின்றன. அதுவும் இலவசமாக. தமது பூகோள அரசியல் நலனுக்காக அவை இதனைச் செய்கின்றன.

சீனா இலங்கையில் நுழைவது குறித்து மேற்கு நாடுகளும், இந்தியாவும், ஜப்பானும் கவலையில் உள்ளன. இந்து சமுத்திரத்தில் தனது நலனை முன்னிட்டு, அம்பாந்தோட்டை துறைமுகத்தை இராணுவத் தேவைகளுக்காக சீனா பயன்படுத்தாது என்பதை மேற்குலகும் இந்தியாவும் நம்பத் தயாராக இல்லை. தென்சீனக் கடலில் நடந்துகொண்டது போல இலங்கையை சீனா துஸ்பிரயோகம் செய்யும் என்றே ஜப்பான் வலுவாக நம்புகிறது.

மேற்கையும் கிழக்கையும் இணைக்கும் கேந்திர முக்கியத்துவம் மிக்க பாதையில் இலங்கை இருப்பதால், அதனை ஏதாவது ஒரு வழியில் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்று வல்லரசுகள் நினைக்கின்றன. பொதுமக்களுக்கான பொருட்களுடன் சேர்ந்து பெற்றோல் போன்ற முக்கிய பொருட்களையும் கொண்டு செல்ல இதுதான் முக்கிய வழி என்று அவை கருதுகின்றன.

"காலி பேச்சுவார்த்தை" என்ற சர்வதேச கடல்சார் மாநாட்டில் பேசிய, அமெரிக்காவின் பசுபிக் பிராந்திய முன்னாள் தளபதியான அட்மிரல் ஹரி பி.ஹரிஸ், இலங்கை மூன்று காரணங்களுக்காக மிகவும் முக்கியமானது என்கிறார். அதன் அமைவிடமே அந்த மூன்று காரணமும் என்று அவர் கூறியிருந்தார். அதனை அட்மிரல் கொலம்பகே நினைவுகூருகிறார்.

2013இல் சீனாவை ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளுடன் இணைக்கும் "பட்டுப் பாதைத்திட்டத்தை" சீனா ஆரம்பிக்கும் வரையில், ஆசியா எங்கிலும் அது துறைமுகங்களை அமைக்கும் வரையிலும் இலங்கை குறித்து ஏனைய வல்லரசுகள் பாராமுகமாகத்தான் இருந்தன. அதன் கேந்திர முக்கியத்துவத்தை கவனிக்காமல்தான் அவை இருந்தன.

இந்த பட்டுப் பாதைத்திட்டத்தின் ஒரு அங்கமாக அம்பாந்தோட்டையில் ஒரு துறைமுகத்தை சீனா அமைக்கிறது என்று இலங்கை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்த போதுதான் அந்த நாடுகள் விழித்துக்கொண்டன. மேற்கு, இந்தியா, ஜப்பான், மற்றும் அவுஸ்திரேலியா அதிர்ந்து போயின.

முதலில் சீனாவைக் கைவிடச் சொல்லி, ராஜபக்ஷவை மேற்கு மிரட்டிப் பார்க்க முனைந்தது. போர்க்கால மனித உரிமைகள் விவகாரத்தில் இலங்கையை ஓரங்கட்ட அவை முனைந்தன. ஐநா மனித உரிமைகள் கவுன்ஸிலில் கடுமையான தீர்மானம் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்டது. 2015 ஆட்சிமாற்றத்தின் பின்னர் மேற்கு தனது கடுமையை தணித்தது. இந்து சமுத்திர விவகாரத்தில் இலங்கையை சீனாவுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்க மேற்கு அழுத்தம் கொடுத்தது.

அதனை அடுத்து, இந்த அனைத்து நாடுகளும் இலங்கைக்கு தமது போர்த்தளபாட, பயிற்சி உதவிகளை வெகுவாக அதிகரித்தன.

இலங்கை மீண்டும் இராணுவமயப்படுத்தலுக்கான ஒரு நிலையை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. இலங்கைக்கு வந்துபோகும் போர்க்கப்பல்களின் எண்ணிக்கை அதற்கு ஒரு அடையாளம். 2009 முதல் 2017 வரை 398 போர்க்கப்பல்கள் இலங்கை வந்து சென்றுள்ளன. அதில் இந்தியா 82, பாகிஸ்தான் 24, ஜப்பான் 67, சீனா 31, அமெரிக்கா 18, ரஷ்யா 26 என்கிறார் கொலம்பகே.

இந்தியா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, ஜப்பான், சீனா ஆகிய நாடுகள் போட்டி போட்டு போர்க்கப்பல்களையும், பயிற்சிகளையும் வழங்கி வருகின்றன. சீன ஊக்குவிப்புடன் பாகிஸ்தானும் இலங்கைக்கு இராணுவ உதவிகளை செய்து வருகின்றது.



# இம்ரான்கான் அரசியல் வெற்றி : ஒரு கிரிக்கட் பார்வை

## அவரது கிரிக்கட் துடுப்பு அடித்து ஆடுமா?



பழைய ஜோக் ஒன்று. பாகிஸ்தான் அமைச்சர் ஒருவருக்கு எமது அமைச்சரொருவர் தனது மாளிகையில் விருந்தளிக்கிறார். விருந்துக்கு வந்த பாக் அமைச்சர் மாளிகையைக் கண்டு வியக்கிறார். விருந்து முடிய நம்ம மந்திரிதுமாவிடம், ”எப்படி இவ்வளவு பெரிய மாளிகையை கட்டினீங்க” என்று கேட்க, தூரத்தில் தெரிந்த அணைக்கட்டை காட்டி அதோ தெரிகிறதே ”அதில் கிடைத்த கமிஷன்தான்” என்று பெருமிதத்துடன் மந்திரிதுமா கூறினார்.

இப்போது நம்ம மந்திரிதுமா பாகிஸ்தான் அமைச்சரின் அழைப்பை ஏற்று அந்த நாட்டுக்குப் போகிறார்.
அங்கு நம்மாளுக்கு பதில் விருந்து தரப்படுகிறது. பாகிஸ்தான் அமைச்சரின் மாளிகை நம்ம மந்திரிதுமாவின் மாளிகையைவிட பல மடங்கு பெரியது. சகல நவீன வசதிகளுடன் கூடியது.
”இப்படியொரு மாளிகையா. கமிஷன் வாங்கி இப்படி கட்டுவது சாத்தியமா?” மந்திரிதுமாவின் மனது விடை வேண்டி அலைபாய்கிறது. அதை பாகிஸ்தான் மந்திரியிடம் கேட்டு விட்டார். விருந்து முடிய மந்திரிதுமாவை மொட்டை மாடிக்கு அழைத்துச் சென்றார் பாகிஸ்தான் அமைச்சர்.
”அதோ தெரிகிறதே விமான நிலையம்” என்று தூரத்தில் சுட்டிக் காட்டுகிறார் பாகிஸ்தான் அமைச்சர்.
”எங்கே” இது நம்ம மந்திரிதுமா.
”அதோ.. அதோ அங்கே ”.
எதையுமே காணாத நம்ம அமைச்சர்,
”எதுவுமே இல்லையே”,
”உங்களுக்கு எதுவுமே தெரியவில்லையா?”
”இல்லையே.. ஒன்றுமில்லை?”
”ஆ.. அதில் உழைத்த பணம்தான் இந்த அரண்மனை” என்கிறார் பாகிஸ்தான் அமைச்சர்.

பாகிஸ்தான் அரசியல்வாதிகளின் ஊழலை சுட்டிக்காட்ட புனையப்பட்ட கதைதான் மேலே சொன்னது. (இன்று நம்ம அரசியல்வாதிகள் அதையும் மிஞ்சிவிட்டது வேறு கதை)
இப்படியான ஒரு நாட்டைத்தான் இம்ரான்கான் பொறுப்பேற்கிறார்.

அவரது வெற்றி உரையில் ஊழல் முறைமைக்கு முர்தாபாத் சொல்கிறார். பகிரங்க மற்றும் பொறுப்புகூறும் தன்மையுடையதாக தனது ஆட்சி இருக்குமென்கிறார். இந்த தன்மைகள் தன்னில் இருந்து தொடங்கி தனது அமைச்சர்கள் வழியாக தொடரும் என்கிறார்.

நாட்டு மக்களின் வரிப்பணத்தை தமது ஆடம்பர செலவுகளுக்காக அரசியல்வாதிகள் பயன்படுத்த பிரசைகளோ வறுமையில், பட்டினியில் உழன்றுகொண்டு இருக்கின்றனர். 25 லட்சம் சிறுவர்கள் கல்வி இல்லாமலும் லட்சக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பு இல்லாமலும் இருக்கின்றனர். இந்த நிலையில் இருந்து நாட்டை மீட்டு சுபீட்சப் பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டும். மேற்குலகைப்போல் நீதியின் முன் சகலரும் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்றும் தமது உரையில் கூறினார்.

பிரதமர் அலுவலகம்:

பிரதமர் அலுவலகம் பிரமாண்டமானது. இப்படியொரு வாசஸ்தலத்தில் வசித்து வரிப்பணத்தை துஷ்பிரயோகம் பண்ணப் போவதில்லை. இந்த வாசஸ்தலமும் ஆடம்பரமான கவர்னர் மாளிகைகளும் கல்விக்கூடங்களாக்கப்படும். சில ஹோட்டல்களாக்கப்படும். இப்படி இம்ரான் பேசும் போது கொஞ்சம் நம்ம மைத்திரியின் குரல்போல் கேட்டது. இப்படித்தான் ஊழல் ஒழிப்பு, மக்கள் நலன் என்றெல்லாம் கூவிய மைத்திரி ”மம தன்ன நெஹே” என்று கூறும் தொத்த பபா (பச்சைக் குழந்தை) ஆகிவிட்டார்.

தனி அறுதிப் பெரும்பான்மை கிட்டாத இம்ரான் முன்னுள்ள கேள்வி யாருடன் கூட்டுச் சேருவது? இருப்பதெல்லாம் ஊழல் கட்சிகளும் ஊழல் அரசியல்வாதிகளும். இவர்களுடன் கூட்டு சேர்ந்தால் ஊழலை ஒழிக்கும் தனது உன்னதக் கனவை அவரால் நனவாக்க முடியுமா?
கிட்டதட்ட இலங்கை அரசியலை ஒத்ததாகவே பாகிஸ்தான் நிலவரமும் இருக்கிறது.

ஆனால், மைத்திரி போல் இம்ரான்கான் நாட்டுப்புற புடலங்காயல்ல. உறுதியாக நிற்கும் விக்கட் கம்பு. ஊழல் முதலைகள் போடும் கூக்லி, தலிபான்கள் போடும் பவுன்சர், இந்தியாவின் யோக்கர் இவற்றை எல்லாம் அரசியல் களத்தில் எப்படி அடித்தாடப் போகிறார்?

திடீரென கையை தலைமேல் உயர்த்தி அவுட் கொடுக்கக் காத்திருக்கும் இராணுவ அம்பயர்களை எப்படி சமாளிக்கப் போகிறார். இராணுவம் இம்ரானை ஆதரிப்பதாகவும் அவரது வெற்றியில்கூட அதன் பங்களிப்பு இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இம்ரானுக்கு எதிரான அரசியல்வாதிகளை இராணுவம் அச்சுறுத்தி, அழுத்தங்களைப் பிரயோகித்து, ஓரங்கட்டி, இம்ரானின் வெற்றி வாய்ப்பை பிரகாசிக்கச் செய்ததாக விமர்சகர்கள் கூறுகின்றனர். ஆனால் இராணுவத்துடனான தேன் நிலவு எவ்வளவு காலத்திற்கு தொடரும்?

**நஸீம் ஹிக்மத்**

அவரது கட்சி சின்னமான கிரிக்கெட் துடுப்பு ஊழலையும் சமூக ஏற்றத் தாழ்வுகளையும் அநீதியையும் அடித்து ஆடி துவம்சம் செய்யும் குறியீடாக இருக்கிறது.

சிறந்த ஆட்சி எனும் இந்தத் துடுப்பால் வறுமை, ஊழல் என்பவற்றை தகர்த்து எறிந்து பொருளாதார சுபீட்ஸம், மேம்பட்ட வாழ்க்கைத் தரம், உயர்ந்த கல்வித் தரம் ஆகிய வெற்றிக் கிண்ணங்களை பார்வையாளர்களாகவுள்ள நாட்டு மக்களுக்கு எவ்வாறு பெற்றுக்கொடுக்கப் போகிறார் என்பதிலேயே அவரது வெற்றி தங்கியுள்ளது.

அந்த வெற்றியானது அவர் உலகக் கிண்ணத்தை வென்று கொடுத்ததைவிட அதிகமாகப் பேசப்படும்.

தொடர்ச்சி...

## மறைந்த மட்டக்களப்பு அருட்தந்தையர்களுக்கான செப அஞ்சலியும், ஒன்றுகூடலும்.

இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற திருகோணமலை-மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் அதிவந்.ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, அரசாங்க அதிபர் திரு. மாணிக்கம் உதயகுமார், மாநகர சபை முதல்வர் கௌரவ தியாகராஜா சரவணன், மாநகரசபை ஆணையாளர் திரு.என். மணிவண்ணன் ஆகியோர் விசேட அதிதிகளாகவும், சிறப்பு அதிதியாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பொன் செல்வராஜா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தலைமையுரை வழங்கிய திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அவர்கள் வரலாற்றினைப் பார்க்கும்போது காலத்திற்குக்காலம் பல அருட்தந்தையர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்கள் வரிசையில் எமது அருட்தந்தையர்களும் கொல்லப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர். அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோ அவர்களது வரலாற்றினை அறியும்போது மக்கள் படும் இன்னல்களை அறிந்து அவர்களுக்காக தங்களை அர்ப்பணித்து நீதிக்காக குரல் கொடுத்தவர், சிறையிலுள்ளோரின் விடுதலைக்காக பாடுபட்டு அதிகமானோரை விடுவித்தவர். “நாங்கள் செய்யவில்லையென்றால், யார் செய்வது“ என்ற கொள்கையுடன் செயற்பட்டவர். ஏனைய இரு அருட்தந்தையர்களும் மக்களுக்காக தங்களை அர்ப்பணித்ததால் காணாமல் ஆக்கப்பட்டவர்கள். மக்களுக்காக, நீதிக்காக குரல் கொடுத்த வேதசாட்சிகள். இவர்களது மரணம் மறக்கமுடியாது. இவர்கள் தொடர்ச்சியாக நினைவுகூரப்படவேண்டுமென கேட்டுக்கொண்டார். தொடர்ந்து கலந்துகொண்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், ஓய்வுபெற்ற ஆயர் அவர்களும் இவர்கள் மக்கள் நலனுக்காக இனமத வேறுபாடின்றி செயற்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர். திருப்பலியிலும், ஒன்றுகூடல் நிகழ்விலும் மறைமாவட்ட அருட்தந்தையர்கள், துறவற சபை அருட்சகோதர, சகோதரிகள், குடும்ப உறவுகள், இறைமக்கள் அநேகர் கலந்துகொண்டனர்.

-ஜே.எச்.இரத்தினராஜா, மட்டக்களப்பு

# நடந்தாய் வாழி களனி கங்கை ..... அங்கம் 12

## தலைமுறை தலைமுறையாக இசைவேள்வி நடத்திவரும் கலைக்குடும்பம்

களனி கங்கை தீரத்தில் கொகிலவத்தை, மட்டக்குளி, கிராண்ட்பாஸ், பிறின்ஸ் ஒ்.ப் வேல்ஸ் வீதி, ஆமர்வீதி, புளூமெண்டால் வீதி என்பன எழுத்தாளர்கள், இசைக்கலைஞர்கள், பாடகர்கள், பத்திரிகையாளர்கள், ஓவியர்கள், ஒளிப்படக்கலைஞர்கள் வாழ்ந்த, பணியாற்றிய, நடமாடித்திரிந்த பிரதேசங்களாகும்.

இந்த இடங்களில்தான் தினக்குரல், வீரகேசரி, திவயின, The Island, சித்திர மித்ர முதலான பத்திரிகைகள் வெளியாகின்றன. கொகிலவத்தையில் 1983 இற்கு முன்னர் மக்கள் விடுதலை முன்னணியின் நியமுவா, ரத்து பலய, செஞ்சக்தி, Red Power முதலான பத்திரிகைகள் அச்சிடப்பட்டு வெளிவந்தன.

வீரகேசரிக்காக ஜா- எல , ஏக்கலையில் பல ஏக்கர் விஸ்தீரணத்தில் நிலம் வாங்கப்பட்டிருந்தாலும், தொடர்ந்தும் கிராண்ட்பாஸ் வீதி வீரகேசரியின் பெயரை நிலைத்துவைத்திருக்கிறது.

ஆமர்வீதியில் அமைந்திருந்த கே. ஜி. இண்டஸ்ரீஸ் ஸ்தாபனத்தின் உரிமையாளர் கே. குணரத்தினம், இங்கு இயங்கிய ஓவியக்கூடத்தில் இலங்கை தியேட்டர்களில் புதிதாக வெளியாகும் திரைப்படங்களுக்கான பெரிய பெணர்கள் கட் அவுட்டுகள் வரையப்படும். அதற்கென பயிற்சி பெற்ற ஓவியர்கள் இங்கு பணியாற்றினார்கள். நடிகர், நடிகையரின் உருவங்களை தத்ரூபமாக வரையும் தேர்ச்சி பெற்ற ஓவியர்கள் குறிப்பிட்ட கலைக்கூடத்திலிருந்து வரைந்து அனுப்பும் பெரிய வண்ணச்சுவரொட்டிகளும் பெணர்களும் கட் அவுட்டுகளும் ரசிகர்களின் கண்களுக்கு விருந்து படைத்தன.



Kadawunuporonduwa First Sinhal Film

பிரின்ஸ் ஒ்.ப் வேல்ஸ் வீதியிலும் ஒரு பிரபல முன்னணி இசைக்கலைஞர் வாழ்ந்தார். அவர்தான் ஆர். முத்துசாமி. பல சிங்கள, தமிழ்ப்படங்களுக்கு இசையமைத்தவர். அவரது மகன் மோகனும் நாடறிந்த இசைக்கலைஞர். அவரது இசைக்குழு



இசையமைப்பாளர்
ஆர்.முத்துசாமி

அப்சராஸ் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் புகழ்பெற்றது.

ராமையா ஆசாரி முத்துசாமி என்ற இயற்பெயர் கொண்டிருந்த இசையமைப்பாளர் ஆர். முத்துசாமி, தமிழ்நாடு நாகர்கோவிலில் 1926 ஆம் ஆண்டு, இசைக்கலைஞர் ராமையா பாகவதருக்குப் பிறந்து, தன்னையும் இசைக்கலைஞராகவே வளர்த்துக்கொண்டதுடன் நில்லாமல் தனது மகன் மோகனையும் இசைக்கலைஞராக்கியவர்.

அதனால் தலைமுறைகள் கடந்தும் அவரது குடும்பத்தில் இசைகோலோச்சி வாழ்ந்துகொண்டிருக்கிறது.

இலங்கையில் சிங்கள மக்கள் பெரும்பான்மையினராக இருந்த போதிலும் சிங்கள சினிமா இங்கு அறிமுகமானது சுதந்திரத்திற்குப் பின்னர்தான். முதலாவது சிங்களப்படம், கடவுனு பொறந்துவ(Broken Promise) .

இந்தத்திரைப்படம் 1947 ஆம் ஆண்டு இலங்கை திரையரங்குகளுக்கு வந்தது. அதற்கு இசையமைத்தவர் ஒரு இந்தியத் தமிழரான ஆர். நாராயண அய்யர் எனச்சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள். அவருடைய உதவியாளராக சேர்ந்துகொண்டு குறிப்பிட்ட திரைப்படத்தில் பணியாற்றியவர்தான் ஆர். முத்துசாமி.

அந்தத்திரைப்படத்தை தயாரித்தவரும் எஸ்.எம். நாயகம் என்ற தமிழர்தான். அந்தப்படத்தின் இசையமைப்பு வேலைகள் சென்னையில்தான் நடந்திருக்கின்றன.

தனது வாழ்நாளையே இலங்கை சினிமா துறையிலும் இலங்கை வானொலி கலையகத்திலும் செலவிட்டிருக்கும் ஆர். முத்துசாமி, சிறந்த பாடகருமாவார்.

கந்தானையில் முன்னர் அமைந்திருந்த எஸ்.பி. முத்தையா என்ற தமிழ் அன்பருக்குச் சொந்தமான எஸ்.பி.எம். சவுண்ட் ஸ்ரூடியோவில் இயங்கிய இசைத்துறைக்கான கலையகத்தின் பொறுப்பாளராகவும் பணியாற்றியவர்தான் ஆர். முத்துசாமி.

1947 இல் வெளியான கடவுனு பொறந்துவ திரைப்படத்தில் உதவி இசையமைப்பாளராக பணிபுரிந்த அவர், 1953 ஆம் ஆண்டு சினிமாஸ் குணரத்தினம் தயாரித்த பிரேம தரங்கய திரைப்படத்தின் மூலம் முதல் முதலாக இசையமைப்பாளராக வெளியுலகிற்கு பரவலாக அறியப்பட்டார்.

அண்மையில் மறைந்த சிங்கள திரையுலக மேதை லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் சந்தேஷிய திரைப்படத்தில் ஒலித்த "போர்த்துக்கீஸிகாரயா... " என்ற புகழ்பெற்ற பாடலுக்கு இசையமைத்தவரும் ஆர். முத்துசாமிதான். அந்தத்திரைப்படத்தில் அவரது சிறந்த இசைமைப்பிற்காக, தென்னிந்திய ஊடகவியலாளர் சங்கம் விருது வழங்கி பாராட்டி கௌரவித்திருக்கிறது.

கட்டிடக்கலைஞர் வி.எஸ்.துரைராஜாவின் தயாரிப்பில் வெளியான குத்துவிளக்கு திரைப்படத்திற்கும் அவர் இசையமைத்துள்ளார்.

இந்தப்படத்தில் பாடகர் எம். ஏ. குலசீலநாதன் பாடும் ஈழத்து இரத்தினம் இயற்றிய " ஈழத்திருநாடே என்னருமை தாயகமே இருகரம் கூப்புகின்றேன் வணக்கமம்மா..." என்ற மறக்கமுடியாத பாடலுக்கும் ஆர். முத்துசாமி இசையமைத்தார்.

சில சிங்களப்படங்களில் இடம்பெற்ற பாடல்களுக்கும் பின்னணிக்குரல் கொடுத்திருப்பவர். இலங்கை வானொலியில் ஏறக்குறைய 25 வருடங்கள் பணியாற்றியவர்.

அவர் தொடக்கத்தில், இலங்கையில் ஒரு இந்தியப்பிரஜையாகவே வாழ்ந்தவர். எனினும் அவர் இலங்கை சிங்கள சினிமாவுக்கு இசைத்துறையில் வழங்கிய மகத்தான பங்களிப்பிற்காக அன்னாரை பாராட்டி கௌரவிக்கும் முகமாக 1956 இல் அன்றைய பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவல, அவருக்கு இலங்கைக்கான குடியுரிமைச்சான்றிதழை வழங்கினார்.

இலங்கை அரசமட்டத்திலும் பல விருதுகளை பெற்றுள்ள இசைமைப்பாளர் ஆர். முத்துசாமி அவர்கள், 1988 ஆம் ஆண்டு மறைந்தார்.

இன்று அவரது செல்வப்புதல்வன் மோகன் தனது இசையுலக நண்பர் ரங்கனுடன் இணைந்து அப்சராஸ் இசைக்குழுவின் மூலம் இசை நிகழ்ச்சிகளை நடத்திவருகிறார்.

இந்தப்பதிவிலிருந்து ஒரு உண்மையையும் அரங்கம் வாசகர்கள் தெரிந்துகொள்ளவேண்டும்.

இலங்கையில் சிங்களப்படங்களை தயாரித்த முன்னோடிகளின் வரிசையிலும் சிங்கள சினிமாவில் தொடக்கத்தில் பங்கேற்றவர்களில் வரிசையிலும் தமிழர்கள்தான் இடம்பெற்றுள்ளனர்.

**ரஸஞானி**

எஸ்.எம். நாயகம், சினிமாஸ் குணரத்தினம், சிலோன் தியேட்டர்ஸ் செல்லமுத்து, எஸ். பி. எம். சவுண்ட் ஸ்ரூடியோ எஸ்.பி. முத்தையா, ஒளிப்பதிவாளர் வாமதேவன், இயக்குநர்கள் வெங்கட், லெனின் மொராயஸ், ஜோ. தேவானந்த், ஒலிப்பதிவாளர் பாலசிங்கம் உட்பட பல தமிழர்கள் சிங்கள திரைத்துறையின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பாடுபட்டுள்ளனர்.

ஆனால், இவர்கள் சம்பந்தப்பட்ட திரைப்படங்கள் வெளியான தலைநகர் சினிமா திரையரங்குகள் பல, 1983 வன்செயலில் கயவர்களினால் தீயிட்டு கொளுத்தப்பட்டு அழிக்கப்பட்டன என்ற துன்பியலையும் நாம் மறந்துவிட முடியாது.

அவர்களின் படங்களில் ஒலித்த சிங்களப்பாடல்கள் இன்றும் இலங்கை வானொலியிலும் தொலைக்காட்சி சேவைகளிலும் ஒலிபரப்பாகிக்கொண்டுதானிருக்கின்றன.

கே.ஜி. இன்டஸ் ரீஸ், மற்றும் சினிமாஸ் லிமிடெட், கே.ஜி. பஸ்சேவை முதலான நிறுவனங்களையும் பல திரையரங்குகளையும் நடத்திவந்திருக்கும் கே. குணரத்தினம் அவர்களிடத்தில் ஆயிரக்கணக்கான மூவின மக்களும் பணியாற்றியிருக்கின்றனர்.

அவரது சொத்துக்கள், நிறுவனங்கள் 1983 இல் அழிக்கப்பட்டன. அவரும் 1989 இல் இனந்தெரியாதவர்களினால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார்.

ஒரு பெரும்புள்ளியின் மறைகரம் அந்தச்சம்பவங்களின் பின்னணியில் இருந்திருக்கவேண்டும்.

எனினும் இசைக்கும் கலைஞர்களுக்கும் கலைத்துறைக்கும் வளம் சேர்த்தவர்களின் நினைவுகளுக்கு அழிவில்லை!

(தொடரும்)



# பட்டறிவு

## என்.எம்.பெரேரா சிறையிலிருந்து தப்பிய கதை

## அரசியல் கைதிகள் குறித்து என்.எம். பெரேரா அன்று ஆற்றிய உரை

*“பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் யுத்தத்திற்கு இலங்கைவாசிகளின் பணத்திலிருந்து ஒரு சதத்தைக் கூட உதவியாக வழங்கக் கூடாது.”*

இப்படி கூறியவர் என்.எம்.பெரேரா. இப்படி அவர் அன்றைய பாராளுமன்றத்தில் முன்மொழிந்தபோது, பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் மட்டுமல்ல அன்றைய தினம் பிரதிநிதிகள் சபையில் இருந்த அனைவரும் ஆத்திரமுற்றார்கள். அந்தப் பேச்சை எதிர்த்து அவர்கள் கடும் கண்டனங்களை வெளியிட்டார்கள்.

யுத்தத்துக்கு எதிராக லங்கா சமசமாஜக் கட்சியின் நிலைப்பாட்டின் காரணமாக அன்றைய பிரித்தானிய அரசு லங்கா சம சமாஜக் கட்சியை சட்டவிரோதக் கட்சியாக பிரகடப்படுத்தி 17.06.1940 அன்று என்.எம். பெரேரா, பிலிப் குணவர்த்தன, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா, எட்மன்ட் சமரக்கொடி ஆகியோரைக் கைது செய்தது. லெஸ்லி குணவர்தன வேறு வேடமணிந்து கட்சிப் பணிகளை முன்னெடுத்தார். கட்சியின் உத்தியோகபூர்வ பத்திரிகையான “சமசமாஜ” பத்திரிகையையும் இழுத்து மூடி சீல் வைத்தது அரசு.

கைது செய்யப்பட்ட அத்தலைவர்கள் அனைவரும் கண்டி போகம்பர விசேட சிறைச்சாலைப் பகுதியில் தடுத்து வைத்தனர். கிட்டத்தட்ட இரண்டாண்டுகள் சிறை வாழ்க்கை தொடர்ந்த நிலையில் 1942 ஆம் ஆண்டு ஏப்ரல் 7 அன்று நள்ளிரவு என்.எம்.பெரேரா, கொல்வின், எட்மன்ட், ரோபர்ட் குணவர்தன ஆகியோர் உள்ளிட்ட சமசமாசக் கட்சியைச் சேர்ந்த சிறைக்கைதிகள் தந்திரமாக அங்கிருந்து தப்பிச்சென்றனர்.

பின்னர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஒளிந்து மறைந்து வாழ்ந்த அவர்கள் பின்னர் வள்ளம் ஒன்றில் தனுஸ்கோடிக்கூடாக ராசா என்கிற ஒருவரின் உதவியுடன் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றனர். இந்தியாவில் அவர்கள் பல்வேறு பெயர்களில் தமது வேறு அடையாளங்களுடன் இந்திய சுதந்திரப் போராட்டப் பணிகளில் தம்மை இணைத்துக் கொண்டனர். பேராசிரியர் விஸ்வநாத் என்கிற பெயரில் இந்திய டிஸ்கவுன்ட் வங்கியில் செயலாளராகவும் பணியாற்றினார் என்.எம்.பெரேரா. அதுபோல கொல்வின் ஆர்.டீ.சில்வா மலையகத்தின் முதல் தியாகியான கோவிந்தனின் பெயரில் இயங்கினார், அதே பெயரில் பல கட்டுரைகளையும் எழுதினார்.. 15.07.1943 அன்று சந்தேகத்துக்கு இடமான 15 இடங்களை ஒரே நேரத்தில் இரகசிய பொலிசார் சுற்றி வளைத்ததில் சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த 21 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்தியாவில் ஆதர் ரோட் என்கிற சிறைச்சாலையில் விசேட பாதுகாப்புடன் அவர்கள் அனைவரும் 17 நாட்கள் இருட்டறையில் வைக்கப்பட்டு, பின்னர் பம்பாயில் உள்ள பல்வேறு சிறைகளுக்கு அனுப்பப்பட்டு, பின்னர் 1943 டிசம்பரில் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

சிறைச்சாலைப் பாதுகாப்பிலிருந்து தப்பிச்சென்ற குற்றச்சாட்டின் பேரில் என். எம்.பெரேரா மீது வழக்கு தொடுக்கப்பட்டது. அந்த விசாரணை வழக்கு 28.12.1943 அன்று கண்டி பொலிஸ் நீதவான் டீ.விஜேரத்ன முன்னிலையில் விசாரணைக்கு



எடுத்துக்கொள்ளப்பட்டது. அரச வழக்கறிஞர் எஸ்.நடேசன் இலவசமாக என்.எம். பெரேராவுக்காக வாதிட முன்வந்தார்.

என்.எம்.பெரேரா தனக்கு எதிரக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டில் தான் நிரபராதி என்றும் இந்த வழக்கை தொடர்ந்தும் நடத்துவதை தான் நிராகரிப்பதாகவும் குற்றவாளிக்கூண்டில் இருந்து விளக்கத்தை அளிக்க தனது சம்மதத்தையும் வெளியிட்டார். குற்றவாளிக் கூண்டில் இருந்தபடி என்.எம்.பெரேரா தன்னை சிறைவைக்கவோ, தனக்கு எதிராக வழக்கு தொடுக்கவோ, பிரித்தானிய அரசுக்கு எந்தவித அதிகாரமும் கிடையாது என்றும் இந்த குற்றவாளிக் கூண்டில் இருக்க வேண்டியது தான் அல்ல பிரித்தானிய ஆளுநர் தான் என்றும் வாதிட்டார்.



இந்த மறுப்பும் பிரகடனமும் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பு.

அவர் அங்கு ஆற்றிய நீண்ட உரையின் ஒரு பகுதி இது தான்.

“இன்று நான் ஒரு குற்றவாளியாக இங்கே இருப்பதில் பெருமை கொள்கிறேன். ஆனால் நான் ஒரு குற்றவாளி அல்ல. நான் இந்த நாட்டின் ஆளுனரை குற்றவாளி என்கிறேன். இந்த விசாரணை எனக்கு எதிராக அல்ல, இந்த அயோக்கிய முறைமையின் கருவியான ஆளுநருக்கு எதிராகவே மேற்கொள்ளப்படவேண்டும். ப்ரெஸ்கேர்டலின் வழக்கிலிருந்து பல அரசியல் வழக்குகளால் எப்படி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வண்டவாளங்கள் வெளிவருவதற்கு சாதகமானதாக அமைந்ததோ, அது போல இந்த வழக்கும் இந்த மோசமான எதிரியின் உண்மை முகத்தைக் கிழித்தெறிய வழிவகுக்கட்டும்.”

பல்லாண்டுகளாக சுரண்டலுக்கும், அடக்குமுறைகளுக்கும் ஆளாகிவரும் லட்சக்கணக்கான இலங்கைத் தொழிலாளர்களும் விவசாயிகளும் இந்த சுரண்டலுக்கு எதிராக போராடிய வரலாற்று நிகழ்வுகளை என்.எம்.பெரேரா அந்த வழக்கில் விளக்கினார்.

18.06.1940 ஆம் திகதியிலிருந்து எந்த வித குற்றச்சாட்டுமின்றி, விசாரணையுமின்றி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தோம். நாட்டின் பௌத்த தலைவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களின் (உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டீ.பீ. ஜயதிலக்க) கையெழுத்தின் மூலம் அனுமதி கொடுக்கப்பட்டு அன்றைய தினமே நாங்கள் கைது செய்யப்பட்டது மிகவும் கசப்பான செயல்...

நானும் எனது கட்சித் தோழர்களும் சிறையனுப்பப்படுமளவுக்கு, நாங்கள் செய்த குற்றம் தான் என்ன? ஆனால் நாங்கள் பல தவறுகளை செய்து தான் இருக்கிறோம். அதாவது ஏழைத் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், மாணவர்களுக்கும், நோயாளர்களுக்கும், பெண்களுக்காகவும் நாங்கள் குரல் கொடுத்தது தான் எங்கள் தவறா? நாங்கள் எங்கள் தொழிற் சங்கத்தை சாத்தியமாக இயக்கியிருக்கிறோம்.

**என்.சரவணன்**

குறிப்பாக மலையகப் பகுதிகளில் “அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தை” இயக்கியிருக்கிறோம். அதன் போது தொழிலாளர்களின் நிலைமையையும், வர்க்க உணர்வையும் நிமிர்த்தியிருக்கிறோம். அதேவேளை சகல முதலாளிமாரின் குரூர சுரண்டலை இயன்றளவு கட்டுப்படுத்தியிருக்கிறோம்.

இவை எல்லாவற்றையும் விட மாபெரும் தவறொன்றை இழைத்திருக்கிறோம். ஏகாதிபத்திவாதிகளும் அவர்களின் கறுப்பு அடிவருடிகளும் அதற்காக எங்களுக்கு மன்னிப்பு வழங்கப் போவதில்லை. அதாவது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுவித்துக்கொண்டு இந்த நாட்டின் சுதந்திரத்தை அடையும் வழியைக் காட்டியிருக்கிறோம். பூரண விடுதலைக்காக இந்த நாட்டு மக்களை தயார்படுத்தத் தொடங்கியிருக்கிறோம். இப்படி தயார்படுத்தியதன் விளைவு தான் இந்த வழக்கு எனக் கருதலாம். இந்த அனைத்து குற்றங்களுக்கும்தான் நான் ஒரு குற்றவாளி என்பதை இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் சிறையிலிருந்து தப்பியது பற்றியது தான் இந்த வழக்கு. சிறையிலிருந்து தப்பியதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதேவேளை நான் சிறைவைக்கப்பட்டது சட்டரீதியானது என்று ஏற்றுக் கொள்ளமாட்டேன். எந்தளவு அதிகாரம் படைத்த ஒருவராக இருந்தாலும் வெற்று ஆணை சட்டபூர்வமானதென நான் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை... அரசாங்க சபையில் எங்களை விடுவிக்கும்படி தெளிவான மொழியில் பல தடவைகள் யோசனைகள் முன்மொழியப்பட்டிருக்கிறது. ஜனநாயக அரசாங்க சபையின் முன்மொழிவுகள் தன்னிச்சையாக உதைத்தெறியப்பட்டிருக்கிறது.

நான் கொண்டிருக்கிற கொள்கைக்காகவும் எனது செயற்பாடுகளுக்காகவும்தான் ருவன்வெல்ல தொகுதி மக்கள் என்னைத் தெரிவு செய்திருக்கிறார்கள். தேசத்தின் சுதந்திரத்துக்காகவும், சமவுடமைச் சமூகத்தை உருவாக்கப் போராடுவதை நிறுத்தினால் நான் அவர்களால் வெறுக்கப்படுவேன். எனவே தனியொருவரின் ஆணைக்கு நான் கட்டுப்படப்போவதில்லை. அப்படிப்பட்ட அராஜகன் பல்லாண்டுகளாக இந்த நாட்டு மக்களின் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்து வளர்த்து பலமடைந்த முறைமையின் பிரதிநிதியே தவிர மக்களின் பிரதிநிதி கிடையாது.

நாங்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொள்வது என்கிற திட்டத்துடன்தான் சிறையில் இருந்து தப்பிச் சென்றோம். அந்த மகா தேசத்துக்கு எங்களால் முடிந்த சிறு பங்கையாவது ஆற்றுவதில் பெருமை கொள்கிறோம். இந்தியாவின் விடுதலையின்றி இலங்கைக்கு விடுதலை சாத்தியமில்லை. எங்கள் இரு போராட்டங்களும் ஒரே இலக்குக்கான போராட்டம்.

...இந்தியாவில் நடக்கும் அட்டூழியங்களை ஹிட்லர் அறிய நேரிட்டால் தனது பாசிஸ்ட் நடவடிக்கைகள் அதனை கொடூரமில்லை என்று கூறக்கூடும். இந்திய மக்கள் செய்த ஒரே குற்றம் தமது தாய்நாட்டுக்காக சுதந்திரத்தைக் கோரியது தான். ஆனால் பிரித்தானியாவோ தாம் சுதந்திரத்துக்காவும், ஜனநாயகத்துக்காகவும் யுத்தம் செய்வதாக கூறிக்கொள்கிறது. இது வேடிக்கை அல்லவா?

என்.எம்.பெரேராவின் இந்த உரை தமிழில் விரிவாக வெளிவந்ததாகத் தெரியவில்லை. அதுபோன்று பிலிப் குணவர்த்தனவும் ஒரு உரையை நிகழ்த்தியிருந்தார். அந்த நீதிமன்ற உரை ஆங்கிலேயர்களைக்

தொடர்ச்சி... (பக்கம் -23 )

கணனிக்கூடமும், ஆய்வுகூடங்களும் நிரம்பியுள்ள பல பாடசாலைகள் நம்நாட்டிலே உள்ள நிலையில், நிழல் பிரதி எடுப்பதற்கும், பாடசாலையில் மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வினை நடாத்துவதற்கும் கூட வசதியின்றியேங்கும் பாடசாலைகள் பல நமது மட்டக்களப்பு மேற்கில்

சீருடை இன்மையினால் அதனை பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகளை தேடிக்கொண்டிருந்தார். மற்றொருவர் தமது பாடசாலையில் பரிசளிப்பு விழா நடத்துவதற்கு எண்ணி அதற்காக உதவிகளைத் தேடிக்கொண்டிருந்தார். அப்போதுதான் வேலுப்பிள்ளையும்,

## படுவான் திசையில்

# மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வினை நடாத்துவதற்கும் கூட வசதியின்றியேங்கும் படுவான்கரைப் பாடசாலைகள்



இருக்கின்றமையை நினைக்கையிலே, நாம் எங்கிருக்கின்றோம் என்பது புரிகிறது என மணற்பிட்டி சந்தியில் நின்று வேலுப்பிள்ளையும் கந்தசாமியும் பேசிக்கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் கஸ்ட, அதிகஸ்ட பாடசாலைகளை முழுமையாக கொண்டமைந்த வலயமாகவும், கடந்த மூன்று தசாப்த யுத்தப்பிடிக்குள் அகப்பட்டு கல்வியினை பெறுவதில் ஏங்கிக் கொண்டிருக்கும் பிரதேசமாகவும் உள்ளது. இப்பிரதேசத்து மாணவர்களின் கல்வியினை உயர்த்துவதற்காக பல செயற்பாடுகளை பாடசாலை மட்டத்தில் அதிபர்களும், வலயமட்டத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளும் முன்னெடுத்து வருகின்றனர். ஆனாலும் பல பாடசாலைகள், தேவைகளை நிறைவேற்ற உழைத்துக்கொண்டிருக்கின்றன.

மணற்பிட்டி சந்தியில் நிற்கின்ற போது, பாடசாலையின் அதிபர் ஒருவர் தனது பாடசாலையில் நிழல்பிரதி இயந்திரம் இன்மையால் நிழல்பிரதி எடுப்பதற்காக கொக்கட்டிச்சோலை நகரைநோக்கி சென்றார். இன்னுமொரு அதிபர் தனது பாடசாலை பிள்ளைகளுக்கு விளையாட்டுக்கான

கந்தசாமியும் மணற்பிட்டியில் நின்று பேசிக்கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திலே உள்ள பெரும்பான்மையான மக்கள் அன்றாடம் கூலிவேலை செய்து குடும்பத்தினை வழிநடத்துகின்றவர்கள். இதனால் பாடசாலைக்கான வளர்ச்சியில்



இவர்களின் பங்காக சரீர உதவியை மாத்திரமே எதிர்பார்க்கமுடியும். அதனால் பாடசாலைகளில் வருடாந்தம் பரிசளிப்பு, கௌரவிப்பு, இல்லவிளையாட்டுப் போட்டி போன்ற செயற்பாடுகளையும், மாணவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள், நிழல்பிரதி இயந்திரக் கொள்வனவு போன்ற பலதரப்பட்ட சிறுதேவைகளைக்கூட நிறைவேற்றுவதென்பது சிக்கலானவிடயமே. இதனால் ஒரு தசாப்தங்களுக்குப் பின்பும் பரிசளிப்பு விழா நடாத்தப்பட்ட பாடசாலைகளும், பரிசளிப்பு விழா நடாத்தப்படாத பாடசாலைகளும் உள்ளன.

சமூகத்தினை உள்வாங்குகின்ற செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற போதுதான் பாடசாலையும் எழுச்சி காணும். மாணவர்களையும், சமூகத்தினையும் கௌரவிக்கின்றபோதுதான் பாடசாலை உயர்ச்சி காணும். இவற்றினை நிறைவேற்றுவதற்கு கூட பல முயற்சிகளையும்

**படுவான் பாலகன்**

மேற்கொண்டு வருகின்றனர்.

உதவிகளை கேட்பதற்கு சிலரை மாத்திரமே அணுக வேண்டிய நிலையில் பாடசாலைகளின் முதல்வர்கள் இருந்து கொண்டிருக்கின்றனர். அவர்களிடம் ஒருதரம் உதவியை கேட்டுவிட்டால் மீண்டும் எவ்வாறு கேட்பதென்ற மனநிலையில் தயங்கிய உள்ளத்துடன் இருந்து கொண்டிருக்கின்றனர். இவை தொடர்ச்சியான செயற்பாட்டிற்கும் சிரமங்களையேற்படுத்தி நிற்கின்றன.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம், ஆரம்பப்பிரிவு போன்ற பாடங்களுக்கு ஆசிரியர் இன்மையான பிரச்சினைகளும் இருந்துகொண்டிருக்கின்றன. கணிதபாடத்திற்கு 31பேரும், விஞ்ஞான பாடத்திற்கு 08பேரும், ஆரம்பப்பிரிவிற்கு 38ஆசிரியர்களும் தேவையாகயுள்ளனர்.

இந்நிலையிலும் கூட பாடசாலைகளின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சில வலயங்களில் தேவைக்கும் அதிகமாக ஆசிரியர்கள் உள்ளதாக கூறப்படுகின்ற நிலையிலும், தேவையான மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்கு ஆசிரியர் வெற்றிடம் சமப்படுத்தப்படாமை கவலையானதொன்றே என வேலுப்பிள்ளையும் கூறிக்கொண்டிருந்தார்.

பொருளாதாரம், வேலைவாய்ப்பு போன்ற பல்வேறு துறைகளில் பின்தங்கி நிற்கின்ற நிலையில், கல்வி ரீதியாக மாத்திரமே படுவான்கரைச் சமூகத்தினை எழுச்சி காணமுடியும் என்பது கந்தசாமியின் எண்ணமாகும்.

இதற்காக கல்வியை மாத்திரம் இவர்களிடம் திணித்துவிடவும் முடியாது. இதற்காக கல்வியோடு இணைந்து பல செயற்பாடுகளையும், மாணவர் விரும்பும் சூழலையும் பாடசாலைகளில் ஏற்படுத்த வேண்டும். இதன் பயனாக விருப்பதுடனுடான கல்வியை மாணவர்களுக்கு வழங்க முடியும். என்ற எண்ணமும் வேலுப்பிள்ளையுடன் மேலோங்கியிருக்கின்றது. இவ்வெண்ணத்தினை நிறைவேற்ற எல்லோரும் கைகோர்க்க வேண்டுமென்பது கந்தசாமியின் கூற்றாகவிருக்கின்றது.

மூன்று தசாப்த யுத்தத்தில் இழந்தவைகளைப் பெற்று, ஏனைய சமூகங்களின் நிலையை படுவான்கரைமக்கள் அடைவதற்கு இன்னும் மூன்றுதசாப்தங்களுக்கு மேல் தேவை. ஆனால் எல்லோரினதும் ஒத்துழைப்பும், துரித செயற்றிட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்ற போது, வளர்ச்சிக்கான படியினை சிறிது அதிகரித்துக்கொள்ள முடியும்.

பாடசாலையை வளர்த்தெடுக்க செயற்றிட்டங்களையும், செயற்பாடுகளைளும் முன்னெடுக்க எத்தனிக்கும் பாடசாலைகளின் அதிபர்களுக்கும், அதிகாரிகளும் கரம்கொடுக்க வசதிபடைத்தவர்கள் முன்வரவேண்டும். குறிப்பாக ஒவ்வொரு பாடசாலைகளையும் ஒவ்வொரு அமைப்புக்களோ அல்லது தனிநபர்களோ பொறுப்பேற்று மாணவர்களின் அடைவுமட்ட வளர்ச்சிக்கு உதவி செய்ய வேண்டும்.

நீண்ட காலமாய் ஓடி, ஓடி களைத்து நிற்கின்ற சமூகத்தின் செயற்பாட்டிற்கு உரம்கொடுக்க வேண்டும். இதற்கு நம்நாட்டவர்கள் முன்வரவேண்டும். என்று வேலுப்பிள்ளையும் கூறிவிட்டு நிமிர்ந்தவேளை பரீட்சை வினாத்தாளை நிழல்பிரதி எடுப்பதற்காக பாடசாலை மாணவன் ஒருவன் மாலை வேளையில் கொக்கட்டிச்சோலைக்கு சென்றுகொண்டிருந்தான்.

அப்போது வேலுப்பிள்ளையும், பரீட்சை வினாத்தாள் ஒன்றை பிரதி செய்வதற்கு ஆறு கிலோமீற்றர் தொலைவிலிருந்து வருகைதர வேண்டிய சூழல் இருக்கின்றது. என்ற மனஆதங்கத்துடன், அவ்விடத்தினை விட்டு அகன்றார்.

பக்கத்துக்கான அனுசரணையாளர்
-------------------------------
அலையப்போடியார் நல்லரத்தினம்
ஸ்தாபகர் : அறிவாலயம் கல்வி மையம்
வாழ்நாள் நன்கொடையாளர்:
சக்தி மகளிர் இல்லம்

# தமிழ்-முஸ்லிம் சமூகத்தவரிடையே நல்லிணக்கத்திற்கான வகிபாகம் பகுதி 4

## எழுத்தாளர்களின் பங்களிப்பும் பணிகளும்

*(அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் ஏற்பாட்டில் மெல்பனில் நடைபெற்ற நிகழ்வில் சமர்ப்பிக்கப்பட்ட உரை)*

கலாநிதி அமீர் அலி

*( பொருளியல்துறை - மேர்டொக் பல்கலைக்கழகம், மேற்கு அவுஸ்திரேலியா)*

இன்று கிழக்கிலே தமிழருக்கும் முஸ்லிம்களுக்குமிடையேயுள்ள ஓர் உறவைக்கூட முற்றாகத் துண்டித்து இரு இனங்களையும் போர்க்கொடி தூக்கவைக்கிறது அங்கே நிலவும் நிலப் பிரச்சினை. கிழக்கின் மொத்த சனத்தொகையில் முப்பது சதவிகிதத்தைக் கொண்டிருக்கும் முஸ்லிம்களுக்கு ஆக மூன்று சதவிகித நிலமே உண்டென்கிற உண்மை ஏன் அரசியல்வாதிகளாலும் எழுத்தாளர்களாலும் மூடிமறைக்கப்படுகின்றது? அந்தப் பிரச்சினையைச் சாட்டாகவைத்து ஒரு முஸ்லிம் அரசியல்வாதி தனது அரசியற் செல்வாக்கைக்கொண்டு கோயிலுக்குரிய நிலமொன்றை முஸ்லிம்களுக்கு வழங்கியமையை அவரது ஒளிநாடாவே உலகுக்குப் பறைசாற்றியுள்ளது.

அந்த அநீதியை எந்த முஸ்லிம் எழுத்தாளன் கண்டித்தான்? அதேபோன்று பள்ளிவாசல் நிலமொன்றைத் தமிழ் அரசியல்வாதிகளின் ஆதரவுடன் இந்துப் பிரார்த்தனை மண்டபமாக மாற்றியுள்ளதை எந்தத் தமிழ் எழுத்தாளனின் போனாவும் கணினியும் கண்டித்தன? பல்லாண்டு காலமாக நாலைந்து ஏக்கர் நிலத்தை மயான பூமியாகப் பாவித்த தாழ்த்தப்பட்ட சில தமிழ்க் குடிகளை ஒரு முஸ்லிம் செல்வச் சீமான் விரட்டியடித்து, அந்த நிலங்களுக்குச் சொந்தங்கொண்டாடிய சங்கதி அங்குள்ள எந்த எழுத்தாளனின் செவிகளையும் எட்டவில்லையா? எட்டியிருந்தும் அதைக் கண்டித்தெழுதத் துணிவு வரவில்லையா? ஆகையினாலேதான் நான் மீண்டும் வலியுறுத்துகிறேன் எழுத்தாளர்களுக்கு யதார்த்தத்தைத் துணிந்து கூறும் சக்தி வேண்டுமென்று. அது இல்லையென்றால் இனநல்லிணக்கத்தைப்பற்றிப்பேசும் அருகதை அவர்களுக்கில்லையென்றுதான் கூறுவேன். அன்றைய முற்போக்கு எழுத்தாளர்களின் புதிய தலைமுறையொன்று இன்று அங்கே உருவாக வேண்டியுள்ளது.

### எழுத்தாளர்கள் எதிர்நோக்கும் சவால்

துணிவுள்ள எழுத்தாளர்களும் தனியாக நின்று எதையும் சாதித்துவிட முடியாது. இனநல்லிணக்கம் என்பது சமூக முன்னேற்ற இயக்கங்களின் அயராத கூட்டு முயற்சியின் விளைவாக ஏற்படுவதொன்று. சமூக முன்னேற்ற இயக்கங்களின் ஓர் இன்றியமையாத அங்கமாக அமைவனதான் எழுத்தாளர்களின் மன்றங்களும், அவை நடத்தும் மாநாடுகளும், நூல் வெளியீட்டு விழாக்களும். இவற்றின் வெளியீடுகளும் செய்திகளும் பொதுமக்களைச் சென்றடைகின்றனவா என்பது ஒரு முக்கியமான கேள்வி. வீட்டுக்கு வீடு தொலைக்காட்சிச் சாதனங்களும் வானொலிப் பெட்டிகளும் தினசரிகளும் காணப்பட்டாலும், அவை பரப்புகின்ற செய்திகளும் காட்டுகின்ற காட்சிகளும் அக்காட்சிகளைப் பற்றிய விமர்சனங்களும் செய்தித்தாபனங்களின் இலாபத்தையும் சந்தை விருத்தியையும் பிரதான இலக்காகக் கொண்டு வெளியிடப்படுவதால் உண்மைகள் அங்கே பெரும்பாலும் மூடிமறைக்கப்படுகின்றன.

இந்த வியாபாரச் சூழலில் உண்மைக்காகப் போராடும் எழுத்தாளர்கள் தமது கருத்துக்களைப் பொதுமக்களிடையே பரப்ப இயலாமல் திண்டாடுகின்ற நிலைமையைப் பரவலாக உலகெங்கும் காண்கிறோம். இதற்குப் பரிகாரமாக சமூக வலைத்தளங்களை எழுத்தாளர்கள் கையாள வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. ஆனால், வறுமைப் பிணியால் வாடும் கோடிக்கணக்கான மக்களிடையே இத்தளங்களை நாடும் சக்தி இல்லையே! இது இனநல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பவேண்டுமென முயற்சிக்கும் எழுத்தாளர்கள் எதிர்நோக்கும் ஒரு புதிய சவால்.

இன நல்லிணக்கத்தை வளர்க்க மதஸ்தாபனங்கள், அதாவது கோயில்களும் மசூதிகளும், அவற்றில் பணியாற்றும் மதபோதகர்களும், அவற்றைப் பராமரிக்கும் நிர்வாகிகளும் பிரதான பாகத்தை வகிக்கின்றனர் என்பதை மறுக்கமுடியாது. எழுத்தாளர்களுக்கும் மதஸ்தாபனங்களுக்குமிடையே நெருங்கிய உறவு ஏற்படவேண்டியுள்ளது. வாசகர்கள் விரைவாகக் குறைந்துகொண்டு செல்லும் ஒரு சூழலில் கருத்துகளும் வார்த்தைகளும் செவிவழியாகவே பொதுமக்களைச் சென்றடையவேண்டிய ஒரு சூழல் உருவாகியுள்ளது. முஸ்லிம்களைப் பொறுத்தவரை வாராந்தம் வெள்ளிதோறும் மசூதியிலே நடைபெறும் பிரசங்கம் மிகமுக்கியமான ஒரு நிகழ்வு. இலங்கையில் நான் சமூகமளித்த எத்தனையோ வெள்ளிக் கிழமைப் பிரசங்கங்களில் இனநல்லிணக்கம் பற்றிய ஒன்றையேனும் இதுவரை நான் கேட்டதில்லை. இதைப்பற்றி நான் பல இமாம்களிடம் முறையிட்டும் பலனில்லை. இந்துக் கோயில்களின் நிலைபற்றி எனக்கெதுவும் தெரியாததனால் அதைப்பற்றி எதுவும் என்னால் சொல்ல முடியாது. மதக் கோட்டைகளுக்குள் எழுத்தாளர்களின் கருத்துக்கள் எவ்வாறு நுழையலாம்? இது ஆராயப்படவேண்டிய ஒரு விடயம்.

### மேற்கொள்ள வேண்டிய ஆக்கபூர்வமான பணிகள்

இறுதியாக ஒன்றைக் கூறி எனது உரையை நிறைவுசெய்யலாமென நினைக்கிறேன். மெல்பனிலும், லண்டனிலும், டொரொண்டோவிலும் முஸ்லிம்- தமிழர் நல்லிணக்கத்தைப்பற்றி எழுத்தாளர்களும் கல்விமான்களும் கூடிக் கலந்துரையாடுவதும் மாநாடுகள் அமைப்பதும் இலகு. அவை வரவேற்கத்தக்க முயற்சிகள் என்பதை மறுக்கவில்லை. ஆனால், அவ்வாறான கலந்துரையாடல்கள் யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும் நடத்தப்பட வேண்டும். இலங்கையிலே இவ்வாறான ஒரு கலந்துரையாடலை நடத்துவதானால் கொழும்புத் தமிழ்ச் சங்கமே கதியென்ற நிலைதான் இன்று காணப்படுகின்றது. என்னைப் பொறுத்தவரை அதுகூட பொருத்தமான ஒரு தலமல்ல.

ஏனென்றால் பிரச்சினை கொழும்புக்கு வெளியேதான் காணப்படுகிறது. சாக்கடையிலிருந்துதான் நுளம்புகள் உற்பத்தியாகின்றன. நுளம்புத் தொல்லையை முற்றாக ஒழிக்கவேண்டுமாயின் முதலில் சாக்கடையைச் சுத்தப்படுத்த வேண்டும். எழுத்தாளர்களே! சாக்கடையை நோக்கி உங்களின் எழுத்தாணிகளும் கணினிகளும் படையெடுக்கட்டும். இதுதான் உங்களை எதிர்நோக்கும் இன்றைய மகத்தான பணி.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனையும் அஞ்சோம்."



---

தொடர்ச்சி...

# 'அறக்கொட்டி அழிய வேண்டும் அல்லது நாம் அழிவோம்!'



பணிப்பாளர் சனீர், அந்தப் பிரதேசங்களில் இரவு பகலாக நின்று அறக்கொட்டியைக் கட்டுப்படுத்தும் பாரிய பணியில் ஈடுபட்டுள்ளார்.

"பருவத்தே பயிர் செய்யவேண்டும்" என்று எம் முன்னோர்கள் சும்மாவா சொன்னார்கள்?

காலம் தப்பிய நீர்ப்பாசனம், பருவம் தப்பிய விதைப்பு என்பனவே இன்றைய இந்த அவல நிலைக்குக் காரணம் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

அம்பாறை மேற்குப்பிரதேசம் சிங்கள மக்கள் வாழுகின்ற பிரதேசமாகும். அங்கு இந்த அறக்கொட்டியின் மோசமான தாக்கத்தை அறிந்ததும் விவசாயத்திணைக்கள மேலதிகாரிகள் அம்பாறையை நோக்கி படையெடுத்து வருகிறார்கள்.

கடந்த வாரம் இலங்கையின் விவசாயத்துறையின் மேலதிகாரி விவசாயத்திணைக்கள பணிப்பாளர் நாயகம் கலாநிதி வீரக்கோன் தலைமையிலான உயர்மட்ட அதிகாரிகள் குழு ஸ்தலத்திற்கு விரைந்தது.

மேலும் பத்தலகொட நெல் ஆராய்ச்சிப் பிரிவிலிருந்து ஆராய்ச்சிப் பிரிவினரும் வந்திறங்கினர். அறக்கொட்டிக்கு வழமையாகப் பாவிக்கும் மருந்துகள் தற்போது பலனளிக்காத காரணத்தினால் புதிய இதுவரை பாவிக்காத புதிய ட்ரான்ஸ்போம் என்ற மருந்தைப் பாவித்தார்கள். அதற்கு அறக்கொட்டி செவிசாய்த்தது. அந்த மருந்தை உடனடியாக விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகித்து, பாவித்துவருகின்றனர்.

இதற்கென மருந்து விசிறும் பாரிய 3 பம்பிகள் கண்டியிலிருந்து வரவழைக்கப்பட்டு, பாவிக்கப்பட்டுவருகின்றன.

விவசாயத் திணைக்களத்தினர் தமது லீவுகளை எல்லாம் ரத்துச் செய்துவிட்டு அறக்கொட்டியுடன் போராடி வருகின்றார்கள். சிங்களம் தெரிந்த உத்தியோகத்தர்களை மாறி மாறி களத்தில் இறக்கி விவசாயிகளுக்கு இலவசமாக மருந்துகளை வழங்கி பகீரதப் பிரயத்தனத்தில் ஈடுபட்டுவருகின்றார்கள். சிரேஸ்ட் விவசாய போதனாசிரியர் எம். ரி.ஏ.கரீம் உள்ளிட்ட குழுவினரும் அங்கே உள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் மேற்குப்பிரதேசத்தில் அறக்கொட்டித் தாக்கத்திற்கு 3200 ஹெக்ரேயர் வயல் நிலங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. அதிலும் 200 ஹெக்ரேயர் அழியும் தறுவாயிலுள்ளது.

உகன மத்தியமுகாம் மாயாதுன்ன ஆகிய 3 பிரதேசங்களில் உள்ள 3200 ஹேக்ரேயர் வயல்நிலங்களே இவ்விதம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

(காரைதீவு நிருபர் சகா)




# மலைகளைப் பேசவிடுங்கள்

# அந்தோனி வந்தார் - புனிதராக அல்ல தூதராக

தமது நாடு இலங்கையா இந்தியாவா என்பதில் அவ்வப்போது தயங்குநிலை இருந்துவந்த போதும் இலங்கையே தமது தேசம் என்றும் மலையகமே தேசியம் என்றும் தீர்மானித்த சமூகமே இன்று இலங்கையின் தேசிய "இனங்களில்" ஒன்றாக சனத்தொகைக் கணக்கெடுப்பில் நான்காவது இடத்தில் தனித்துவமான சமூக, கலை, கலாசார, பண்பாட்டு அம்சங்களோடு வாழ்ந்துகொண்டிருக்கிறது. அது மலையக சமூகம்.

ஏற்கனவே சொன்னது போல இந்த நான்காம் இடத்திற்கு காரணமான விடயங்களில் ஒன்று சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தின் கீழ் இந்தியா திரும்பியது. இப்போது அவர்கள் தாயகம் திரும்பியோர்" என தமிழகம் எங்கும் " சிலோன்" காலனிகளில் வாழ்ந்துவருகின்றனர். இவர்கள் கள்ளத்தோணிகளில் வந்த "அகதிகள்" அல்ல. இந்திய அரசின் அங்கீகாரத்துடன் இலங்கையில் வைத்தே இந்திய கடவுச்சீட்டு வழங்கப்பட்டு, இலங்கை மலையக ரயில் நிலையங்களிலேயே "மண்டபம்", " திருச்சி" முதலான ஊர்களுக்கு "டிக்கெட்" எடுத்து வந்தவர்கள். "மலையகமும் மறுவாழ்வும்" இந்த நூலைத் தொகுத்து, தனது கட்டுரைகளையும் இணைத்து வெளியிட்டிருக்கும் தமிழகன் ராமச்சந்திரன், தனது "அங்குசம்" பதிப்பகத்தின் ஊடாக



வெளியிட்டிருக்கும் டார்வின்தாசன், அவர்களுக்கு துணை புரிந்திருக்கும் ஈழம் மலர் மன்னன் தம்பிராஜா, திருச்சி செவந்தி, பூபாலன் ஆகியோரோடு திருநெல்வேலியில் நூல் அறிமுக கூட்டத்தை இந்திய சமூக விஞ்ஞான கழகத்துடன் இணைந்து நடாத்தியிருக்கும் ஜெய்சிங் என இவர்கள் யாரும் அகதியாக தமிழகம் வரவில்லை. அவர்கள் தமிழகத்தை "தாயகம்" என நம்பி ராமானுஜம் கப்பலில் வந்தவர்கள்.

இலங்கையில் மலையகத்தமிழரின் பிரச்சினை என்பது எப்படி இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளில் இருந்து வேறுபட்டதோ, அதேபோல தமிழ் நாட்டில் தமிழ் மக்கள் அனைவருக்கும் இருக்கக்கூடிய பொதுவான பிரச்சினைகளுக்கு மேலதிகமாக இவர்கள் சிறப்பான பிரச்சினைகளை உடையவர்கள். எல்லாருக்கும் "வாழ்வு" தேடுவது பிரச்சினை எனில் இவர்கள் தேடுவது "மறுவாழ்வு". இருநூறு வருடங்களுக்கு முன்னர் தம் மூதாதையர் தமிழக மண்ணில் தொலைத்துவிட்டு பின்னர், இலங்கை சென்று பிரித்தானியர் காலத்திலேயே பிரஜாவுரிமைப் பெற்று, பின்னர் அதனை தொலைத்துவிட்டு, பின்னர். அங்கிருந்து சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் இந்தியா வந்தபோது இலங்கையின் கையில் தம் உறவுகளைத் தொலைந்துவிட்டு, இங்கே தமிழகத்தில் ஒரு தலைமுறையாக தமது "மறுவாழ்வை" தேடிக் கொண்டிருப்பவர்கள். அதனால்தான் தமிழகன் தன் தொகுப்புக்கு "மலையகமும் மறுவாழ்வும்" என தலைப்பிட்டுள்ளார். அதில் அவரது "கடல் தாண்டி கண்ணீர் சிந்தி", "தாயகம் திரும்பியோருக்கான மறுவாழ்வுத் திட்டங்கள்", ஆகிய இரண்டு கட்டுரைகள் இவர்களின் பிரச்சினையை சிறப்பாக எடுத்துக் கூறுவன.

குறைந்தபட்சம் இலங்கைக்கு நிகராகவே சுமார் பதினைந்து லட்சம் பேர் அளவில் தமிழகம் எங்கும் பரந்து வாழும் " தாயகம் திரும்பிய" மலையகத் தமிழர்களின் பிரச்சினைகள் வேறானவை எனக் காட்டுவதற்கு ஆதாரமாகவோ என்னவோ இங்கே கழுகுமலையில் இருந்து வந்திருக்கும் தாயகம் திரும்பியோர் மாத்திரம் ஓர் சீருடையில் வந்துள்ளார்கள். அவர்கள் கல்விசார் முன்னேற்றத்துக்காக ஓர் மன்றமாக செயற்படும் குழுவினர். இதுபோல் பல குழுக்கள் " தாயகம் திரும்பியோர்" நலன் நோக்கத்தை முன்வைத்து செயற்படுவதை நானறிவேன். இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு குரலில் ஐக்கியத்துடன் தமது பிரச்சினைகளை முன்வைக்காதவிடத்து ஈழத்தமிழர்கள் என்றால் அது யாழ்ப்பாணத் தமிழர்கள் தான் என தமிழக சாதாரணப் பொதுமகன் அறிந்து வைத்திருப்பதில் ஒன்றும் அத்தனை ஆச்சரியம் இல்லை. அந்தப் போராட்டம் ஒரு ஆயுதப் போராட்டமாகவும் அதற்கு கிடைத்த, கிடைத்துவரும் ஊடக "வியாபகமும்" இலங்கையில் தமிழர்கள் பற்றிய ஒரு பக்க பார்வையை தமிழகத்தில் தக்கவைத்துக்கொண்டிருக்கிறது.

இந்தியா, தமிழகத்தில் அமையப்பெற்ற சுமார் நூற்றுக்கு மேற்பட்ட அகதி முகாம்களில் வாழுகின்ற சுமார் ஒரு லட்சத்து முப்பத்தைந்தாயிரம் அகதி மக்களில் சுமார் மூன்றில் ஒரு பகுதியினர் "மலைகத்தமிழர்கள்" என்பது கூட தமிழகப் பொதுமகன் அல்லது பொதுமகள் அறியாத செய்திதான். திருச்சியில், சிவகாசியில், செங்கல்பட்டில் என அமைக்கப்பட்டுள்ள விசேட அகதி முகாமில் அவல வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழ அகதிகள் அல்லது இலங்கை அகதிகளின் பிரச்சினைகள் வேறானவை. இவர்கள் போன்று அகதியாக ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்திரேலிய கண்டங்களுக்குச் சென்றோர் இன்று அந்தந்த நாடுகளில் அகதிகளாக அன்றி பிரஜைகளாக அல்லது நிரந்தர வதிவிட அனுமதி பெற்றவர்களாக வாழ்கின்றனர். ஆனால் சுமார் முப்பது வருஷகாலமாக இவர்கள் இந்திய பிரஜை அந்தஸ்து பெறாமலும் இலங்கை திரும்ப முடியாமலும் அல்லது திரும்பினாலும் அங்கு உரிய மறுவாழ்வுத் திட்டங்கள் இல்லாத நிலையில் இந்தியாவில் அகதியாகவே வாழ்ந்துவருகின்றனர். ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுக்கும் ஏன் உயிரையும் கூட கொடுக்கத் தூண்டும் தமிழக உணர்வுக் குழுமங்கள் கவனம் செலுத்த வேண்டிய மக்கள் இவர்களே.

**'ஒரு நாட்டின் பிரஜையாகவே பிறந்தேன். ஒரு நாட்டின் பிரஜையாகவே இறக்க வேண்டும்'**

இந்த அகதி மக்களில் இந்திய வம்சாவளியினரான மலையகத் தமிழர்கள் நிலைமை இன்னும் மோசமானது. 1970 களில் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட காலத்தில் இந்தியா வேண்டாம் என வன்னி நோக்கி சென்ற அல்லது அழைத்துச்செல்லப்பட்ட அல்லது குடியமர்த்தப்பட்ட மலையகத் தமிழ் மக்கள் மலையகத்தில் வாழ்ந்தபோது இலங்கை குடியுரிமை பறிக்கப்பட்டு இருந்தனர். அந்த நிலையிலேயே வன்னியில் குடியேறிவிட, பின்னாளில் அங்கு வாழ்ந்துகொண்டு மலையகத்தில் வாழ்ந்த மக்கள் போல குடியுரிமைக்கு விண்ணப்பிக்க முடியாத நிலை. இதற்கு இரண்டு காரணங்கள்,

அரசியல் ரீதியாகவும் புவியியல் ரீதியாகவும் பாரம்பரிய மலையக மக்களிடம் இருந்து இவர்கள் துண்டாடப்பட்டிருந்தமை.

உள்நாட்டு யுத்த சூழலுக்குள் வாழந்தமையால் இலங்கை அரச நிர்வாகத்திடம் குடியுரிமைக்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியாத நிலைமை.

இந்த இரண்டு நிலைமையோடு சொந்த நிலமின்றி, அன்றாடகூலிகளாக, விவசாய தொழிலாளர்களாக வன்னியில் வாழ்ந்த இவர்கள் மீது யுத்த அழுத்தம் தொடர்ந்து அதிகரிக்க, அவர்களது அடுத்த தலைமுறையினரை விடுதலை இயக்கங்களிடம் தொலைக்கத் தொடங்கினர். எல்லாவற்றையும் இழந்து நிற்கும் தாம் தமது எதிர்கால சந்ததியினரையாவது காப்பாற்றிக் கொள்ள எண்ணியபோது எடுத்த தீர்மானந்தான் ஈழ அகதிகளின் பேரில் இந்தியாவுக்கு படகில் செல்வது. அப்படி சென்றவர்கள் போக எஞ்சியோர்தான் தமது இளையவர்களை பலிகொடுத்து இன்றும் வடக்கு வாழ் மலையக மக்களாக வன்னி நிலப்பரப்பில் கணிசமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இந்தியாவுக்கு அகதியாக சென்றோர் தொகையில் 125000 பேரில் சுமார் 25000 பேர் மலையகத் தமிழர் என புள்ளிவிபரங்கள் (2009) கூறின. ஏனெனில், அகதி மக்களில் இந்தியாவில் அகதி ஆனாலும் இலங்கையில் பிரஜை அந்தஸ்து உடையவர்களாக "இலங்கைத் (ஈழ) தமிழ் மக்கள்" திகழ்ந்தனர். ஆனால், இலங்கையில் குடியுரிமைப் பறிக்கப்பட்ட நிலையில் வன்னிக்கு குடிபெயர்ந்து இப்போது இந்தியாவில் அகதியாயும் நின்றனர், நாடற்றவராகவும் நின்றனர். இந்திய வம்சாவளியானபோதும் இந்திய மண்ணில் நாடற்றவராகி நின்றனர். இது உலகின் எந்தவொரு மக்கள் கூட்டத்துக்கும் நடந்திருக்கும் என எதிர்பார்க்கவே முடியாது. எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள்.

இதனை உணர்ந்த இந்த கூட்டத்திற்குள் இருந்து வந்த போராளி அந்தோனி அதற்கான போராட்டத்தை ஆரம்பித்த போது அவருக்கு வயது எண்பது. அவருக்கு துணை நின்றவர் பாலகிருஷ்ணன். இருவரும் சிவகாசி அகதி முகாமைச் சேர்ந்தவர்கள். தாங்கள் பிறந்த போது ஒரு நாட்டில் பிரஜை (இலங்கை). அது பறிக்கப்பட்டு அங்கிருந்து நாடோடியாகி இப்போது அகதியாகி வந்து சேர்ந்துள்ள நாடோ தமது பூர்வீகம் வாழ்ந்த நாடு ( இந்தியா). இரண்டு நாட்டிலும் தனக்கு உரிமை இருந்த போதும் அது

**மல்லியப்புசந்தி திலகர்**

மறுக்கப்பட்டுள்ளது. தனது பூர்வீக தேசமான இந்திய நாட்டில் குடியுரிமைக் கோர தனக்கு இன்னுமொரு தயக்கம் இருக்கிறது. காரணம் அவர்கள் இந்திய குடியுரிமை தந்து தங்களை தாயகம் திரும்புமாறு அழைத்த போது அதனை மறுத்து, இலங்கை குடியுரிமை இல்லாத போதும் இலங்கையிலேயே தங்குவதற்கு முடிவெடுத்தவர்கள் நாங்கள். இப்போது அவ்வாறு தாயகம் திரும்பியோர் மறுவாழ்வுக்காகப் போராடிக் கொண்டு இருக்கையில், எனக்கும் நாட்டு உரிமை கொடு என இந்த 25000 பேர் எழுந்து நின்று காலத்தை வீணடிக்க விரும்பவில்லை. எங்களுக்கு இலங்கை குடியுரிமை கேட்டு பெற எங்களுக்கு உரிமை உண்டு. நான் ஒரு நாட்டின் பிரஜையாகவே பிறந்தேன். ஒரு நாட்டின் பிரஜையாகவே இறக்க வேண்டும் என உணர்வோடு போராட்டத்தை ஆரம்பித்தவர் அந்தோனி. அவர் இலங்கை நோக்கி வந்தார். அகதியாய் இந்தியா போனவர், அவசர அனுமதி அட்டை (emergency pass ) பெற்று இலங்கை வந்தார். அந்தோனி வந்தார்...

புனிதராக அல்லாது தூதராக .. ( not as saint but as envoy ) அகதிகளின் தூதராக.. அது 2008 ஆம் ஆண்டு .....( தொடரும் )



கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா, சுவாமியே சரணம் ஐயப்பா.

# கொழும்பு அளுத்மாவத்தை அகில இலங்கை ஆனந்த ஐயப்ப தேவஸ்தானம்

## 15வது வருட வருஷாபிஷேக கொடியேற்ற தீர்த்த (ஆராட்டு)

**நாளை மறுதினம் ஆடி மாதம் 11ம் நாள்**

## 27-07-2018 வெள்ளிக்கிழமை

**மாலை 5.30 மணிக்கு**

# கொடியேற்றம்!

**ஆடி மாதம் 11ஆம் நாள் (27-07-2018) வெள்ளிக்கிழமை கொடியேற்ற தினம் முதல்**
**ஆடி மாதம் 20ஆம் நாள் (05-08-2018) ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழா வரையுள்ள நித்திய நிகழ்வுகள்...**

| | |
|---|---|
| 27-07-2018 வெள்ளிக்கிழமை | அன்று காலை 6.00 மணிக்கு மஹாகணபதி ஹோமம், அஷ்டாபிஷேகம், மாலை 5.30 மணிக்கு கொடியேற்றம் (துவஜ ஆரோகணம்) |
| 28-07-2018 சனிக்கிழமை | அன்று காலை 9.00 மணிக்கு மகா மிருத்யஞ்ஜ ஹோமம், கலச அபிஷேகம். |
| 29-07-2018 ஞாயிற்றுக்கிழமை | அன்று காலை 8.00 மணிக்கு ஸ்ரீ ஐயப்ப சுவாமிக்கு கலச அபிஷேகம், **திருவிளக்கு பூஜையுடன் லட்சார்ச்சனை,** பகல் 1.00 மணிக்கு லட்சார்ச்சனை நிறைவு தீபாராதனை |
| 30-07-2018 திங்கட்கிழமை | அன்று காலை 9.00 மணிக்கு சுதர்ஷன ஹோமம், கலச அபிஷேகம். காலை 11.00 மணிக்கு ஸ்ரீ ஐயப்ப சுவாமிக்கு கலச அபிஷேகம். |
| 31-07-2018 செவ்வாய்க்கிழமை | அன்று காலை 9.00 மணிக்கு அன்னை மஞ்சமாதாவுக்கு விசேட அபிஷேக ஆராதனை. |
| 01-08-2018 புதன்கிழமை | அன்று காலை 9.00 மணிக்கு நாகராஜப் பிரபுவிற்கு அபிஷேக ஆராதனை, காலை 11.00 மணிக்கு ஸ்ரீ ஐயப்ப சுவாமிக்கு கலச அபிஷேகம். |
| 02-08-2018 வியாழக்கிழமை | அன்று காலை 9.00 மணிக்கு விசேட அஸ்ட திரவிய கலப அபிஷேகம |
| 03-08-2018 வெள்ளிக்கிழமை | அன்று காலை 9.00 மணிக்கு **கருப்பசாமி, கடுத்தசாமி விசேட அபிஷேக ஆராதனை.** இரவு 8.00 மணிக்கு ஸ்ரீ ஐயப்ப சுவாமிக்கு கலச அபிஷேகம் |
| 04-08-2018 சனிக்கிழமை | அன்று காலை 4.00 மணிக்கு கலச அபிஷேகம், பஞ்ச புண்ணிய யாகம், **பள்ளிவேட்டை திருவிழா,** இரவு 8.00 மணிக்கு சுவாமி பள்ளி அறை பூஜை |

**ஆடி மாதம் 20ஆம் நாள் (05-08-2018) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு**

# தேர்த்திருவிழா 2018

**ஸ்ரீ ஆனந்த ஐயப்ப சுவாமி சித்திரத்தேரில் திருவீதி உலா - தீர்த்தவாரி (ஆராட்டு)**

**அன்று காலை 3.00 மணிக்கு மஹா கணபதி ஹோமம், சுவாமி திருப்பள்ளி எழுச்சி, கலச அபிஷேகம், காலை 8.00 மணிக்கு சுவாமி சித்திரத்தேரில் எழுந்தருளி, திருவீதி உலா வந்து (அளுத்மாவத்தை வீதி வழியாக சென்று, காக்கைதீவு கடற்கரை சங்கமத்தில்) தீர்த்தவாரி (ஆராட்டு) நிகழ்வுடன் நிறைபெறவுள்ளது. மாலை 3.00 மணிக்கு கொடி இறக்கம் (துவஜ அவரோஹணம்)**

- கொடியேற்ற ஆராட்டு நிகழ்வுகள் யாவும் ஸ்ரீ ஆனந்த ஐயப்ப சுவாமியின் கிருபையால், சபரிமலை பரம்பரை அதிஉயர் தந்திரி மோகன் அவர்களாலும் மற்றும் ஆலய மேல் சாந்திகளினாலும் இனிதே நடைபெறும்.
- அடியார்கள் மேற்படி அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பித்து, அன்னதானம் எனும் தர்ம காரியத்தில் தங்கள் பங்களிப்பை வழங்கி, ஸ்ரீ ஆனந்த ஐயப்ப சுவாமியின் அருள் சித்திக்க வேண்டுகின்றோம்.
- மாதாந்தம் வரும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் சகலவிதமான மந்திர தந்திர உபாதைகள் நீங்க நடைபெறும் அதிவிசேட கருப்பசாமி பூஜையும், ராகு கேது மற்றும் காலசர்ப்ப தோஷம் விலகவும், திருமண பாக்கியம், நீடித்த மாங்கல்யம், குழந்தை பாக்கியம் பெற ஆயில்ய நட்சத்திரத்தில் நாகராஜா பூஜையும் நடைபெற்று வருகின்றது.
- கருப்பசாமியை குலதெய்வமாக வழிபடும் அனைத்து சமுதாய மக்களும் கருப்பசாமியின் அதிதேவதையான ஐயப்பசுவாமியின் ஆலயத்தில் அவருக்கு நடைபெறும் பூஜை மிகவும் உயர்ந்த கருப்பசாமி வழிபாடு ஆகும்.
- கொடியேற்ற திருவிழாவில் நடைபெறும் விஷேட மஞ்சல் மாதா பூஜை ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் ஆலயத்தில் அன்னை ஆதிபராசக்தியின் அம்சமாக வீற்றிருக்கும் அன்னையை வழிபட்டால் மாங்கல்ய பாக்கியமும், மாங்கல்ய நீடித்த நிலைப்பும் கிடைக்கப்பெறும்.

**கொடியேற்றம் முதல் சித்திரத்தேர் திருவிழா வரை நிகழ்வுகள் அனைத்தும் ஸ்ரீ ஆனந்த ஐயப்ப சுவாமியின் திருவருளால் மிகச்சிறப்பாக நடைபெறவிருப்பதால், ஆன்மீகப் பெருமக்கள் அனைவரும் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டு, ஸ்ரீ ஆனந்த ஐயப்ப சுவாமியின் திருவருள் பெற்றுய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றோம்.**

சுவாமியே சரணம் ஐயப்பா...
ROBINSON
Robinson (Pvt) Ltd
176, Main Street, Colombo 11. Tel: 2422565, 2433426

சுவாமியே சரணம் ஐயப்பா...
RAKSHANA IMPORTS & EXPORTS (PVT) LTD
181, Modera Street, Colombo 15.
SUN GEM & JEWELLERY (PVT) LTD
180, N.H.M Abdhul Carder Mawatha, Colombo 11. Tel: 2330664

சுவாமியே சரணம் ஐயப்பா...
Aruna's Uniforms
# 26A, Reclamation Road, Colombo 11.
Tel: 011 2447799 Fax: 011 2334797 Mob: 0710 347799
E-mail: arunasuniforms@yahoo.com

சுவாமியே சரணம் ஐயப்பா...
G & G CARGO AGENCY
Customs House Agents
Clearing & Forwarding - Sea & Air Cargo Imports & Exports
Head Office: 19, 8th lane, Nawala, Rajagiriya.
Branch: 490/1-1/1, Aluthmawatha Road, Colombo 15.
T: 011 2553170, 011 2527922
M: 0777 365 059 E: gngcargo@yahoo.com

**அகில இலங்கை ஆனந்த ஐயப்ப தேவஸ்தானம்: 478/67, அளுத்மாவத்தை வீதி, கொழும்பு 15. தொலைபேசி: 011 2540292**
E-mail: allceylon5@gmail.com Web: www.allceylonananthaayypadevasthanam.com FB: allceylonananthaayypadevasthanam


அக்னி தயாரிப்புகள்
தொடர்புகளுக்கு : புலயவெளி, பதுளை வீதி, செங்கலடி, மட்டக்களப்பு
தொலைபேசி : 0771516203
பேருந்துகள், லொறிகள், கார்கள் மற்றும் வான்களுக்கானவை
வாகனங்களை சுத்தம் செய்யும் துடைப்பான்கள்
(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் நிதி உதவியில் செயற்படும் ஒரு கிராம அபிவிருத்திக்கான உதவித் திட்டம்)


Manufacturers & Sellers of
All Kind of Gem & Jewellery
SUN GEM & JEWELLERY (pvt) Ltd.
Gold Centre, Shop No. 84, 180, N H M Abdhul Carder Mw, Colombo 11, Sri Lanka.
Tel : +94 11 2330664, +94 11 2330663 Fax : +94 11 2322204 Email : sungempvt@gmail.com

தரணிபோற்றத் தமிழ் வளர்ப்போம்!

# திருக்குறள் இன்பம் - 2

*(உலகப் பொதுமறையாக விளங்குகின்ற ஒப்பற்ற அறிவு நூலும், தனித்துவம்மிக்க காதல் இலக்கியமுமான திருக்குறள் இலக்கணமிட்டுள்ள காமத்துப்பாலின் இனிய காட்சிகளின் இன்பத்தைப் பகிர்ந்துகொள்ளும் கட்டுரைத்தொடர்.)*

சட்டத்தரணி, பாடும்மீன்
சு.ஸ்ரீகந்தராசா

## காதலைச் சொல்லும் கள்ளப் பார்வை!

ஒருவனுக்கும் ஒருத்திக்கும் காதல் கனிந்துவிட்டது. ஒருவர் மனதை ஒருவர் தெளிவாக தெரிந்துகொண்டார்கள். துல்லியமாகப் புரிந்துகொண்டார்கள். இந்த நிலையில் பலர் கூடியுள்ள இடத்திலே காண நேரும்போது, அந்தக் காதலர்கள் நடந்துகொள்ளும் விதம் மிகவும் விசித்திரமானது. ஆனால் அவர்களுக்கு அது இன்பமயமானது. அவன் அவளுக்குத் தெரியாமல் அவளைப் பார்ப்பான். ஒளித்திருந்து நோக்குவான். அவளும் அப்படித்தான். அவனுக்குத் தெரியாமல் அவனைப் பார்ப்பாள். நெஞ்சிலே ஓர் அச்சம் நிலவும். ஆனாலும், ஆசை அந்த அச்சத்தை வருடும். இவ்வாறு களவாகப்பார்ப்பதிலிருந்து அந்தக் காதலைக் குறைவாக நினைத்துவிடக்கூடாது. அதுதான் நிறைவான காதலுக்கு அடையாளம். இதனை வள்ளுவர் எப்படிச்சொல்கிறார் தெரியுமா?

கண்களவுகொள்ளும் சிறுநோக்கம் காமத்தின்
செம்பாகம் அன்று பெரிது (1092)

நான் அவளைப் பாராதபோது அவள் திருட்டுத்தனமாக என்னைப் பார்க்கிறாள். அவளின் அந்தப்பார்வை, எனது காதலை அவள் அரைகுறையாக ஏற்றமைக்கான அறிகுறியல்ல, முழுமையாக ஏற்றமைக்கான அறிகுறியாகும் என்பது இதன் கருத்து.

கண்களவு கொள்ளும் என்றால் கண்கள் களவு செய்கின்ற என்பது பொருள். அவளது கண்கள் திருட்டுத்தனம் புரிகின்றன. திருடுவது என்றால் என்ன? உடையவருக்குத் தெரியாமல் ஒருவரது உடைமையைக் கவர்வதுதானே?. இங்கே அவளது கண்கள் அவனுக்கும் தெரியாமல் அவனைப் பார்க்கின்றன. அதனால் கண்கள் திருடுவதாக எவ்வளவு இலக்கிய நயத்துடன் சொல்லியிருக்கிறார் வள்ளுவப் பெருந்தகை! கள்ளப்பார்வை பார்த்ததாகக் காதலர்கள் ஒருவரையொருவர் சுட்டிச்சொல்லி இன்புறுவது காதல்வாழ்வில் பொதுவானது. இதற்கு அடுத்த நிலை சிறிது வித்தியாசமானது.

## நெஞ்சில் காதல், நிலத்தில் கண்கள்!

அவன் பார்த்தாலும் பார்க்கட்டும், ஆனாலும் பார்க்கக்கூடாது என்ற நிலை. அதனால் அவன் அவளைப் பார்க்கும்போதெல்லாம் குனிந்த தலை நிமிராது அவள் தரையைப் பார்த்துக்கொண்டு நிற்பாள். அவன் பாராதபோது அவனைப் பார்க்கிறாள். தான் பார்ப்பதை அவன் கண்டுகொள்ளக்கூடிய கணத்தில், சட்டென்று தன் பார்வையை விலக்கி மீண்டும் தரையைப் பார்க்கிறாள். இத்தகைய இரம்மியமான உணர்வுகளில் நீந்தித் திளைக்கும் காதலர்களின் உள்ளக்கிடக்கையைப் பற்றி, ஒரு காதலன் சொல்வதுபோல வள்ளுவர் இப்படிச் சொல்கிறார்.


யான் நோக்கும் காலை நிலன் நோக்கும், நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும் (1094)

நான் அவளை உற்றுப் பார்க்கும்போதெல்லாம் அவள் நிலத்தைப்பார்த்துக்கொண்டு நிற்பாள். நேருக்கு நேர் என்னைப் பார்க்கவே மாட்டாள். ஆனால் நான் அவளை உற்றுப்பார்க்காதபோது, அவள் என்னை முழுமையாகப் பார்ப்பாள். இரசிப்பாள். புன்முறுவல் செய்வாள் என்பது இந்தக் குறளின் கருத்து. அதுசரி, ஒருவன் ஒருத்தியைப் பார்க்காத போது அவள், அவனைப்பார்த்ததும், இரசித்ததும், சிரித்ததும் அவனுக்கு எப்படித்தெரிந்தது? அங்குதான் பொய்யாமொழிப் புலவரின் புலமைத்திறனை நாம் கண்டு, வியந்து, இன்புறுகிறோம். பார்த்தல் என்ற வார்த்தையை அவர் பயன்படுத்தவில்லை. “நோக்குதல்” என்றே குறிப்பிடுகிறார். நோக்குதல் என்றால் உற்றுப்பார்த்தல் என்று பொருள். நோக்காக்கால் என்றால் உற்றுப்பார்க்காத வேளைகளில் என்பது பொருள். அதாவது பார்க்காததுபோலப் பார்த்தவேளைகளில் என்று சொல்லாம். ஆகவே, அவளை அவன் பார்ப்பதை அவள் காண்கின்றபோது தலைகவிழ்ந்து நிலத்தைப் பார்க்கிறாள். அவள் காணாதவகையில் அவன் பாராமல் பார்க்கும்போது, அவள் பார்க்கிறாள், மெல்லச் சிரிக்கிறாள் என்று நாம் விரிவான பொருள்கொள்ளல்வேண்டும். இந்தக்குறள் கொடுத்த தாக்கத்தினால்தான் ”உன்னை நான் பார்க்கும் போது மண்ணை நீ பார்க்கின்றாயே..” என்ற திரைப்படப் பாடல் வரி பிறந்திருக்க வேண்டும். இதனை அடுத்த குறளிலே வள்ளுவர் இன்னும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

## உள்ளத்தைக் காட்டும் ஓரப்பார்வை!

குறிக்கொண்டு நோக்காமை அல்லால், ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும் (1095)

நேருக்கு நேர் என்னை முழுமையாகப் பார்க்காமல், கடைக்கண்ணால் என்னைப் பார்த்துத் தனக்குள் சிரித்துக்கொள்வாள்



என்பது இந்தக் குறளின் நேரடிக் கருத்து.

இங்கே அவள் பார்ப்பதை அவன் பார்க்கின்றான் என்பது அவளுக்குத் தெரியும். அவ்வாறு அவன் தன்னைப் பார்க்கவேண்டும் என்பதுதான் அவளது ஆசை. ஆனால் அவன் பார்க்கும்போது, முழுமையாக அவனை நிமிர்ந்துபார்க்க முடியாதவாறு ஆசைக்கு அவளது நாணம் தடைபோடுகிறது. அதனால், ஓரக்கண்ணால் பார்த்து, திருப்தியடைந்து, உள்ளம் மகிழ்கின்றாள். அப்போது ஆசை நாணத்தை ஏமாற்றி விடுகிறது. பொங்கியெழும் காதல் உணர்விலே அங்கமெல்லாம் பூரித்து விடுகின்றது. அவனைப் பார்ப்பதிலே அவளுக்கு இன்பம். அதேவேளை நான் தன்னைப் பார்க்கின்றேனா என்பதை உறுதிசெய்துகொள்வதிலே இரட்டிப்பு இன்பம். பார்ப்பது என்னவோ ஓரக்கண்ணால்தான். ஆனால் அவளது எண்ணம் முழுவதிலுமே அவனே நிறைந்திருப்பான். அதைத்தான் “நகும்” என்ற சொல் உணர்த்திநிற்கிறது.

## அன்பைக்காட்டும் அலட்சியப் பார்வை!

அவனும் அவளும் கருத்தொருமித்த காதலர்கள். யாரும் இல்லாத தனிமையிலே இருவரும் நேரம் போவது தெரியாமல் கதைத்துக்கொண்டிருப்பார்கள். கையோடு கைகோர்த்துக் களித்திருப்பார்கள். மெய்யோடு மெய் அணைத்து இன்புறுவார்கள். ஆனால், பொது இடங்களில் சந்திக்க நேரும்போதெல்லாம், ஒருவரையொருவர் அறியாதவர்போல நடந்துகொள்வார்கள். முன்பின் அறிமுகம் இல்லாதவர்கள்போல முகம்பார்க்காது இருப்பார்கள். எங்கோ பார்ப்பதுபோலப் பார்த்து ஒருவர் முகத்தை மற்றவர் காணாததுபோல ஒருகணம் காண்பார்கள். மற்றவர்களுக்குத் தெரியாமல் கடைக்கண்ணால் கவனிப்பார்கள். இருவரின் கண்களும் நேருக்குநேர் சந்தித்துவிட்டால் எவ்வித உணர்ச்சியையும் வெளிப்படுத்தாமல் இருப்பார்கள். அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் சந்திக்கும்போது இயல்பாகச் சிந்துகின்ற புன்னகைகூடப் பொது இடங்களில் சந்திக்கும்போது இவர்களிடம் பிறக்காது.

அவளின் நண்பிகளோடு அவன் பேசுவான். பகிடிகள் விடுவான். அவர்களோடு நிற்கும் அவளோடு மட்டும் பேசவே மாட்டான். அதைப்போலவே, அவனின் நண்பர்களோடு அவள் சர்வசாதாரணமாகக் கதைப்பாள். சிரிப்பாள். அவர்களோடு நின்றுகொண்டிருக்கும் அவனைக் கண்டுகொள்ளவே மாட்டாள்.

ஊரிலே கோயில் திருவிழா. ஊர்மக்கள் எல்லாம் அங்கே கூடியிருப்பார்கள். தன் பெற்றோருடன் அவளது உறவினர்களுடன் அவளும் அங்கே ஓரிடத்தில் அமர்ந்திருப்பாள். அவன் அங்கே வரமாட்டானா, அவனைக் காணமாட்டோமா என்று அவள் மனம் ஏங்கும். யாருடன் எதைக் கதைத்துக்கொண்டிருந்தாலும், அதிலெல்லாம் அவளது முழுக்கவனம் இராது. செவிகள் கேட்கும், வாய் கதைக்கும். அவளது கண்கள் மட்டும் அங்கும் இங்கும் அவனைத் தேடிக்கொண்டேயிருக்கும். ஆனால், அவன் வரும்போது, அவனைக் கண்டவுடன் அவளது நெஞ்சிலே இனம் புரியாததோர் உணர்வு சட்டென்று எழும். ஒருவித பயம் வரும். அச்சமும், மகிழ்ச்சியும் கலந்த அந்த உணர்வை என்னென்று சொல்வது? அவனோ அவளை எங்கே எங்கே என்று கோயில் வீதிகளெல்லாம் தேடித் தேடி அலைவான். இறுதியில் கண்டபோது அவளைக் காணாதவன் போலவும், அதேவேளை அவள் தன்னைக் காணவேண்டும் என்று அதற்கு வசதியாக அவளின் பார்வைக்குள் படக்கூடியவிதமாகவும் நடந்து செல்வான். அல்லது இசைவான ஓரிடத்தில் அமர்ந்து கொள்வான். இருவரும் மற்றவர்களின் பார்வைக்குத் தப்பிக்கொண்டு, ஒருவரையொருவர் பார்த்துக்கொள்வார்கள். அந்தப்பார்வைகூட ஓர் அன்னியப் பார்வையாகவே இருக்கும். ஆனால், உள்ளங்களில் அன்னியோன்யம் நிறைந்திருக்கும். இதயங்கள் இடம்மாறிக் குளிர்ந்திருக்கும்.

> ‘உன்னை நான் பார்க்கும் போது மண்ணை நீ பார்க்கின்றாயே..’

ஆம்! அதுதான் காதல். அதுதான் காதலர்களுக்கிடையேயான நளினமான உறவு. நம்மிடையே பலர் அந்தச் சுகந்தமான இன்பத்தை அனுபவித்திருப்போம். அந்தக் காதல்கண்ணாம்பூச்சி விளையாட்டிலே களித்திருப்போம். இதனை, இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே திருவள்ளுவர் மிகவும் சிறப்பாகச் சொல்லியிருக்கிறார் என்றால், அந்த வள்ளுவப் பெருந்தகையின் பெருமையைப் பேசுதற்கு வார்த்தைகள் ஏது? பண்டைத்தமிழ் மக்களின் வாழ்க்கை முறையில் காதலுக்கு அத்தகைய முக்கியமான இடம் இருந்திருக்கிறது என்பதாலும், காதல் ஒழுக்கம் அவர்களது பண்பாடாகவே இருந்திருக்கிறது என்பதாலும்தான் அதனையெல்லாம், கண்ணாரக் கண்டும், காதாரக்கேட்டும், தானாக அனுபவித்து உணர்ந்தும் வள்ளுவர் வாய்மொழிந்திருக்கிறார்.

ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே யுள (1099)

பொது இடங்களிலே ஒருவரையொருவர் காணநேரும்போது முன்பின் அறிமுகமற்ற அயலாரைப் பார்ப்பதுபோல் நடந்துகொள்வது உண்மையான காதலர்களிடமே உள்ள குணமாகும் என்பது இந்தக் குறளின் நேரடிக் கருத்து.

இரண்டே வரிகளில் காதலர்களின் உணர்வலைகளையும், ஒழுக்க முறையினையும் தெள்ளத் தெளிவாக இந்தக்குறளில் வள்ளுவப் பெருந்தகை காட்டியிருப்பதை அறியும்போது பண்டைத்தமிழ் மக்களின் பண்பாடுமிக்க காதல் வாழ்வு நம் மனதுள் புகுந்து பரவசமூட்டுகின்றது.

தமிழ் இலக்கிய ஆர்வலர்களுக்காக மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் சார்பில், அதன் தலைவர், புரவலர் விநாயமூர்த்தி ரஞ்சிதமூர்த்தியின் சமர்ப்பணம் இந்தப் பக்கம்.

# மருத்துவம் மட்டுமல்ல மரங்களும் மேலான மருத்துவமே!



எஸ்.எல்.எம். ஹனீ.ஃ.பாவிடம் இருந்து...

வைத்திய அத்தியட்சகர்,
தள வைத்தியசாலை,
வாழைச்சேனை.

ஐயா,

வணக்கமும் வாழ்த்துக்களும்...

கொதிக்கும் இந்த இரவில், தங்களுக்கு இப்படியொரு கடிதம் எழுதக் கிடைத்தது துரதிஷ்டமே.

வாழைச்சேனை மருத்துவமனையில் நேற்று நடந்த இந்த கொடுமையை இன்று காலையில்தான் அந்த வழியால் சென்ற என் கண்களில் பட்டது.





ஒவ்வொரு நாளும் நோயாளிகளை கரங்கள் அசைத்து வரவேற்கும் மரங்களில் ஒன்றின் கிளைகளை ஈவிரக்கம் இன்றி தறித்து அப்புறப்படுத்திய உங்கள் மீது இனம்புரியாத வெப்பிசாரம்.

எனது உசுக்குட்டிப் பருவத்தில் 1950களில் வீட்டுக்குத் தெரியாமல் ஆஸ்பத்திரியில் பழுத்துச் சொரியும் நாவற் பழங்களுக்காக பாடசாலைக்கும் சமூகமளிக்காமல், வந்துபோவேன். அப்படியொரு உறவு.

அங்குள்ள அத்தனை மரங்களையும் தடவிக்கொடுத்து வளர்ந்தவர்களில் நானும் ஒருவன். நீரூற்றி வளர்த்தவர்கள் அங்கு கடமையாற்ற வந்த உங்களைப் போன்ற வைத்தியர்கள்.

நீங்கள் வருவீர்கள் போவீர்கள். ஆனால் நாங்களும் இந்த மரங்களும் இரத்த உறவுகள். நீங்கள் தறித்தது மரங்களை அல்ல உறவுகளின் உடல் உறுப்புகளை.

உங்கள் மருத்துவமனை வளாகம் வெளியில் தெரிவதில்லை என்னும் ஒரே ஊனக்காரணத்திற்காக இதை தறித்ததை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

உங்கள் வருகையைத் தொடர்ந்து கடந்த 2 வருடங்களில் எங்கள் வைத்தியசாலை பல அபிவிருத்திகளை அடைந்தது. மருத்துவ உபகரணங்கள், சிறுவர் பூங்கா, உள்ளக வீதி, சுற்று மதில்,... என்று பிரதி சுகாதார அமைச்சர் மான்புமிகு பைசர் காசிமின் அனுசரனையில் உங்களின் அயராத முயற்சியில் இவைகள் எல்லாம் சாத்தியமாகியுள்ளன. அவற்றுக்காக வாழ்த்துக்கள்.

ஆனாலும் ஆஸ்பத்திரியின் முகப்பை அலங்கரித்து காய்த்துச் சிலிர்த்துக் கிடந்த அழகிய அந்த மா மரத்தினை மொட்டையடித்ததை மனசு ஏற்றுக் கொள்ள மறுக்கின்றது.

நண்பரே! செவ்விந்தியத் தலைவர் ஸியால்ட் அவர்கள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் வாஸிங்டன் அவர்களுக்கு எழுதிய கடிதத்தை ஒரு முறை நீங்களும் படித்துப் பாருங்கள்.

அங்குள்ள மரங்களில் அன்பு காட்டுங்கள்...

உங்கள் நினைவாக நான்கு மரக்கன்றுகளையாவது புதிதாக நடுவுங்கள்...

வருத்தமுற்று அங்கு வருகை தருபவர்களுக்கு மருத்துவம் மட்டுமல்ல மரங்களும் மேலான மருத்துவமே...

# மழை வாசனையின் மகத்துவம் என்ன?





அது ஒரு கிருமி!!!

நீண்ட கால வறண்ட காலநிலைக்கு பிறகு மழை பெய்தால் நிலத்திலிருந்து ஒரு வாசம் வருமல்லவா ? அது பலருக்கும் பிடிக்கும்.

உண்மையில் மழைவாசத்தின் பின்னணியில் அறிவியலும் இருக்கிறது.

இடியுடன் கூடிய மழை பெய்த பிறகு, சுத்தமான காற்றும் ஈரமான நிலத்திலிருந்து ஒரு நல்ல வாசமும் வருவதில் பாக்டீரியா, செடிகள் மற்றும் மின்னல் ஆகியவற்றின் பங்களிப்பு இருக்கிறது.

பெட்ரிகோர் என அறியப்படும் அந்த வாசனை குறித்து அறிவியல் அறிஞர்கள் நீண்டகாலமாக ஆராய்ந்துவருகிறார்கள். வாசனைத் திரவியம் தயாரிப்பவர்களும் மழை வாசம் குறித்து முழுமையாக அறிந்து கொள்ள ஆர்வத்துடன் இருக்கிறார்கள்.

ஈரமான பூமி

----------------------------------------------------------------

மழை வறண்ட நிலத்தை அடைந்தவுடன் வரும் வாசனைக்கு காரணம் ஒரு வகை பாக்டீரியாக்கள். இவை நிலத்தில் அபரிமிதமான அளவில் இருக்கின்றன என விவரிக்கிறார் ஜான் இன்னெஸ் மையத்தின் மூலக்கூற்று நுண்ணுயிரியியல் துறை தலைவரும் பேராசிரியருமான மார்க் பட்னர்.

""ஆகவே நீங்கள் ஈரமான மண் வாசனையை நுகர்வதாக உணர்ந்தால், உண்மையில் நீங்கள் ஒரு வகை பாக்டீரியாவிலிருந்து வரும் மூலக்கூறுகளை நுகர்கிறீர்கள் என அர்த்தம்"" என பிபிசியிடம் தெரிவிக்கிறார் அவர்.

ஜியோஸ்மின் எனும் அந்த மூலக்கூறு ஸ்ட்ரெப்டோமைசெஸால் உருவாகிறது. பெரும்பாலும் நல்ல ஆரோக்கியமான மண்ணில் இந்த பாக்டீரியா இருக்கிறது. இப்பாக்டீரியாக்கள் ஆன்டிபயாடிக் மருந்துகளை தயாரிக்கவும் உதவும்.

தண்ணீர் துளிகள் மண்ணை அடையும்போது ஜியோஸ்மின் காற்றில் வெளியிடப்படுகிறது. மழை பெய்ததற்கு பிறகு இவை ஏராளமாக வெளிவருகிறது. ஜியோஸ்மின் தற்போது பரவலாக வாசனை திரவிய மூலப்பொருளாக பயன்படுத்தப்படுகிறது.

""இது மிகவும் ஆற்றல்மிக்க மூலப்பொருளாகும். இதனை மிகவும் நீர்த்துபோகச் செய்தாலும் உங்களால் எளிதாக அந்த வாசனையை கண்டுபிடித்து விட முடியும். ஜியோஸ்மினுக்கும் மனிதர்களுக்கும் ஒரு வித்தியாசமான தொடர்பு இருக்கிறது. இந்த மூலப்பொருளின் வாசனை மற்றும் சுவை பலருக்கும் பிடிக்காது"" என்கிறார் வாசனை திரவியம் தயாரிக்கும் மரினா பார்சினில்லா.

""இது மனிதர்களுக்கு நச்சானது அல்ல எனினும் இதன் மீச்சிறு பகுதியை மனிதர்கள் சுவைக்க முகர நேர்ந்தாலும் அவர்கள் மிகவும் அசௌகரியமாக உணர்வர். ஏன் மனிதர்களுக்கு ஜியோஸ்மின் பிடிப்பதில்லை என்பது எங்களுக்கு தெரியவில்லை"" என்கிறார் டென்மார்க் ஆல்போர்க் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஜெப்பே லுண்ட் நீல்சன்.

பெட்ரிகோர் :

----------------------------------------------------------------

இந்தப் பதத்தினை ஜாய் பியர் மற்றும் ரிச்சர்டு தாமஸ் என்ற ஆராய்ச்சியாளர்கள் 1964-ல் அவர்கள் வெளியிட்ட ஆர்கில்லெசியஸ் வாடையின் இயல்பு எனும் கட்டுரையில் பயன்படுத்தினர். இந்த கட்டுரை நேச்சர் எனும் பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

தாவரங்கள்:

----------------------------------------------------------------

பேராசிரியர் நீல்சன் கருத்துப்படி, ஜியோஸ்மின் டெர்பீன்ஸ் உடன் தொடர்புடையது என ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. டெர்பீன்ஸ் என்பது பல தாவரங்களின் வாசனைக்கு மூலாதாரமாக இருக்கிறது.

லண்டனின் கீவில் உள்ள ராயல் தாவரவியல் பூங்கா ஆராய்ச்சி தலைவரான பேராசிரியர் பிலிப் ஸ்டீவன்சன், ""மழையால் இந்த வாசனைகளை வெளியே கொண்டு வர முடியும் "" என்கிறார்.

""தாவர இலை முடியில் இந்த தாவர வேதியல் உற்பத்தி செய்யப்படுகிறது. மழை பெய்யும்போது சேதப்படுத்தப்பட்டு அந்த தாவர இரசாயணங்களின் கூட்டு பொருள்கள் வெளிவருகின்றன"" என பிபிசியிடம் கூறினார்.

வறண்ட காலநிலையில் தாவரத்தின் வளர்சிதை மாற்றம் தாமதப்படுத்தப்படுகிறது. மழை பெய்யும்போது அவை புத்துணர்வு அடைவதால் தாவரங்கள் இந்த வாசனையை வெளிவிடுகின்றன.

மின்னல் :

----------------------------------------------------------------

இடி மின்னலுடன் கூடிய மழையும் இதில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கிறது.

மிஸ்ஸிஸிப்பி பல்கலைக்கழக பேராசிரியர் மரிபெத் ஸ்டோல்ஜென்பர்க் விவரிக்கையில், ""மின்னல் மட்டுமின்றி, இடியும் மழையும் காற்றின் தரத்தை மேம்படுத்தும். தூ



சிகள் மற்றும் வாயுக்களில் இருக்கும் திண்ம மற்றும் திரவ வடிவிலான சிறு பொருட்கள் (ஏரோசொல்ஸ்) மற்றும் வேறு சில பொருட்கள் மழை பெய்யும்போது வெளியேறி காற்று சுத்தப்படுத்தப்படுகிறது"" என்கிறார்.

--(மேரி ஹால்டன், அறிவியல் செய்தியாளர், பிபிசி நியூஸ்) ---

# மாற்றுத்திறனாளிகளையும் சமமாக மதிப்போம்



அங்கவீனர்கள், வலுவிழந்தோர் எனும் பதமானது இன்று மாற்றுத்திறனாளிகள் என்ற பதத்தினால் பிரதியீடு செய்யப்பட்டுள்ளது. உடல் உள ரீதியான குறைபாடு காரணமாக தமது வாழ்வியல் தேவைகளை சுயமாக நிறைவேற்றிக் கொள்ள முடியாதவர்கள் மாற்றுத்திறனாளிகள் என கருதப்படுகின்றனர்.

'விழிப்புலன், செவிப்புலன், பேச்சுக் குறைப்பாடு, நகர்தல், புரிந்து கொள்ளும் ஆற்றல், உளம் சார் பிரச்சினைகள் என்பவற்றின் அடிப்படையில் மாற்றுத்திறனாளிகளை பலவாறு வகைப்படுத்துகின்றனர். "பிறப்பிலிருந்தோ அல்லது விபத்துக்களினாலோ உடல் உள ஆற்றளில் ஒருவருக்கு ஏதாவது குறைப்பாடு ஏற்படுவதால் வாழ்க்கையில் அத்தியாவசிய தேவைகளை செய்வதை உறுதிப்படுத்த முடியாத குறையே மாற்றுத்திறன் எனப்படுகின்றது". அதாவது உடலிலோ மனதிலோ ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக ஒருவரால் ஒரு சில செயல்களை சாதாரண மனிதர்களைப் போன்று மேற்கொள்ள முடியாது போகின்ற போது அவர்களை மாற்றுத்திறனாளிகள் என்கின்றனர்.

மாற்றுத்திறனை ஏற்படுத்துகின்ற காரணிகளை இயற்கையான காரணிகள், மனிதனால் உருவாக்கப்படுகின்ற காரணிகள் என வகைப்படுத்தி நோக்கலாம். இயற்கையான காரணி எனப்படுவது தாயின் கருவில் ஏற்படும் பாதிப்பு, மரபணுவினால் பிறப்பினால் ஏற்படும் மாற்றம், தீராத நோய் என்பனவாகும். மனிதனால் உருவாக்கப்படும் செயற்கை காரணிகளான யுத்தம், போதைப் பொருள் பாவனை, அணுவாயுத பரிசோதனை, வாகன விபத்துக்கள், தொழிற்சாலை விபத்துக்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறு இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ ஒருவரின் சாதாரண நிலை, அசாதாரண நிலைக்கு மாறி, ஏனைய மனிதர்களைப் போன்று தொழிற்பட முடியாதிருக்கும் நிலையை மாற்றுத்திறன் என அழைக்கின்றனர்.



தற்போதைய உலகமயமாதல் சூழலில் உலக மக்கள் தொகையில் 15 சதவீதத்திற்கு மேற்பட்ட மக்கள் மாற்றுத்திறனாளிகளாக காணப்படுகின்றனர். 2001ஆம் ஆண்டு இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின் படி மொத்த சனத்தொகையில் 1.6 மூ வீதமானோர் மாற்றுத்திறனாளிகளாக அடையாளம் காணப்பட்டனர். இலங்கையில் கடந்த மூன்று தசாப்த காலங்களாக நடந்த உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கை கணிசமானளவு அதிகரித்தது. வடக்கில் மாத்திரம் 18 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் இருப்பதாக சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சு கூறுகின்றது.

உலகளாவிய ரீதியில் அவதானிக்கும் போது மாற்றுத்திறனிற்கு உள்ளான மக்கள் குறைந்த சுகாதார நிலையையும், குறைந்தளவான கல்வி அடைவு மட்டத்தையும், குறைந்த வருமானத்தையும், கூடிய வறுமை வீதத்தையும் கொண்டுள்ளனர். சாதாரண மக்களைப் போன்று கல்வி, சுகாதார, போக்குவரத்து, வேலைவாய்ப்புக்கள் மற்றும் சேவைகளை இவர்களால் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதுவே இதற்குரிய காரணமாகும். குறிப்பாக அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் உடல் உள ரீதியாக ஆரோக்கியமுள்ள மனிதர்கள் கூட இவற்றை பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கும் அதேவேளை மாற்று திறனுடையோர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். மாற்றுத்திறனாளிகள் மன ரீதியாக சோர்வடைந்து உள ரீதியாக பாதிக்கப்பட்டு, சமூக பொருளாதார வழிகளிலும், சமூகத்திலிருந்து ஓரங்கட்டப்படுகின்றனர். இவர்களை சமூகத்தோடு இணைக்கும் வகையில் வசதிகளை ஏற்படுத்த வேண்டிய தேவைப்பாடு அனைவருக்கும் உள்ளது. வளர்ந்த நாடுகளில் மாற்றுத்திறன் கொண்ட நபர்களின் சமத்துவத்திற்காக பல்வேறு சட்டத்திட்டங்கள் உருவாக்கி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அந்தவகையில் அபிவிருத்தியடைந்த மேலைத்தேய நாடுகளில் பெரிய கட்டிடங்களில் மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் சாய்தள வசதிகள் அமைக்கப்பட்டுள்ளதனை காணமுடிகின்றது. இலங்கையைப் பொறுத்த வரையில் பொதுச் சேவைகளை வழங்கக்கூடிய கட்டிடங்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில கட்டிடங்களைத் தவிர பெரும்பாலானவற்றில் சாய்தள வசதி இன்மையால் சக்கர நாற்காலிகளைப் பயன்படுத்தும் மாற்றுத்திறனாளிகள் தமது தேவைகளை தாமே சுயமாக நிறைவேற்றிக் கொள்ள முடியாதுள்ளனர். தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள ஒன்றில் பிறரின் உதவியை நாட வேண்டியுள்ளது. அல்லது நீண்ட நேரத்தை செலவளிக்க வேண்டியுள்ளது. இது அவர்களை மேலும் பாதிப்பிற்குள்ளாக்குகின்றது.

கல்வித்துறையை நோக்குகின்ற போது, ஏனையவர்களைப் போன்று கல்வி வாய்ப்பை பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு மாற்றுத்திறனாளிகளுக்கு கிடைப்பது இல்லை. மாற்றுத்திறனுடைய மாணவர்கள் சாதாரண பள்ளிகளில் சென்று கல்வி கற்க முடியாதுள்ளது. ஜப்பான் போன்ற நாடுகளில் "உள்ளடங்கள் கல்வி" என்ற செயற்றிட்டத்தின் ஊடாக, மாற்றுத்திறன் உடையோரை சாதாரண பாடசாலைகளில் ஏனைய மாணவர்களோடு இணைத்து கல்வி கற்பிக்கும் செயற்பாடு வெற்றியளித்துள்ளது. இலங்கையில் அத்தகைய திட்டம் நடைமுறையில் இருந்த போதிலும் வெற்றியளிக்கவில்லை. குறிப்பாக சில தமிழ் பாடசாலைகளின் அதிபர்கள் மாற்றுத்திறனுடைய மாணவர்களை தமது பாடசாலைகளில் இணைத்துக் கொள்ள மறுக்கின்றனர். மாற்றுத்திறனுடையோர்கள் மற்றைய மாணவர்களோடு இணையும் போது சாதாரண மாணவர்கள், உள ரீதியாக பாதிப்புறுவார்கள் என்ற சிறுமைத்தனச் சிந்தனையில் சில அதிபர்கள் தமது பாடசாலைகளில் இயங்கி வந்த மாற்றுத்திறனுடையோர் வகுப்பறைகளை இல்லாது செய்திருப்பது வேதனைக்குரிய விடயமாகும். பொதுப்போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வாகனங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான ஆசனங்கள் ஒதுக்கப்பட்ட போதிலும் அதன் பலனை மாற்றுத்திறனாளிகள் பெறவேண்டுமென்று பிரயாணிகளோ, நடத்துனரோ, ஓட்டுனரோ கண்டு கொள்வதில்லை. சக்கர நாற்களாலிகளில் செல்லும் மாற்றுத்திறனாளிகள் பொதுப்போக்குவரத்தினை பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு மேலைத்தேய நாடுகளில் காணப்பட்ட போதிலும் மூன்றாம் மண்டல நாடுகளில் அத்தகைய வசதிகள் இன்னும் ஏற்படுத்தப்படவில்லை.

1988ஆம் ஆண்டின் இலங்கை பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கையில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் மாற்றுத்திறனுள்ள நபர்கள் தொழில் செய்யக்கூடிய வாய்ப்பு இருக்குமானால் திறமை தகுதிக்கு ஏற்ப மூன்று சதவீதம் முன்னுரிமையின் அடிப்படையில் தொழில் வாய்ப்பு வழங்க வேண்டுமென குறிப்பிடுகின்ற போதிலும், அவை நடைமுறையில் எட்டாக் கனியாகவே இருந்து வருகின்றன. சில நாடுகளில் பத்து சதவீதம் மாற்றுதிறனாளிகளுக்காக வேலைவாய்ப்பிற்கென ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிலையில் இலங்கையில் மூன்று சதவீதமானோருக்கேனும் இத்தகைய வாய்ப்பு வழங்கப்படாமை வருந்தத்தக்க விடயமாகும். மாற்று திறனாளிகளை வேலைக்கு அமர்த்தும் போது குறைந்த ஊதியத்துடன் வேலைக்கமர்த்தல், நீண்ட நேர வேலையை செய்வித்தல், அவர்களின் உடல் உள அசௌகரியங்களை கவனத்திற் கொள்ளாமை போன்ற பொருத்தமற்ற செயற்பாடுகளும் இலங்கையில் இடம்பெற்று வருகின்றன. மாற்றுத்திறனாளிகளுக்கு விஷேட சலுகைகள் வழங்க வேண்டும் என்பதற்காக அவர்களை வேலையில் இணைத்துக் கொள்ளவும் மறுக்கின்றனர். மேலைத்தேய நாடுகளிலும், தொழில் மையங்களில் மாற்றுத்திறனுடையோரின் வாகனங்களை நிறுத்துவதற்கென தரிப்பிட வசதிகள் கூட செய்துக் கொடுக்கப்பட்டுள்ளன. மலசல கூடங்கள் சக்கர நாற்காலிகளை உள்ளே செலுத்தும் வகையில் அகன்ற கதவுகளையும். விசாலமான இடப்பரப்பினையும் கொண்டதாக ஒழுங்கமைக்கப்படுகின்றன. இத்தகைய வசதிகள் இலங்கையில் ஒரு சில இடங்களிலேயே காணக்கூடியதாக உள்ளது. மாற்றுத்திறனாளிகள் எதிர்நோக்கும் தடைகள் ஒன்றோடொன்று இடைத்தொடர்புடையனவையாக காணப்படுகின்றன. அத்தகைய தடைகளை,

01. பௌதீக தடைகள்
02. சமூகத் தடைகள்
03. பொருளாதாரத் தடைகள்
04. சட்டம் மற்றும் நீதி சார் தடைகள்

மாற்றுத்திறனாளிகள் தாம் வாழுகின்ற சூழலில் இடத்திற்கிடம் நகர்வதற்கு விஷேடமான கருவிகள் தேவைப்படும். உதாரணம் சக்கரநாற்காலி, ஊன்று கோல் போன்றன. இக் கருவிகள் இல்லாத போது மாற்றுத் திறனாளிகள் சமூகத் தொடர்புகளை விருத்தி செய்ய முடியாது போகும். எனவே மாற்றுத்திறனாளிகள் அணுகக் கூடிய வகையில் பௌதீச் சூழலானது மாற்றியமைக்கப்பட வேண்டும். உதாரணமாக கட்டடங்களுக்குள் பிரவேசிக்கக் கூடிய வகையில் சாய்தள வசதிகள், சக்கர நாற்காலிகள் செல்லக் கூடிய வகையில் பெரிய மலசலக் கூடங்கள் ஒழுங்கமைக்கப்படவேண்டும்.

மாற்றுத் திறனாளிகள் பற்றிய புரிதல், அறிவுதிறன், மனப்பாங்கு மற்றும் அணுகுமுறைகள் என்பனவே சமூகம் சார்ந்தத் தடைகளாகும். உதாரணமாக மாற்றுத்திறனாளிகளின் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் படிப்பிற்கு செலவு செய்வது வீண்செலவு எனக் கருதுகின்றனர். அதேபோன்று ஒரு ஆசிரியர் மாற்றுத்திறனாளிக்காக நேரத்தை ஒதுக்காமல் இருக்கின்றார். பொதுவாக மாற்றுத்திறனாளிகளில் பலர் வறிய குடும்பங்களிலே வாழ்ந்து வருகின்றனர். இயலாமையின் காரணமாக தொழில் செய்யாமை, அதிகரித்த மருத்துவ செலவு போன்றவற்றினால் வறுமை நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள்.

**கருப்பையா பிரபாகரன் JP**
**BA, MA, PG.Dip.In.Edu, Med**
**மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய சபை அங்கத்தவர்**

**மாற்றுத்திறனாளிகள் ஒரு சுமை அல்ல. புரிந்துகொள்ளப்பட வேண்டியவர்கள்.**


மாற்றுத் திறனாளிகள் பௌதீக, சமூக மற்றும் பொருளாதாரத் தடைகளை நீக்க சட்ட விதிகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகளை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாற்றுத் திறனாளிகளின் நலனைப் பேணும் வகையில் மாற்றுத் திறனாளிகளின் உரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1996 ஆண்டில் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய சபை உருவாக்கப்பட்டது. தேசிய சபையின் ஊடாக மாதத்திற்கு ஒரு முறை கூடும் கூட்டத் தொடர்களில் மாற்றுத் திறனாளிகளின் நலன் பற்றித் தீர்க்கமாக ஆராய்ந்து முடிவுகள் எடுக்கப்பட்ட போதிலும் அவை காத்திரமான நடைமுறைப் பிரயோகத்தை எட்டவில்லை என்றே கூறலாம்.

மாற்றுத் திறனாளிகள் சமமாக மதிக்கப்பட வேண்டுமாயின் அவர்கள் எதிர்நோக்குகின்ற உள, உடல், சமூகச் சவால்களைத் தீர்த்துக் கொள்வது காலத்தின் கட்டாயத் தேவையாக உள்ளது. மாற்றுத் திறனாளிகள் தன்னிச்சையாக தங்களது தேவைகளை தாங்களே பூர்த்தி செய்யக் கூடிய நிலையை ஏற்படுத்தி மற்றவர்களின் தயவில் தங்கியிருக்கும் நிலையை இல்லாது செய்ய வேண்டும்.

# மூதாதையரின் காலடிகள்

## மூதூரில் டச்சுக்காரர் கட்டிய முதல் கோட்டை



இலங்கை அரசியல் வரலாற்றில் டச்சுக்காரர்களே பெருமளவிலான கோட்டைகளை அமைத்து தம்மை பாதுகாப்பதற்கான வழி முற்சிகளை மேற்கொண்டனர். அந்த வகையில் டச்சுக்காரர் முதன் முதல் அமைத்த கோட்டை மூதூரிலேயே அமைந்தது. மூதூர் வரலாற்றுக் காலங்களில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருந்திருக்கிறது என்பதற்கு இந்த கோட்டை பற்றிய தகவல் முக்கிய சான்றாக உள்ளது.

மூதூர் இலங்கை வரலாற்றில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடம் என்பதை தொன்மை வரலாறும் அண்மைய வரலாற்று நிகழ்வுகளும் சாட்சிகளாக உள்ளன.

போத்துகீசர் ஒல்லாந்தர் காலத்திலும் ஆங்கிலேயர் காலத்திலும் முக்கியத்துவத்தின் வழி சமூக அரசியல் நிகழ்வுகள் மூதூரின் தனித்துவம் பேணப்பட்டமையயை அறிய முடிகிறது.

இலங்கையில் ஒல்லாந்தர் முதன்முதல் கட்டிய கோட்டை மூதூரிலேயே கட்டப்பட்டதாக ஒல்லாந்தர் காலத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

"கொட்டியாரக் கோட்டை என்பது இலங்கையில் ஒல்லாந்தரால் கட்டப்பட்ட கோட்டைகளுள் ஒன்றாகும். இதுவே ஒல்லாந்தரால் இலங்கையில் கட்டப்பட்ட முதலாவது கோட்டை ஆகும். இது கொட்டியாரக்குடாவின் தெற்குப் பகுதியில் 1622 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. போர்த்துகேயரை இலங்கையிலிருந்து முற்றாக விரட்டுவதற்காக ஒல்லாந்தருடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைவாக கண்டி மன்னன் செனரத் மூதூர் எனும் இடத்தில் கோட்டை ஒன்றை அமைப்பதற்கு அனுமதி பெற்றிருந்தான். எனினும் அவனால் கட்டப்பட்டுக்கொண்டிருந்த இக்கோட்டையானது போர்த்துகேயரால் அரைவாசியிலேயே இடிக்கப்பட்டது. பின்னர் போர்த்துக்கேயர் ஒல்லாந்தரால் தோற்கடிக்கப்பட்டதும் மீண்டும் கொட்டியாரக் கோட்டை 1658 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது."

அந்தக் கோட்டை இப்போது மூதூர் மத்திய கல்லூரி இருந்த இடத்தில் அமைந்திருந்ததாக செவி வழி செய்திகள் கூறுகின்றன.

மூதூரின் கடல் வாயான மகாவலி கழிமுகத்தின் வழியே சிறிய கப்பல்கள் இக் கோட்டைக்கு வந்து போகக் கூடிய வசதிகள் இருந்ததாகவும் பாதுகாப்பான கோட்டையாகவும் இருந்ததாகவும் அறிய முடிகிறது.

இன்றும் இந்த இடத்தில் ஓடுகின்ற மகாவலியின் கிளையாறு கோட்டையாறு என்று அழைக்கப்படுவதும் இந்த இடத்தில் உள்ள கிணறு ஒன்று கோட்டையான் கிணறு என்று அழைக்கப்படுவதும் இந்த தகவல்களின் உண்மை நிலையை மேலும்



உறுதிப் படுத்துகின்றன.

பால.சுகுமார் சேனையூர்
மேனாள் முதன்மையர்
கலை கலாசாரப் புலம்
கிழக்குப் பல்கலைக் கழகம்

References

Nelson, William A.; De Silva, Rajpal Kumar (1984). The Dutch Forts of Sri Lanka – The Military Monuments of Ceylon. Edinburgh: Canongate. p. 117.

'Koddiyar Fort'. AmazingLanka.com. Retrieved 18 November 2014.

'King Rajasinghe plans to oust Portuguese invaders'. Sunday Observer. Retrieved 18 November 2014.

Further reading
Nelson, W. A.; de Silva, R. K. (2004). The Dutch Forts of Sri Lanka – The Military Monuments of Ceylon. Sri Lanka Netherlands Association

# அளுத்மாவத்தை அகில இலங்கை ஆனந்த ஐயப்ப தேவஸ்தான உற்சவம்

கொழும்பு, அளுத்மாவத்தை அகில இலங்கை ஆனந்த ஐயப்ப தேவஸ்தானத்தின் 16 ஆவது வருஷாபிஷேக, கொடியேற்ற, தீர்த்த, தேர்த்திருவிழா (27.07.2018 - 05.08.2018) நடைபெறுவதை முன்னிட்ட கட்டுரை.



ஞானமே உருவான பரமேஸ்வரன், சௌந்தர்யமே வடிவான ஸ்ரீ மஹாவிஷ்ணு ஆகிய புண்ணிய மூர்த்திகளின் திருஅவதாரமாக இம்மண்ணில் தோன்றி ஹரிகரபுத்திரன், தர்மசாஸ்தா, சபரிநாதன், ஐயப்பன், மணிகண்டன் மற்றும் கலியுகவரதன் என்று கண்கண்ட தெய்வமாகத் திகழும் ஸ்ரீ ஐயப்பனின் வரலாறு பற்றி குறிப்பிட புகும்போது பெரும் புதிரும் பிரமிப்பும் ஏற்படத் தொடங்குகிறது.

பெரும்பாலானவர்கள் ஐயப்பன் என்றே குறிப்பிடுவதன் கருத்தை யாவரும் தெரிந்து கொள்வதே சிறப்பும் பெருமைக்கும் உரியதொன்றாகும்.

ஐயப்பன் என்பது தலைவன், உயர்ந்தவன் என்ற பொருளைக் குறிக்கின்றது.

சாஸ்தா என்பது கடவுள் என்பதாகும். ஐயப்பன் என்பது தந்தையைக் குறிக்கின்றது. இது தந்தையாக இருந்து காப்பவன் என்றே பொருள்படும். பேதம், பிரிவு, உயர்வு, தாழ்வு இப்படி பற்பல பிரச்சினைகள் மலிந்து காணப்படுகின்ற இவ்வையகத்தில், இவையனைத்தையும் களைந்து, அனைவரையும் வாழ்வாங்கு வாழ்ந்திட வழிவகுப்பதே ஸ்ரீ ஐயப்பனின் திருவவதாரத்தின் அதிமுக்கிய நோக்கமாகும்.

இந்த உன்னதமான, உயர்வுமிக்க, மேன்மையான திருவவதாரம் பற்றி நினைக்கும் தோறும் உளம் பெரும் மகிழ்ச்சி பிரவாகத்தை வெளிப்படுத்தி நிற்கின்றமையை உணரலாம்.

தாரக மந்திரம்

ஸ்வாமியே சரணம் ஐயப்பா எனும் தாரக மந்திரம், வெறுமனே உதட்டளவில் கூறப்படும் ஒன்றல்ல. நமது உடலில் கஷ்மம், மத்திமம், வைகரி, வாக் எனும் நான்கு வாக்குகள் அமையப்பெற்றுள்ளன. இவை ஸ்வாதிஸ்டானத்திலிருந்து இருதயத்தைக் கடந்து, வாக்கினால் உச்சரிக்கப்படுவதாகும்.

இந்நான்கு வாக்குகளும் கலந்து வெளிப்படுவதினால் இம் மந்திரம் பெரும் சக்தியைக் கொண்டுள்ளது.

எனவே சபரிமலை ஐயப்பன் தாரக மந்திரத்தை இமைப்பொழுதும் மறவாது இருப்பது பேரானந்தத்திலும் பேரானந்தமே. வரலாற்று சிறப்பு மிகு சபரிமலையில் ஐயன் நாமங்கள் பல்வகைகளால் மிளிர்கின்றன. இராவணேஸ்வரன் ஆண்ட இலங்காபுரியிலும் அருளாட்சி புரிந்திட அவர் திருவுளம் கொண்டார் போலும்.

ஆகவே, கொழும்பு - 15, அளுத்மாவத்தை புண்ணிய பூமியில் அமையப் பெற்றுள்ள அகில இலங்கை ஆனந்த ஐயப்ப தேவஸ்தானத்தில் எழுந்தருளி, அருட்கடாட்சம் புரிந்து வரும் அரிய வரத்தை நாம் பெற்றிருப்பது பெரும் பாக்கியமே.

அரியலால் தேவையில்லை. ஐயன் ஐயனாருக்கே எனும் அப்பர் அடிகளின் அருள் வாக்கிற்கிணங்க, ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதியாய் சிவனுக்கு புருஷ சக்தியாக விளங்கும் திருமாலின் சக்தியுடன், யாவும் நிறைந்த பரம்பொருளாம் சிவபிரானின் சக்தியும் இணைந்து, பேரருள் பாலித்து வரும் ஸ்ரீ ஐயப்பனின் பெருமை மற்றும் மகிமை சொல்லில் அடங்காது.

ஆண்டவன் முன் அனைவரும் சமம் என்ற உயரிய கோட்பாட்டை அகில உலகிற்கே உணர்த்தி நிற்கும் நிலையில், இங்கும் அளுத்மாவத்தையில் ஆனந்த ஐயப்பனின் மகிமை தக்க உதாரணமாகத் திகழ்கின்றது. அதுவும் இன்றைய காலகட்டத்தில் அதிமுக்கியதொன்றாக விளங்குகிறது.



எப்போதெல்லாம் தர்மம் குன்றி அதர்மம் தலை தூக்குமோ, அப்போதெல்லாம் நான் அவதாரம் எடுத்து தர்மத்தை நிலைநாட்டுவேன் எனும் ஸ்ரீமத் கிருஷ்ண பரமாத்மாவின் பகவத்கீதை செப்புதற்கிணங்க, ஸ்ரீ ஐயப்பனின் திருவவதாரம் தக்க உதாரணமாகத் திகழ்கின்றது. ஸ்ரீ ஐயப்பனின் நாமத்தின் மூலம் நலம் பெறுவோமாக.

15 ஆவது வருஷாபிஷேக கொடியேற்ற தீர்த்த தேர் திருவிழா ஜூலை 27 ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளது. 27 ஆம் திகதி காலை 6.00 மணிக்கு மஹா கணபதி அஷ்டாபிஷேகம் பூர்த்தியானது. ஆகஸ்ட் 05 ஆம் திகதி வரை பத்து தினங்கள் விழா தொடரும். 3 ஆம் திகதி ஸ்ரீ கருப்புச்சாமி, ஸ்ரீ கருத்தசாமி சிறப்பு பூஜையும், 4 ஆம் திகதி கலச அபிஷேகம் பஞ்சபுண்ணிய யாகம் பள்ளிவேட்டை திருவிழாவும், 5 ஆம் திகதி காலை 8.00 மணிக்கு சுவாமி தேர் பவனியும், நடைபெறும். அன்றைய தினம் 3 மணிக்கு கொடி இறக்கத்துடன் உற்சவம் இனிதே நிறைவுபெறும்.

(பொன் அருணாசலம்,
கொட்டகலை குறூப் நிருபர்)

# உறக்கம் வராத சுடலைமாடன் கதை-2

## மலையக மக்களின் வழிபாடுகளில் ஒன்று



"மாடன் வந்துவிட்டான்" என்றார்கள். மாடன் என அவர் நிருபிக்க வேண்டுமே?காளி அம்மன் பந்தலில் ஒரு பெண் காளியம்மாள் உருவேறி ஆடிக்கொண்டிருந்தாள். அவளிடம் சென்று திரும்பிய மாடன், சுவாமிசிலைக்கு அருகில் வைத்திருந்த சிறிய சாரய போத்தலை எடுத்தார், குடித்தார், மற்றவர்க்கும் கொடுத்தார். குடிக்கத் தயங்கிவரின் தலைகள் மீது தண்ணீர் போலத் தெளித்தார். அருகில் கட்டியிருந்த கோழியை எடுத்தார், அதன் இறக்கைகளை ஒவ்வொன்றாகப் பிய்த்தார். பின் கோழியை இரண்டாகக் கிழித்தார். கீழே இரண்டு கால்களையும் அகலப் பரப்பி இருந்த வண்ணம் காலுகளுக்கு நடுவில் கோழியை வைத்து அதன் குடலை பிய்த்து எடுத்து மாலையாகக் கழுத்தில் போட்டுக்



கொண்டார். இருந்தபடியே கோழியின் ஈரலை வெளியே பிய்த்து வெளியே எடுத்தார். இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. இரத்தம் வழியும் அதனைச் சாப்பிட ஆரம்பித்தார். சனங்கள் பார்த்துக்கொண்டே இருந்தனர். வில்லுப்பாட்டுத் தொடர்ந்து கொண்டே இருந்தது. குழந்தைகளும், பெண்களும் இச்செயல்லைப் பார்த்துக்கொண்டே இருந்தனர். நானும் பார்வையாளர்களுள் ஒருவனாக. கோழியின் குடலை மாலையாகப் போட்டுக்கொண்டு அதன் ஈரலைச்சாப்பிட்டுத் திருப்தி கொண்ட சுடலை மாடன், பரவச நிலையில் நின்று மீண்டு, மீண்டும் எழுந்து தண்டத்தைத் தாங்கியபடி பக்தர்கள் மத்தியில் தாளத்திற்கு நடந்து உலாவர ஆரம்பித்தார். நடந்து சென்ற சுடலைமாடனார் ஒரு இளம் பெண் முன் நின்று ஏதேதோ கூறினார். தன் அருகில் வரும்படி அழைத்தார். அந்தப்பெண்ணோ நிர்த்தாச்சணியமாக அவ்வழைப்பை மறுத்து விட்டார். மாடன் அதனால் சற்றுக்



குழம்பிப்போய் கோபமுற்றவர் போல விரலைக் காட்டி அப்பெண்ணை ஏதோ எச்சரித்தார். "அந்தப் பெண்ணின்மீது சுடலை மாட சாமி கோபம் கொண்டு விட்டார் இன்று அந்தப் பெண்ணுக்கு ஏதாவது நடக்கும்"என்றார் என் அருகில் இருந்த ஒருவர்.

சுடலை மாடன் பின்னர் பெரிய சாட்டையை எடுத்து மளார் மளார் எனத் தன்னை தன்னைத்தானே சாட்டையால் அடித்துக் கொண்டார். பின்னர் மெல்ல மெல்ல உருத் தணிய சாதாரண மனித நிலைக்கு வந்து விட்டார். அவரை அப்போது பார்த்தால்

இந்தப் பூனையா அந்தப் பாலைக் குடித்தது என்பது போல மிக மிகச் சாதுவாகக் கணப்பட்டார். திடீரென அங்கு நின்ற இன்னொருவருக்கு உரு வந்து விட்டது. அவர் முன்னை மாடசாமிக்கு உருக்கொண்டு ஆடியவரைவிட இளைஞராகவும் தோற்றத்திலும் உடையிலும் சற்று நவீன உலகுக்குள் வாழ்பவபராகவும் இருந்தார். (பின்னால் விசாரித்தபோது கொழும்பில் ஒரு கம்பனியில் அவர் வேலை செய்பவரென அறிந்தேன்). இப் புதிய மாடன் இப்போது சுருட்டு ஒன்றைப் புகைத்த படி வில்லுப்பாட்டுத் தாளத்திற்கு உருக்கொண்டு ஆடினார். பெரிய சாட்டையைத் தன் தோழில் போட்டுக்கொண்டார். சில வேளைகளில் சாட்டையால் தன்னை மாறி மாறி அடித்தும் கொண்டார். சாராய போத்தலை எடுத்துக் கொண்டார்; தானும் குடித்தார். மற்றவர்க்கும் கொடுத்தார். வில்லுப்பாட்டு நிற்கவேயில்லை.

நடந்த நிகழ்ச்சிகள், புதிய பார்வையாளர்களாகிய எங்களுக்குத்தான், திகைப்பும் வியப்பும் தந்ததேயொழிய அங்கிருந்த மக்களுக்கு அது பழகிப்போன ஒரு நிகழ்வாகவே இருந்தது. அவர்கள் சர்வ சாதாரணமாக அந்நிகழ்வுகளைப் பார்த்தபடி இருந்தனர். இந்த மாடசாமியின் ஆட்டமும் முடிந்தது, வில்லுப்பாட்டும் வாழி பாடி முடிக்கப்பட்டது. பெரு நிகழ்வு ஒன்று கண்ட மனநிலையினின்று மீண்டேன். இத்தகைய உருவேற்று ஆட்ட நிகழ்வுகள் எனக்குப் புதியனவல்ல. என் சிறு வயதில் என் கிராமத்தில் இத்தகைய உயிர்ப்பலி கொடுக்கும் கோவில் சடங்குகளைப் பார்த்திருக்கிறேன்.

பிற்காலத்தில் அங்கு மடைப்பலி கொடுக்கப்பட்டதையும் அவதானித்துள்ளேன். மடை என்பது கமுகம் பாழை, வாழைப்பழம் பாக்கு , வெற்றிலை வைக்கப் பூசாரியார் அதனை ஒரு உயிராக உருவகித்துக் கொடுக்கும் ஒரு பலியாகும். உயிர்ப்பலிக்குப் பதிலாக அதனை பெறச் சாமியைச் சம்மதிக்க வைதிருந்தார்கள். விழா முடிந்த பின் என்னைப் பேசும்படி கேட்டு மைக்கை என் கையில் ஒப்படைத்தனர். என்பேச்சை எல்லோரும் எதிர்பார்த்திருக்கின்றனர் என்பது எனக்குப் புரிந்தது. நான் பின் வருமாறு பேசினேன்.

"மடவல டிவிசன் நலந்தன்ன மலையக மக்களே, வில்லுப்பாட்டுக் கலைஞர்களே, இதில் பங்கு கொண்டோர்களே, எனக்கு இப்பெருவிழாவை அறிமுகம் செய்த ராஜகோபால் அவர்களே;

மலையக மக்கள் 150 வருட காலத்துக்கு முன் தன் வாழ்வை வளமாக்கிக் கொள்ள தமிழகம் இருந்து, இங்கு வந்தார்கள். வரும்போது தம்முடன் அவர்கள் தமது தனித்துவமான பண்பாட்டு அம்சங்களான, சடங்குகள், விழாக்கள், கூத்துகள், வாழ்க்கை முறைகள், போன்றனவற்றையும் கொணர்ந்தார்கள். அவர்கள் இங்கு வறுமையிலும் துயரத்திலும், குளிரிலும் வாடிய போதெல்லம் அவர்களுக்கு உயிர்ப்புத் தந்தவை இந்தப் பண்பாட்டம்சங்கள்தான். இவற்றை நிகழ்த்தியபோது அவர்கள் உற்சாகம் பெற்றனர். சமூகமாக இணைந்தனர். பலம் பெற்றனர்.




அத்தகைய வாழ்வுப்பலம் தந்த சடங்குகளை இன்றும் தொடர்ச்சியாக நிகழ்த்தி வருகின்றனர், கால மாற்றம் அச்சடங்குகளில் சிற்சில மாற்றங்களையும் எற்படுத்தியும் வருகிறது. மலையகத்தின் பண்பாட்டடையாளமாக காமன் கூத்து, பொன்னர் சங்கர், அருச்சுனன் தபசு, என்பனவே பரவலாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. மலையகத்தில் நடத்தப்படும் காட்டேரியம்மன் சடங்கு அண்மைக்காலமாக வெளியுலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு மலையகப் பண்பாட்டுச் சடங்காகும். இவ்வகையிலின்றுதான் நான் முதன் முதலில் இந்த சுடலை மாடன் வில்லுப்பாட்டையும் அதனை ஒட்டி நடைபெறும் சுடலைமாடன் சடங்கையும் கேட்கிறேன், பார்க்கிறேன். இது இன்னும் பொது வெளியில் பெரிதாக அறிமுகப்படுத்தப்படவில்லை. இவ்வாற்றுகை எனக்கு பெரு வியப்பையும் திகைப்பையும் எற்படுத்தியுள்ளது. பிணங்களைத் தோண்டி அவற்றின் குடல்களை மாலையாகப் போட்டு அவற்றின் உள்ளுறுப்புகளைச் சாப்பிடும் சடங்கு முறைகள் மானுட சமூகத்தின் மிகப் புராதனமான சடங்கு வகைகளில் ஒன்று. மானிடவியலாளர்கள் இன்றும் எஞ்சி நிற்கும் இத்தகைய இனக்குழுக்கள் பற்றி ஆராய்ந்துள்ளனர். மானுட வரலாற்றின் ஆரம்ப காலத்தில் சில மானிடக் குழுக்களிடையே மனித இறைச்சி சாப்பிடும் வழக்கம் இருந்துள்ளது. இறந்தவர்களை உண்ணும் வழக்கம் முதலில் இருந்து, பின்னர் அது ஒரு சடங்கு முறையாக மாறியிருக்கலாம். வாழ்வோடு ஒட்டியிருந்த சில பழக்க வழக்கங்கள் சடங்குகளாக மாறியமைக்கு நிறையச் சான்றுகள் உள்ளன. தமிழ் மக்களிடமும் இத்தகைய வணக்க முறைகள் இருந்தமைக்குச் சான்றுகள் உண்டு.

சங்க இலக்கியங்களில் பேய் மகளிர் பற்றிப் பேசப் படுகிறது. இப்பேய் மகளிர் சுடலையில் பிணங்களையுண்ட பழைய பெண் மதகுருமார்களாக இருந்திருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் சிலர் யூகிக்கின்றனர். மிகப் புராதன காலத்தில் பெண்ணே அக் குழுவுக்குத் தலைவியாக இருந்தாள். பெண்வழிச் சமூக அமைப்பு நிலவிய காலம் அது. அப்பெண்ணே மத குருவாகவும் இருந்தாள். தாயைத் தெய்வமாக வணங்கிய பெண்வழிச் சமூக அமைப்பு அது. கொற்றவை, காடுகிழாள் என்பன அன்றைய தமிழரின் பெண் தெய்வங்கள். கொற்றவை பின் காளியானாள். இந்தக் காடு கிழாளின் இன்றைய எஞ்சிய வடிவம்தான் மலையகக் காட்டேரியம்மன் என நினைக்கிறேன்.

திருநெல்வேலிப் பகுதியில் வாழ்ந்த ஒரு மக்கள் குழுவினரிடம் வழக்கிலிருந்த சுடலைமாடன் வில்லுப்பாட்டை 1960 களில் பேராசிரியர் வானமாமலை கல்வி உலகுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.சுடலைமாடனை சிவனுடன் இணைக்கும் பண்பை அதில் கண்டேன்

(இன்னும் வரும்)

## மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

# அக்கரைப்பற்று கோளாவில் கிராமத்திலிருந்து புலம்பெயர்ந்த ஒரு அழகி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்



ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

பெண்கள் எப்பொழுதும் வீட்டுக்குள் இருந்து குடும்பக் கடமைகளைப்பார்த்தால் போதும் என்றும் - அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்றும் சொல்லப்பட்டு, அவர்களுக்கு தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமையும் மறுக்கப்பட்ட ஒரு காலம் முன்பிருந்தது.

இத்தகைய பின்புலத்தில் இலங்கை கிழக்கு மாகாணத்தில் இயற்கை எழில் கொஞ்சிய அழகிய கிராமத்திலிருந்து - அதேவேளை கல்வியிலும்





பொருளாதாரத்திலும் பின்தங்கியிருந்தாலும், கூத்துக்கலைகளில் முன்னிலை வகித்த தமிழர்களும் முஸ்லிம்களும் ஒரு தாய் மக்களாக வாழ்ந்த அக்கரைப்பற்று கோளாவில் கிராமத்திலிருந்து - பல நாடுகளை தனது ஆளுகைக்குள் கட்டிவைத்திருந்த முடிக்குரிய அரசாட்சி நீடித்த வல்லரசுக்கு புலம்பெயர்ந்து சென்ற சகோதரி ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் அவர்களைப்பற்றி நினைக்கும்தோறும் எனக்கு வியப்பு மேலிடுகிறது.

புலம்பெயர் இலக்கியத்தின் முன்னோடியான அவரது எழுத்துக்களை இலங்கையில் 1980 களில் படிக்க நேர்ந்தபொழுது, அவர் பற்றிய எந்த அறிமுகமும் எனக்கு இருக்கவில்லை. பம்பலப்பிட்டி



சரஸ்வதி மண்டபத்தில் இராஜேஸ்வரி எழுதி, அலை வெளியீடாக வந்திருந்த “ஒரு கோடை விடுமுறை” நாவல் வெளியீட்டு விமர்சன அரங்கிற்கு சென்றிருந்தேன்.

அன்று அந்த நாவலை வாங்கிச்சென்று உடனடியாகவே படித்து முடித்து நண்பர்களுக்கும் கொடுத்திருந்தேன்.




தற்பொழுது என்வசம் அந்த நாவல் இல்லை. அதுவும் என்னைப்போன்று எங்கெங்கோ இடம்பெயர்ந்திருக்கலாம். ஆனால், இன்றும் கோடை விடுமுறை லண்டன், அவுஸ்திரேலியா உட்பட பல நாடுகளுக்கும் வருடாந்தம் வந்துகொண்டிருக்கிறது.

ஓர் ஈழத்தமிழனின் புகலிட வாழ்வுக்கோலத்தை முதன் முதலில் இலக்கியத்தில் பதிவுசெய்த முன்னோடி நாவல் “ஒரு கோடை விடுமுறை”.

ராஜேஸ்வரியின் வாழ்வையும் பணிகளையும் கவனித்தால் அவர் நான்கு தளங்களில் ஒரேசமயத்தில் இயங்கியிருப்பதை அவதானிக்கலாம்.

படைப்பிலக்கியம், பெண்ணிய மனித உரிமைச் செயற்பாடு, ஆவணத்திரைப்படம், இவற்றுக்கு மத்தியில் தொழில்முறையில் தேர்ச்சிபெற்ற மருத்துவதாதி. ஒரு பெண் இவ்வாறு நான்கு தளங்களில் இயங்கியவாறு தனது பிள்ளைகளின் பெறுமதியான தாயாகவும் பேரக்குழந்தைகளின் பாசமுள்ள பாட்டியாகவும் தமது வாழ்வைத் தொடர்ந்து வருகிறார். இவைகள் மட்டுமல்ல இன்னும் பல விடயங்களும் அவர் குறித்த வியப்பினை என்னுள் வளர்த்திருக்கிறது.

கோளாவில் கிராமத்து தமிழ்ப்பாடசாலையில் எட்டாம் வகுப்புவரையும்தான் தொடக்க காலத்திலிருந்திருக்கிறது. இவரைப்போன்ற பெண்களும், ஊர் மக்களில் 90 சதவீதமானவர்களும் அருகிலிருந்த மீன்பாடும் தேனாட்டை அக்காலப்பகுதியில் சுமார் 18 வருடகாலமாக தரிசிக்காமலே வாழ்ந்திருக்கிறார்கள் என்பது அதிசயம்தான்.

இவருடைய தந்தையார் குழந்தைவேல்தான் இவரது ஆதர்சம். அவர் வைத்தியராகவும் கூத்துக்கட்டும் கலைஞராகவும் பல தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்தவராகவும் விளங்கியவர். அத்துடன் வேளாண்மை வயல்களை பராமரிக்கும் வட்டைவிதானையாராகவும் வாழ்ந்தவர்.

அவரிடமிருந்த கலை ஆர்வம், ஆளுமைப்பண்பு, வாசிப்பு அனுபவம் என்பன சிறுமி இராஜேஸ்வரிக்கு அன்றே இடப்பட்ட பலமான அத்திவாரமாக இருந்திருக்கவேண்டும்.

அவரது கிராம வாழ்க்கை, யாழ்ப்பாணத்தில் பெற்ற தாதியர் பயிற்சி, எழுதத் தொடங்கிய பருவம் - முதல் கவிதை வெளியான வீரகேசரி பத்திரிகையில் தாயார் யாருக்கோ வீட்டுத்தோட்டத்தில் வளர்ந்த கீரையை பறித்து சுற்றிக்கொடுத்ததினால் அந்தக்கன்னிப்படைப்பை தொலைத்துவிட்ட சோகம், யாழ்ப்பாணத்தில் சாதி அமைப்பு முறையையும் அதன்கொடுமையையும் நேரில் பார்த்து கொதித்தெழுந்த தர்மாவேசம், இடதுசாரி சிந்தனையுள்ள கணவருடன் அவரது நண்பர்கள் மார்க்ஸ், லெனின், ஏங்கல்ஸ் பற்றி உரையாடும்பொழுது, அவர்கள் கொழும்பில் வசிக்கும் கணவரின் நல்ல நண்பர்கள் போலும் என்று நம்பிக்கொண்டிருந்த அப்பாவித்தனம் - இலண்டனுக்கு புலம்பெயர்ந்த பின்னர் ஈடுபட்ட பெண்ணிய மற்றும் மனித உரிமைச்செயற்பாடுகள், திரைப்படத்துறையில் முன்னேற

**முருகபூபதி - அவுஸ்திரேலியா**

எடுத்துக்கொண்ட முயற்சிகள், அரசியல் செயற்பாட்டாளராக மாறியதும் பலரதும் அவதூறுகளை எதிர்கொண்டு, அவற்றை வெற்றிகொண்ட ஆளுமை முதலான பல்வேறு விடயங்களையும் அவர் மனம் திறந்து பகிர்ந்துகொண்ட விரிவான நேர்காணலை நண்பர் ஷோபா சக்தி தமது தோழர்களுடன் இணைந்து பதிப்பித்த கனதியான இலக்கியத்தொகுப்பு குவர்னிகாவில் படித்திருக்கின்றேன்.

நான் அறிந்தவரையில் எமது சமூகம் மட்டுமல்ல, கீழைத்தேய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் சமூகங்களும் பெண்களை அடக்கியாள்வதில்தான் பெருமை பெற்றன. பெண்கள் பிள்ளை பெறும் இயந்திரங்களாகவும் சமையல்கட்டுக்குரியவளாகவும் ஆண்களின் தேவைக்கு ஏற்ப போகப்பொருளாகவும் இருந்தால் மாத்திரம் அதுவே பெண்மைக்கு இலக்கணம் என்று கருதிய ஆணாதிக்க சமுதாயத்தில் - ஒரு பெண் துணிந்து கற்று ஆசிரியராக, மருத்துவ தாதியாக, மருத்துவராக வந்துவிட்டால் ஓரளவு பொறுத்துக்கொள்கிறது. தப்பித்தவறி நாட்டியத்தாரகையாக மிளிர்ந்தாலும் ஏற்றுக்கொள்கிறது.

ஆனால் - அறிவுஜீவியாக, பெண்ணியவாதியாக அதற்கும் மேல் ஆளுமையுள்ள படைப்பாளியாகவோ ஊடகவியலாளராகவோ மாறிவிட்டால் அவளது பெண்மைக்கே களங்கம் விளைவிக்கும் அளவுக்கு தயங்காமல் அவதூறுகளை அள்ளிச்சொரியும். உயிருக்கும் உலை வைத்துவிடும். நானறிந்த பல பெண் படைப்பாளிகள் எதிர்கொண்ட இன்னல்கள் அறிவேன்.

ஸர்மிலா ஸய்யத், தஸ்லீமா நஸ்ரின், அருந்ததி ராய், கமலா தாஸ், வாசந்தி, திலகவதி, தாமரை, மாலதி மைத்ரி, கருக்கு பாமா, லீனா மணிமேகலை, சல்மா இவர்களின் வரிசையில் இராஜேஸ்வரி.

அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் அவர்கள் படைப்பு இலக்கியத்துறையில் தாக்குப்பிடித்தார்கள்.

பெண் ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டார்கள். செல்வி (செல்வநிதி), ரஜினி திரணகம, இசைப்பிரியா ஆகியோர் கொல்லப்பட்டார்கள்.

இராஜேஸ்வரி தமது கதைகளில் பெண்களின் உணர்வுகளுக்கும் உரிமைகளுக்கும் முக்கியத்துவம் வழங்கிய பெண்ணியவாதி. அத்துடன் எழுத்துப்போராளி. எழுதுவதுடன் தமது பணி ஓய்ந்துவிட்டதாக கருதாமல் ஒரு செயற்பாட்டாளராகவே மாறியவர்.

இந்த Activist களினால் இவர்களுக்கும் கஷ்டம், மற்றவர்களுக்கும் கஷ்டம்தான் என்று ஒரு தடவை எழுத்தாளர் அசோகமித்திரன் குறிப்பிட்டிருந்தார்.

ஏற்கனவே நிம்மதியாகவிருந்த அக்கரைப்பற்று இனமோதல்களினால் உருக்குலைந்த அவலம் நன்கறிந்தவர் ராஜேஸ்வரி. தமது ஒரு உடன்பிறப்பை ஆயுதப்படைகளிடம் பறிகொடுத்தவர். அந்தத்துயரத்தால் சடுதியாக மரணித்த தாயாரின் இழப்பை சந்தித்தவர். மற்றும் ஒரு தம்பியான விமல் குழந்தைவேலை ஆயுதப்படை கைதுசெய்து பின்னர் விட்டது.

இலண்டன் வாழ்க்கையில் சுகபோகம் அனுபவிக்காமல் எமது மக்களின் குரலாக இயங்கினார். இலங்கையில் நிகழ்ந்த இனவாத வன்செயல்களை அம்பலப்படுத்தி - மூவின மக்களின் ஒற்றுமையையும் வலியுறுத்தி இங்கிலாந்து அரசியல் தலைவர்கள் முதல் மனித உரிமைச் செயற்பாட்டாளர் வரையில் தொடர்ச்சியாக அழுத்தங்கள் பிரயோகித்தவர். இலங்கையில்

தொடர்ச்சி... (பக்கம் -23 )

# தீர்த்தக்கரையில் கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் கலையாற்றுகைகள்

மட்டக்களப்பில் வருடா வருடம் நடைபெறும் பெரு விழாக்களுள் ஒன்றாக அமிர்தகளி தீர்த்தக்கரைத் திருவிழா விளங்கி வருகின்றது. அமிர்தகளி எனும் அழகிய ஊரின் குளத்தருகில் குடி கொண்டு அருளாட்சி புரியும் மாமாங்கேசுவரருக்கு பத்து நாட்களுக்கு நடைபெறும் வருடாந்தத் திருவிழாவே தீர்த்தக்கரைத் திருவிழாவாகும்.

வருடாந்தம் மட்டக்களப்பில் வாழும் பல்வேறு இன, மத மக்களும் ஒன்று கூடும் இடமாக இத்தீர்த்தக்கரை சிறப்பிடம் பெறுகின்றது. பல்லாயிரக்கணக்கானோர் ஒன்று சேரும் இடமாக இத்தீர்த்தக்கரை விளங்குவதாலேயே சனங்கள் கூடும் நிகழ்வுகளை தீர்த்தக்கரைக்கு ஒப்பிட்டுக் கதைப்பது மட்டக்களப்பாரின் பேச்சு வழக்காயிற்று.

இந்த ஆண்டுக்கான தீர்த்தக்கரைத் திருவிழா இந்த மாதம் இரண்டாம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் பதினொராம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறுகின்றது. இந்நாட்களில் தீர்த்தக்கரைதனில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. ஆன்மீக ஆனந்தம் அருளும் திருவிழா மற்றும் கிரியைகள், தவில் நாதஸ்வரக் கச்சேரி, கடவுளின் திரு உலா, தேரோட்டம், காவடியாட்டம், வாண வேடிக்கைகள், அன்னதானம், உள்ளூர் உற்பத்திகளின்

**து.கௌரீஸ்வரன்**

வாணிபம், உள்ளூர்ச் சாப்பாட்டுக் கடைகள், சாகச விளையாட்டுக்கள் என ஆன்மீக நிழலில் கொண்டாட்டங்கள் பலவும் நடந்தேறவுள்ளன.

இத்தகைய சிறப்பு நிகழ்ச்சிகளுள் ஒன்றாக ஏழாவது தடவையாக கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையினர் மாமாங்கேஸ்வரர் ஆலய வண்ணக்குமாரின் ஒத்துழைப்புடன் நடத்தும் பாரம்பரிய நிகழ்த்து கலைகளின் ஆற்றுகைகளும் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்ச்சி எதிர்வரும் 05.08.2018 ஆந் திகதி தொடக்கம் 07.08.2018 ஆம் திகதி வரைக்கும் ஆலய முன்றலில் அமைக்கப்படும் கூத்துக் களரியில் பிற்பகல் மற்றும் இரவு வேளைகளிலும் நடைபெறவுள்ளன.



ஆரம்ப வைபவம் ஐந்தாந் திகதி முற்பகல் பத்து மணிக்கு நுண்கலைத்துறை தலைவர் சு.சந்திரகுமார் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம அதிதியாக கிழக்குப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் பேராசிரியர் த.ஜெயசிங்கம் அவர்களும் சிறப்பு அதிதிகளாக பிரதி உப வேந்தர் வைத்திய கலாநிதி கே.கருணாகரன், திருகோணமலை வளாக முதல்வர் கலாநிதி வ.கனகசிங்கம், கலைப்பீடாதிபதி திரு.மு.ரவி, சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி சி.ஜெயசங்கர், பதில் பதிவாளர் அ.பகிரதன், நிதியாளர் ஜனாப் எம்.எம்.பாரிஸ், மாமாங்கேஸ்வரர் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ ஆதி சவுந்தரராஜன் குருக்கள், ஆலய வண்ணக்கர்களான தி.விக்கிரமன், க.புவனச்சந்திரா, உதவி வண்ணக்கர்களான உ.சுவேந்திரகுமார், கோ.ரிசிநேசன், முன்னாள் வண்ணக்கர் ம.அரசரெட்ணம் ஆகியோர் பங்குபற்றவுள்ளார்கள்.

ஆரம்ப வைபவத்தையடுத்து ஆலய முன்றலில் நுண்கலைத்துறையினால் அமைக்கப்படும் பாரம்பரிய ஆற்றுகைக் கலைகளுடன் தொடர்புடைய



கலைப் பொருட்களின் கண்காட்சிக் கூடம் துணைவேந்தரால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இப்பாரம்பரிய ஆற்றுகைக் கலைகளின் விழாவில் ஐந்தாந் திகதி மாலை 5:00 மணிக்கு களுதாவளை கிராமிய கலைக் குழுவின் 'வசந்தன் கூத்தும், இரவு 11:00 மணிக்கு முனைக்காடு நாகசக்தி கலைக்கழகம் வழங்கும் 'சத்தியவான் சாவித்திரி' தென்மோடிக் கூத்தும், ஆறாம் திகதி திங்கக்கிழமை மாலை 5:00 மணிக்கு நுண்கலைத்துறை வழங்கும் 'மகிடிக் கூத்தும்', இரவு 11:00 மணிக்கு சொர்வாமுனை வேல்விழி கலைக்கழகம் வழங்கும் 'ஆரவல்லி சூரவல்லி வீரவல்லி' வடமோடிக் கூத்தும், ஏழாம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5:00 மணிக்கு மண்டபத்தடி மலைமகள் கலாமன்றம் மற்றும் வவுணதீவு விபுலாநந்தர் கலைக் கழகம் என்பன வழங்கும் 'ஏமாற்றாதே ஏமாறாதே', 'வல்லவனுக்கு வல்லவன்' எனும் நகைச்சுவைக் கூத்துக்களும், இரவு 11:00 மணிக்கு கன்னன்குடா கண்ணகி முத்தமிழ் மன்றம் வழங்கும் 'வாளவீமன் நாடகம்' தென்மோடிக் கூத்தும் ஆற்றுகை செய்யப்படவுள்ளன.

நுண்கலைத்துறையினால் தொடர்ச்சியாக ஏழாவது வருடமாக இப்பாரம்பரிய ஆற்றுகைக் கலைகளின் விழா தீர்த்தக்கரைத் திருவிழாவினையொட்டி ஆலய வண்ணக்குமாரின் ஆதரவுடன் நடைபெறவுள்ளது. கிழக்கின் பாரம்பரியக் கலைகளின் சமகால முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு அக்கலைகளின் முன்னெடுப்பிற்கான ஆக்கபூர்வமான செயற்பாடுகளை விரிவுபடுத்தும் நுண்கலைத்துறையின் மற்றுமொரு நடவடிக்கையாக 2012 ஆம் ஆண்டு நுண்கலைத்துறையின் தலைவராக இருந்த கலாநிதி சி.ஜெயசங்கர் அவர்களால் திட்டமிடப்பட்டு நுண்கலைத்துறை விரிவுரையாளர்களினதும் மாணவர்களினதும் பங்களிப்புடன் இவ்விழா முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டது. அவரையடுத்து நுண்கலைத்துறைக்குத் தலைவராக வந்த கலாநிதி வ.இன்பமோகன் அவர்கள் இக்காரியத்தை தொடர்ந்து முன்னெடுத்திருந்தார். தற்போது நுண்கலைத் துறைத் தலைவராக உள்ள சு.சந்திரகுமார் அவர்கள் சக விரிவுரையாளர்கள், மற்றும் மாணவர்களின் பங்களிப்புடன் இவ்விழாவைத் தலைமையேற்று நடத்துகின்றார்.

இவ்விழாவின் தொடர்ச்சி காரணமாக தீர்த்தக்கரையில் கூத்து நடக்கும் பார்க்கலாம் எனும் எதிர்பார்ப்பும் காத்திருப்பும் நகரையண்டிய கலையார்வலர்களிடையே ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. இன்று நவீன இலத்திரனியல் உலகில் ஆற்றுகைக் கலைகளின் பெறுமதியும், மதிப்பும் பெருகிக் கொண்டு செல்வதை அவதானிக்கின்றோம். இப்பின்னணியில் பாரம்பரிய நிகழ்த்து கலைகளின் விழா தீர்த்தக் கரையின் தொடர்ச்சியாக நடைபெறுவது பல்வேறு வகைகளில் முக்கியத்துவத்தைப் பெறுகின்றது.

மட்டக்களப்பில் வருடா வருடம் சமுதாய அரங்க நடவடிக்கையாக பல்வேறு ஊர்களிலும் கூத்துக்கள் ஆடப்பட்டு வருகின்றன. ஏறத்தாழ வருடாந்தம் அறுபதிற்கும் எழுபதிற்கும் இடைப்பட்ட அளவில் கூத்துக்கள் ஆடப்படுவதாக கள ஆய்வுகள் காட்டி நிற்கின்றன.

இவ்வாறு ஊர்களில் சமூக விழாவாக ஆடப்படும் கூத்துக்களையும் அதையாடும் கூத்தர்களையும் நகர்சார்ந்த பெரு விழாவில் ஆற்றுகை செய்ய வைத்து அவர்களை மாண்பு செய்வதுடன் கூத்துக்களின் சமகால இருப்பையும் அதன் பலங்களையும் தேவைகளையும் இனங்கண்டு ஆக்கபூர்வமாக உரையாடி பதிய சந்ததிகளுக்கு கடத்தும் ஒரு கற்றல் நடவடிக்கையாகவும், பல்கலைக்கழகம் சமூகத்துடன் ஊடாட்டம் செய்யும் வெளியாகவும் இவ்விழா முக்கியத்துவம் பெறுகின்றது எனலாம்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல:-08 இன் விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 மா | 2 மி | | 3 சு | 4 மை | 5 தா | ங் |
| 6 தா | ர | 7 கை | | 8 நா | ண் | |
| | ட் | நா | | | 9 டு | 10 மீ |
| 11 வ | சி | ட் | 12 ட | ர் | | ன |
| லை | | 13 டு | ம் | | 14 அ | வ |
| 15 வீ | 16 தி | | 17 ப | ங் | க | ன் |
| 18 சு | க் | கா | ன் | | தி | |

*சரியான விடைகளை எழுதி பரிசு பெறும் அதிஷ்டசாலிகள் மூவர்:-*

**01. நிர்மலாதேவி புண்ணியநேசன் (காரைதீவு)**

**02. தவநாயகி ஸ்ரீகிருஷ்ணராஜா (செல்வநாயகம் வீதி)**

-- இவர்களுக்குரிய பரிசுப் பணம் அனுப்பி வைக்கப்படும்.

-- இப் போட்டியில் கலந்துகொண்ட போட்டியாளர்களுக்கு அரங்கம் பத்திரிகையின் நன்றிகள்.

# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 23

பெண்ணைச் சொல்லிக் குற்றமில்லை

"அய்யோ இவங்கள் செய்த வேலையன்ரீ இப்ப வாழயும்மாட்டாம சாகயும் மாட்டாம அலாதுப்படுறம் அங்க என்ர மனிசி பிள்ளையள் குழாறிக்கொண்டு திரியக்க நான் உசிரக் கொண்டு இஞ்சால ஓடிவந்திட்டன். மாடுமேய்க்கிறம் பயிரச் செய்யிறமிண்டு அவங்களோட கூடித்திரிஞ்சிட்டு, இப்ப ஊருக்கும் போக வழியில்லாம சிக்கிட்டன்".

வேலாயுதத்தார் புலம்பிக் கொண்டு நிக்கிறது வசுவில்லாத வசுஸ்ராண்டில கிளிநொச்சி. அழகும் இளமையும் தழும்பி நிக்கயுக்க ரத்தத்துடிப்பில மட்டக்களப்பு போராளியளுக்கு வழிகாட்டியா நிண்டு பிறகு அதால விலகி ஒரு வஸ்ஸில எடுபிடியா நிண்டு, இறுதி யுத்தம் முடியும் வரைக்கும் வன்னிக்க கிடந்து அல்லாடின மனிசன்.

இவற்ற ரெண்டு பிள்ளையள் இயக்கத்தில் நிண்டதுகள் அதில ஒண்டு அங்கருந்து வாற வழியிலயே கனோன் அடியில காயப்பட்டு ஒரு கால கழட்டிப்போட்டு அப்பவும் கடல்புலியாத்தான் நிண்டவன். பிறகெங்கயோ தாக்குதல்ல காணாமப் பொயிட்டானாம். அதுக்கெண்டு அவன் வீரச்சாவுப்பட்டியலல்யும் போடுப்படயில்ல. அதொரு கவலைதான் அவருக்கு. ஆனாலுமென்ன பிரதான கிச்சினிலயிருந்து நாலு வேசுக்கு சாப்பாடு சுமக்கிறது இவர்தான். பிளாஸ்டிக் வாளியள பக்கீஸ் பெட்டியில அடுக்கி சயிக்கிள் கரியரில கட்டி பன்னெண்டு மணியிலயிருந்து ஒருமணிக்குள்ள நாலு வேசுப் பிள்ளையளுக்கும் சாப்பாட குடுத்திருவார்.

எல்லாரும் இவரை அப்பாண்டுதான் கூப்பிடுறது. எண்டாலும் அவற்ற சாரன் கட்டக் கலாய்க்காத பிள்ளையளே கிடையாது. எப்பிடி லோட்டி கட்டினாலும் சிரிச்சுக் கொண்டே போயிருவார். "காலம் கலிமுத்திக்கெடக்கு அதுகள் சிரிச்சா என்ன இண்டைக்கு காணுற புள்ளயள நாளைக்கொரு சண்டையிண்டா பொடியா கொண்டந்து கிடத்திருவாங்கள். அதுகளின்ர சந்தோசத்தை நாமள் கெடுக்கப்பிடாது" எண்ட பெரிய எண்ணம் அவருக்கு. இந்த வேலாயுதத்தார் ஒரு நல்ல கெட்டித்தனமான தச்சு வேலைக்காரன் எண்டதை தெரியுமோ. அது மட்டுமில்ல நல்ல கடைச்சல் வேலைக்காறனுமாக்கும். இவற்ற திறமைய கண்டு பிடிச்சவன் சிங்களவன்தான்.

**தமிழ்க்கவி**

இயக்கம் முற்றா போரை கைவிட்டபிறகு போர் முடிஞ்சாப்பிறகு ஆனானப்பட்ட கெட்டித்தனமான போருகளை வழிநடத்தின போராடினபோராளியளே இடிஞ்சுபோய் கிடக்கயுக்க வேலாயுதத்தார் சிங்களநாட்டுக்கு வேலைக்குப்போறார். கைநிறையச்சம்பளம் காலமையிருந்து குடி. ஆனா நாலு நாள் லீவில கிளிநொச்சிக்கு வந்திட்டாலும் தேடிவந்து கூட்டிக்கொண்டு போகினம். இவ்வளவு கெட்டிக்காரன இயக்கம் ஏன் எடுபிடியாவே வைச்சிருந்தது. எங்க திறமையிருந்தாலும், தேடிக்கண்டுபிடிச்சு இயக்கத்துக்க எடுத்துப்போடுற இயக்கத்தலைமைக்காரர் ஏமாந்துதான் போச்சினம். வேலாயுதமண்ணர் என்னைக்கண்டவுடன வலு சந்தோசமா கிட்ட வந்து ரகசியமா "நீங்க தமிழ்கவியம்மாதானே" எண்டு கேக்க , நான் அசராம,

"அதிலயென்ன சந்தேகம்"; எண்டன். அவர் மெதுவா என்னிட்ட,

" என்னத் தெரியுமோ" எண்டு கேட்டார். எனக்கு செம காண்டுதான்.

"என்ன வேலாயுதத்தார் பகிடியோ?"எண்டன். அந்த விடிகாலைப் பொழுதில சட்டெண்டு கால்ல விழ வந்திட்டார்; நான் திகைச்சுப்போனன். இதென்னப்பா கோதாரி நீ செய்த வேலை உந்த பாவத்தை நான் எங்க கொண்டே கழட்டுறது எண்டன்.

இதுக்குள்ள வசு வந்திட்டுது ஏறினம். அவர் எனக்கு பக்கத்தில இருக்க வெளிக்கிட்டார் "வேண்டாமய்யா நீங்க நிக்கிற நிலை சரியில்ல. தனியா இருங்கண்டன். இந்த விடியக்காத்தால இந்தாள் எங்கபோய் குடிச்சிருக்கும்? எண்ட கேள்வியும் எனக்கிருந்துது.

"ஏனய்யா ஊர்ப்பக்கம் போகேல்லயே?"

"எப்பிடி போறது? என்ர மனிசி அப்பவே வேற ஒருத்தனோட ...எண்டு இயக்கம் தண்டிச்சிட்டுது. அவள் அப்பிடியானவள் இல்ல. எனக்கு தெரியாத என்ர மனிசியப்பத்தி...ஆரோடம்மா கேக்கிறது. அவள் தங்கமம்மா என்னாலதான் அவளுக்கிந்த சாவு. நான் விட்டிட்டு வராம இருந்திருந்தா அவ ஏம்மா தடம்மாறிப்போக... அது குத்தமா? அவளுக்கும் ஒரு அவேட்சை இருந்திருக்க ஏலாம போயிருப்பா...நாம சுத்தமா அது பிழ இல்லம்மா பொம்பிளக்கி போக்கிடமில்ல.அவளுகள காப்பாத்த நாம கூட இரிக்கணும் அப்பிடி இல்லாம நாம எப்பிடி அவ சாமிம்மா. அவர் அழ ஆரம்பிச்சாரோ ஆளுக்கு வெறிப்பித்தல்ல புலம்பிறார் எண்டுதான் ஆரும் நினைப்பினம் என்னால அப்பிடி நினைக்கேலாமக்கிடக்கு அவர் சொன்ன கருத்து அப்பிடி.

" எட படிப்பறிவில்லாத வேலாயுதமே இப்பிடி பேசிறது?"

" படிப்பென்னம்மா படிப்பு நானும் அந்தக் காலத்தில சிறாப்பர்தான். எனக்கு அந்த வேல பிடிக்கேல்ல...எங்கட ஊருக்க பட்டறை வச்சிருந்த பொடி அப்புவிட்ட இந்த வெலயப்பழகிட்டன் பிறகு அதையும் போட்டிட்டு தத்தாரியா திரிஞ்சன்" "இப்ப...?" "இப்ப, இயக்கத்தில நிண்ட சுமதியோடதான் இருக்கிறன். அவாவுக்கும் புருசன்இல்ல. அம்மா இனி வேலாயுதம் எண்டு சொல்லாதங்க. "சைமன்"அதுதான்தான் இஞ்சால பிழங்கிறபேர். வசு நிண்டிட்டுது. (தொடரும்)

---

# சிறுகதை

## ரயில் சிநேகம்



சிவச்சந்திரன் சிவஞானம்

சங்கர் அவசரமாக மூச்சிரைக்க ஓடி வந்து ட்ரெயினில் ஏறிக்கொண்டான். வார நாள் என்பதால் முதலாம் வகுப்பு பெட்டியில் கூட்டம் அதிகமாக இருக்கவில்லை.

தன் சீட் இலக்கத்தை தேடினான். சீட் இலக்கம் 32. அதற்குப் பக்கத்து சீட் 31 இல் ஒரு இளம் பெண் .

"எக்ஸ் யூஸ் மீ இது என்ட சீட், இருக்கலாமா?"

"சொரி" என்றவாறே சங்கரின் சீட்டில் வைத்திருந்த அவளின் ஹேன்ட் பேக்கை எடுத்தாள்.

மட்டக்களப்பு ரயில் நிலையத்தில் இருந்து இரவு கொழும்பை நோக்கிப் பயணத்தைத் தொடங்கியது மெயில் வண்டி.

சங்கர் இயர் போன் போட்டு இளையராஜா பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்தான். ட்ரெயின் வாழைச்சேனை தாண்டி போய்க்கொண்டிருக்கும்போது இளையராஜாவின் பாட்டு சலிக்கத்தொடங்கியது. வெளியில் தூறலாக மழை பெய்துகொண்டிருந்தது. கொஞ்சம் குளிராக இருந்தது.

"எக்ஸ் யூஸ் மீ...

குளிரா இருக்கு இத ஜன்னலை கொஞ்சம் மூடி விடுறீங்களா?"

அவனுக்கும் ஜன்னலை மூடி விடுவது நல்லது என்றே தோன்றியது.

திரும்பி ஜன்னலை மூடும் போதுதான் அவள் முகத்தைப் பார்த்தான். ஏதோ தெரிந்த பெண் மாதிரி இருந்தாள்.

"உங்களை பார்த்தா ஏதோ தெரிஞ்சவங்க மாதிரி இருக்கு, ஆனா எப்படித் தெரிஞ்சும் என்றுதான் ஞாபகம் வருதில்ல..."

"எனக்கும் அப்படித்தான் இருக்கு, நானும் இவ்வளவு நேரமா அதைத்தான் யோசிச்சுக் கொண்டிருக்கிறன்..."

"பை த வே, நான் சங்கர்"
"ஓ, நான் பிரியா"
"உங்களை மாதிரித்தான் உங்கட பெயரும் அழகா இருக்கு" காலகாலமாய் ஆண்கள் வைக்கும் அதே ஐஸ்.

"ஓஹ்...தாங் யூ"
எதை நம்புதுகளோ இல்லையோ நீ அழகாய் இருக்கிறாய் என்பதை எல்லாப்பெண்களும் நம்பிவிடுவார்கள்.
பிரியா மட்டுமென்ன விதி விலக்கா?

"என்ன விசயமாக் கொழும்புக்குப் போறீங்க பிரியா?"
"எனக்கு ஒரு இன்டர்வியூ இருக்கு"
"நீங்க?"
"அங்க தான் வேலை செய்றன்"
"கவிதை என்றால் உங்களுக்குப் பிடிக்குமோ?"
கையில் இருந்த அப்துல் ரஹ்மான் புத்தகத்தைப் பார்த்தாள்.
"ம்ம்ம்..."
நீங்க கவிதை எழுதுவீங்களா?
"ஏதோ கொஞ்சமா எழுதுவன்"
"எங்க இப்ப ஒரு கவிதை சொல்லுங்க பார்ப்போம்?"

"கவிதை கேட்கும்
ஒரு கவிதைக்காக
காத்திருக்கின்றன பல
கவிதைகள்"

மொக்கைக் கவிதைதான். இருந்தாலும் அவளைக் கவிதை என்று சொல்லிவிட்டானே. "வாவ் பன்டாஸ்டிக் சூப்பர்..." பாராட்டிக் கொட்டினாள் பிரியா. ரெயில் பொலன்நறுவை தாண்டி இருக்கும், ரெயின் பெட்டியில் லைட் அணைந்து எல்லாமே இருட்டானது. தன் ஸ்மார்ட் போனை எடுத்து அதில் இருந்த லைட்டை போட்டு தன் பையில் இருந்து பெட் சீட்டை எடுத்துப் போர்த்திக்கொண்டான் சங்கர்.
"ஓகே பிரியா நான் நித்திரை கொள்ளப்போறன், இவ்ஃப் யூ டோன்ட் மைன்ட் உங்க மொபைல் நம்பர்..."
"ஷ்யுர்..."தன் நம்பரைச் சொன்னாள்.

தன் மொபைலில் டயல் பண்ணி சேவ் பண்ணிக்கொண்டான்.
"என்ன இருட்டானதும் பயத்துட்டீங்களா?
"ஓம்...ஹி ஹி... எனக்கு பேயென்றாலே பயம்"
"என்ன சங்கர், இந்தக் காலத்தில போய் பேய் அது இது எண்டு கொண்டு..."
"உங்களுக்குப் பயமில்லையா?"
"பேயா? நான் படுக்கிறதே சுடுகாட்டிலதான் தெரியுமோ?"
என்ன வெட்டியான் வேலையா பார்க்கிறீங்க என்றுதான் கேட்கத் தோன்றியது, ஒரு பெண்ணாச்சே அதனால் அடக்கிக்கொண்டான்

"நீங்க நல்லா இன்டெரஸ்ரிங்காக் கதைக்கிறீங்க"
"என்ன... அலட்டுறன் என்றத இப்படி மறைமுகமாகச் சொல்றீங்களா?"

"ஓகே, ஓகே... குட் நைட்!"
"குட் நைட்!"
காலை 5 மணிக்குக் கொழும்பை வந்தடைந்திருந்தது ரெயின்.

ஒலிபெருக்கிச் சத்தத்தில் எழும்பினான் சங்கர்.

இரவு வேலை செய்யாமல் அணைந்திருந்த லைட் எரிந்துகொண்டிருந்தது. நான் தூங்கிய பின் யாராவது வந்து திருத்தி இருப்பார்கள் என நினைத்துக்கொண்டான்.

பக்கத்து சீட் காலியாக இருந்தது. பிரியா போய்விட்டாள்.
ஒரு பை கூட சொல்லாமல் போயிட்டாளே.

அவசரமாய் ஓடிப்போய் 101 பஸ் பிடித்து வெள்ளவத்தையில் இருக்கும் தன் வீட்டுக்குப் போய்ச்சேர ஆறரை ஆனது.

இனித் தூங்க ஏலாது. வேலைக்குச் செல்ல வேண்டும். குளித்து முடித்து சோபாவில் அமர்ந்தான். அம்மா போட்டு வைத்திருந்த டீ இளஞ்சூடாக இருந்தது.
டீயைக் குடித்தவாறே தன் சம்சுங் கலக்ஸியில் பேஸ்புக் லொக் இன் பண்ணினான்.
"கிரான் சந்தி பஸ் விபத்தில் இளம்பெண் உயிரிழப்பு. நேர்காணலிற்காகச் சென்ற

தொடர்ச்சி... (பக்கம் -22 )

கட்டிளமைப் பருவ சாரதிகள்

இலங்கையில் தற்போது ஏற்படுகின்ற வீதி விபத்துக்களில் அனேகம் பாதிக்கப்படுபவர்கள் இனப்பெருக்க வயதுடைய கட்டிளமைப்பருவத்தினராகும். யுத்தம், சுனாமி ஆகிய அனர்த்தங்களிலும் அதிகம் உயிரிழந்தவர்கள் இப்பருவத்தினர். யுத்தம் விடைபெற்ற போதும் வீதி விபத்துக்களால் அதிகம் கட்டிளமைப்பருவத்தினர் தொடர்ந்தும் பாதிக்கப்படுகின்றனர்.

ஒரு வாகனத்தை சுய கட்டுப்பாட்டுடன், தேவை கருதி, தைரியமாக ஓட்டுவதற்கு பக்குவம் தேவைப்படுகின்றது. இந்தப் பக்குவம் பெரும்பாலும் வயதுடன் தொடர்புள்ளது. ஒரு துவிச்சக்கர வண்டியை இயக்குவதற்கான சக்தி நிலைக்கு ஏற்பவே அதன் வேகம் அமைகிறது. இது போலவே நடத்தல், ஓடுதல் என்பவற்றிலும் எமது சக்தியே பயன்படுகின்றது. எனவே வேகம் எமது கட்டுப்பாட்டில் உள்ளது. இவை தவிர ஏனைய எந்த வாகனங்களிலும் சக்தி வேறொரு முதலிலிருந்தே கிடைப்பதால் அதன் வேகத்தை நாங்கள் எந்த விதத்திலும் கூட்டிக்குறைக்கலாம்.

வாகனத்தின் கட்டுப்பாடு

நாலு சக்கர வாகனங்கள் பாதுகாப்பானவை. பெரும்பாலான விபத்துக்களில் வாகனங்கள் பலத்த சேதம் அடைந்த போதும் வாகனங்களில் பயணிப்பவர்கள் பாதுகாக்கப்படுகின்றனர். இருந்த போதும் அந்த வாகனத்தின் வேகம், பராமரிப்பு முறைகள் மோதுண்ட வாகனத்தின் வீரியம் என்பவற்றினால் நாலு சக்கர வண்டிகளில் பயணிப்பவர்களும் மரணித்து,

டாக்டர். பி. யுடி ரமேஸ் ஜெயக்குமார்
உளநல மருத்துவர்
வாழைச்சேனை மருத்துவமனை

காயம் அடைகின்றனர். பொதுவாக கட்டுப்படுத்தக் கூடிய வேகத்தில், சரியான விதி நடைமுறைகளை பின்பற்றுகின்ற சாரதிகள் வாகனங்களை நல்ல முறையாக செலுத்தி தமக்கும், தம்முடன் சேர்ந்து பயணிப்பவர்க்கும் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றனர்.

இரண்டு சில்லு மோட்டார் சைக்கிள் எவ்விதத்திலும் தரமான போக்குவரத்து சாதனமாக அமையாது. அதனது கட்டுப்பாடு, சமநிலை முற்றிலும் ஓட்டுனரிலேயே தங்கியுள்ளது. சற்று சமநிலை குறைந்தாலும் நிலத்தில் விழுந்து அல்லது மோதுண்டே சமநிலையடையும். தற்போது அதில் பயணிக்கிற ஒருவர் அல்லது இருவருமே பாதிக்கப்பட வேண்டி ஏற்படும். இலங்கையில் தற்போது நடைபெறுகின்ற அனேக விபத்துக்கள் இரண்டு சக்கர மோட்டார் சைக்கில்கள் உடன் சம்பந்தப்பட்டவை. அதில் பாதிக்கப்படுபவர்களில் அரைவாசிக்கு அதிகம் கட்டிளமைப்பருவ இளைஞர்கள் ஆவார்கள். திறந்த பொருளாதாரம், வரிச் சலுகை, "லீசிங்" வசதிகள் என்பன தற்காலத்தில் வீட்டில் உள்ள அனைவருக்கும் ஒரு மோட்டார் சைக்கிள் என துவிச்சக்கர வண்டிகளை பிரதியீடு செய்துள்ளன. அத்துடன் வீதிக்கு வீதி, வீட்டுக்கு வீடு என "லீசிங்" கொடுக்கும் நிறுவனங்கள் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் சலுகைகளுடன் மோட்டார் சைக்கிள்களை வீட்டு வாசலிற்கே கொண்டு சென்று கொடுக்கின்றனர். "லீசிங்" உத்தியோகஸ்தர்களின் கவர்ச்சி, கதைக்கும் முறை, ஆரம்ப அனுகு முறைகளால் பெரும்பாலும் "இல்லை" என்று சொல்வதற்கே முடியாமல் தன்னிச்சையாக முடிவெடுக்கின்ற அளவில் வீட்டில் இருப்பவர்கள் உள்ளார்கள். அதாவது கணவனினது சம்பந்தம் இல்லாமல் மனைவியும், மனைவியின் சம்பந்தம் இல்லாமல் கணவனும் மேற்படி பெற்றோரின் சம்பந்தம் இல்லாமல் கட்டளைமைப் பருவத்தினரும் முடிவெடுக்கும் அளவிற்கு "லீசிங்" கம்பனியின் ஆதிக்கம் உள்ளது. எந்த வகையிலும் இதனை ஆரோக்கியமான ஒரு செயலாக நோக்க முடியாது.

வெளிநாடுகளில் உள்ள உறவினர்

நீண்ட யுத்த அனர்த்தங்களின் பின்னர் பல வருட இடைவெளிகளில் குடும்பங்களில் இருந்து பிரிந்து சென்ற உறவினர்கள் மீண்டும் குறுகிய கால இடைவெளியில் தமது உறவுகளுடன் மீள் இணைகின்றனர். அப்போது அவர்கள் தங்களது உறவுகளில் சில செய்யக்கூடிய தேவைகளை செய்கின்றார்கள். அவ்வாறு செய்வதில் மிகக் கூடுதலானவை அவர்கள் கேட்கின்ற மோட்டார் சைக்கிள், "டச் போன்களை" வாங்கிக் கொடுப்பதாகும். பெற்றோரும் தம்பிள்ளைகளிற்கு ஏதோ "ஜக்போட்" கிடைத்து விட்டதாக மகிழ்ச்சியடைகின்றனர். அந்த மகிழ்ச்சி எவ்வளவு நாட்களிற்கு? பரீட்சித்துப்பார்த்தல் என்பது கட்டிளமைப் பருவத்தினரில் காணப்படும் ஒரு விபரீத முயற்சி. விளம்பரங்களின் மோகம், திரில், எதிர்பால் கவர்ச்சி, என்ற போலி வலைக்குள் அவர்கள் சிக்குண்டு இறுதியில் விபத்தோடு அவர்களின் எதிர்காலம் முடிகிறது.

# கட்டிளமைப் பருவ உளநலம்



செய்யக்கூடியது

குறிப்பிட்ட வயதுவரை பொது போக்குவரத்து, துவிச்சக்கர வண்டி, கால் நடை மூலம் எமது தேவைகளை பூர்த்தி செய்தல். பெற்றோர், நெருங்கிய உறவினர்களின் வாகனங்களில் அவர்களுடன் சென்று விடுதல். சாரதி அனுமதிப் பத்திரம் பெறும் வயதை சற்று பின்நோக்கி போடுதல். வீதி சமிக்ஞைகள், வீதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு முறைகளை சரியாக அறிந்து அதன்படி நடத்தல். மது போதையில் இல்லாது இருத்தல், எந்த காரணம் கொண்டும் கைபேசி பாவிக்காது இருத்தல். வேகக் கட்டுப்பாட்டை தலைமேல் கொண்டு வாகனம் செலுத்துதல். தூக்கம், அசதி ஏற்படும் போது சிறிய ஓய்வெடுத்தல்.

செய்யக் கூடாதது

எந்தக் காரணம் கொண்டும், உங்கள் கட்டிளமைப்பருவ பிள்ளைகளிற்கு இரண்டு சில்லு மோட்டார் சைக்கிளை வாங்கிக் கொடுக்காதீர்கள். உறவினர்கள் வெளிநாடுகளிலிருந்து வரும் போதும் கண்டிப்பாக அவர்களிடம் இதை எடுத்துக் காட்டுங்கள். வாகன "லைசன்ஸை" எவ்விதத்திலும் வயதை குறைக்காது இருத்தல். குற்றம் இழைக்கும் கட்டிளமைப்பருவத்தினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் இருத்தல்."லீசிங்" வசதிகளை செய்து கொடுக்காமல் இருத்தல்

# ரயில் சிநேகம்

தொடர்ச்சி...

பெண்ணிற்கு நேர்ந்த பரிதாபம்!"

நண்பன் ஷெயார் பண்ணி இருந்தான்.
அவளே தான். திரும்பவும் பார்த்தான். புகைப்படத்தில் சிரித்தபடி பிரியா!
எப்படி? இரவு என் பக்கத்த்திலேதானே இருந்தாள்? ஆனால் நேற்றுப் பின்னேரமே இறந்ததாகச் செய்தி போட்டிருக்கே? சங்கரின் கை நடுங்கியது. உடம்பு வேர்க்கத் தொடங்கியது.

நேற்று நம்பர்கூடத் தந்திருந்தாளே?

டயல் பண்ணிப்பார்த்தான்.
நீங்கள் அழைத்த இலக்கம் இப்போது தொடர்பில் இல்லை. அப்போ இரவு முழுக்க பேய்க்குப் பக்கத்திலேயா இருந்து வந்திருக்கிறன்??!!

சங்கரின் நடுக்கம் இன்னும் அதிகரித்தது.
சுரேஸுக்கு கோல் எடுத்தான்.
"மச்சான் இரவு எனக்குப் பக்கத்தில ஒரு பேய் இருந்திருக்குடா தெரியாம அதுகூட நிறைய நேரம் பேசிக்கொண்டு வந்தன்டா" நடுங்கிக்கொண்டே சொன்னான்.

"போ விசரா, அதெப்படி உனக்கு மட்டும் பேய்கள் தெரியுது? எப்ப பார்த்தாலும் பேய் பேய் என்று சொல்லாமல் வெளிக்கிட்டு வேலைக்குப் போ பார்ப்பம், நான் ஹொஸ்பிட்டல் போக வேண்டும்" கட் பண்ணினான் சுரேஸ். ஒரு வைத்தியார்.

அந்த ஏசியிலும் அவன் சேர்ட் வேர்த்து நனைந்திருந்தது.

நடந்தது எல்லாம் டைப் பண்ணி, பிரியா இறந்த செய்தி வந்த இணையப் பக்கத்தையும் பேஸ் புக் மெசேஜாக சுரேஸுக்கு அனுப்பி வைத்தான்.

"ஓகே நான் ஈவினிங் வீட்ட வாரன்" ரிப்ளை அனுப்பி இருந்தான் சுரேஸ்.

"தம்பி சுரேஸ் உனக்கும் சேர்த்து புட்டுப் போடுறன் சாப்பிட்டிட்டுப் போ" சங்கரின் அம்மா.

"சொல்லுடா உனக்கு இப்ப என்னதான் பிரச்சினை?"

"நேற்று ரெயில் ஏற முதல் குடிச்சிருந்தியா"

"ஓ, ஆனாத் தெளிவாகத்தான் இருந்தன்."
அந்தப்பெண்ணோட பேசினதெல்லாம் தெளிவா ஞாபகம் இருக்கு மச்சான்"
"இஞ்ச பார், உனக்குப் பக்கத்தில உண்மையிலேயே ஒரு பெண் இருந்திருப்பாள். குடிபோதையில் அவளின் முகம் உனக்குச் சரியாக மனதில ரெஜிஸ்ரர் ஆகி இருக்காது. காலையில நியூஸில் ஒரு பெண்ணோட பார்த்த உடன் உள் மனதில அது நேற்று பார்த்த பெண் என்பதுபோல பிரமை வந்திருக்கும், இது சாதாரணமான விசயம்,
சும்மா அலட்டிக்கொள்ளாத மச்சான்."
"இல்லடா, அவள் பெயரும் பிரியாதான் செத்த பெண்ணும் பிரியா. இஞ்ச பாரு செத்த பெண் இன்டர்வியூக்குப் போறதுக்குத்தான் வந்திருக்கு, என்னட்டக் கதைச்சவளும் அதுக்குத்தான் வாறதாச் சொன்னவள்."
இஞ்ச பாரு, மட்டக்களப்பில இருந்து ஒரு நாளைக்கு எத்தனை பேர் இன்டர்வியூக்கு வறாங்கள், பிரியா என்று எத்தனை பேர் இருக்குதுகள். எல்லாமே ஒரு கோ இன்ஸ்டிடன்ட் மச்சான் சும்மா குழம்பாத"

"இதப் பார், ஒரு மொபைல் நம்பர் தந்தாள். அதுகூட இப்ப வேலை செய்யிதில்ல."
மீண்டும் டயல் பண்ணினான். இம்முறை ரிங் போனது.
"ஹலோ நான் சங்கர் பேசுறன்.
நீங்க பிரியாவா?"
"ஓம், பிரியான்ர போனில பிரியா பேசாமா யாரு பில் கேட்சா பேசுவான்?" அதே குரல்.

"இல்ல... சும்மா கேட்டன், டென்சன் ஆகாதைங்க என்ன காலம சொல்லாம கொள்ளாமப் போயிட்டீங்க?"
"நான் மருதானையிலேயே இறங்கிட்டன். நீங்க நல்ல நித்திரை, அதுதான் டிஸ்டேர்ப் பண்ணேல்ல"
"இட்ஸ் ஓகே, இன்டர்வியூ எப்படி?"
"செலக்ட் ஆகிட்டன்"
"கிரேட்! வாழ்த்துக்கள். ட்ரீட் இல்லையா?"

"இருக்கே, இங்கே ஒரு ஹொட்டலில அண்ணா சின்ன பார்ட்டி அரேஞ் பண்ணி இருக்கிறார், வாறிங்களா?"
"ஷ்யுர் , அட்ரஸ் சொல்லுங்க"
"மச்சான், நீ சொன்னது சரிதான்டா, காலம இன்டர்வியூ என்டதால ஓவ்ஃப் பண்ணி வச்சிருக்கா, இது வேற பிரியாதான்."

"பொரளையில ஏதோ பார்ட்டி வைக்கிறாவாம். என்ன ட்ரொப் பண்ணி விடுறியா?"
"வா போவம்"
அந்தப்பக்கம் போடா, அங்கதான் 93 இருக்க வேணும்.
"ஹொட்டல் பேரைக் கேட்காமல் ஹொட்டல் அட்ரஸை மட்டும் கேட்கும் ஒரே ஆள் நீதான்டா."
"இல்ல பேஸ் லைன் ரோட்டிலே இருக்குதாம்" என்று நம்பர் தந்தாள். பேஸ்லைன் ரோட்தானே ஈசியாக் கண்டு பிடிச்சிரலாம் எண்டு எல்லா டீட்டையிலும் கேக்கேல்ல மச்சி."

"சரி சரி அந்தா பார் 91. அதுக்கு அடுத்ததாத்தான் இருக்க வேணும் மச்சான்..."
சுரேஸ் 91 ம் இலக்கக் கட்டடம் தாண்டிக் காரை விட்டான்.

93ம் இலக்கத்தில் பொரளை பொது மயானம்!

# உன்னிச்சைக்குளம் நீர்ப்பாசனத் திட்ட விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுகோள்

தொடர்ச்சி...

இதனால் அப்பகுதி விவசாயிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தார்கள். சடுதியாக உன்னிச்சைக் குளத்தின் மடை திறக்கப்பட்டதனால் அக்குளத்தின் நீரேந்துப் பகுதிக்குக் கீழிருந்த விவசாய நிலங்கள், வயல்வாடிகள், வாடிகளிலிருந்த உடமைகள் எல்லாம் நீரில் அடித்துச் செல்லப்பட்டதாலேயே விவசாயிகள் நிர்க்கதிக்கு உள்ளானார்கள்.எனினும், இது குறித்து நீர்ப்பாசனத் திணைக்களம், மாவட்ட நிருவாக அதிகாரிகள், மற்றும் விவசாயிகள் ஆகியோரிடையே பரஸ்பர புரிதலை ஏற்படுத்தி முரண்பாடுகளைச் சரிசெய்து ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்கொண்டு செல்ல எடுத்த நடவடிக்கைகளுக்கு சாதமான விளைவுகள் இதுவரை ஏற்படவில்லை என்று உன்னிச்சைக்குளம் விவசாய நீர்ப்பாசனத் திட்டத்தின் முகாமைத்துவக் குழுத் தலைவர் கே. யோகவேள் அமைச்சரிடம் தாம் சுட்டிக்காட்டியதாக தெரிவித்தார்.

## மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

### அக்கரைப்பற்று கோளாவில் கிராமத்திலிருந்து புலம்பெயர்ந்த ஒரு அழகி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

தொடர்ச்சி...

மனித அவலங்களை சித்திரிக்கும் ஆவணப்படங்கள் இயக்கினார். தமிழகத்தில் தஞ்சமடைந்த ஈழத்து அகதிகளின் முகாம்களுக்குச்சென்று படங்களுடன் திரும்பி லண்டனில் கண்காட்சி வைத்தார். கருத்தரங்குகள், கண்டன ஊர்வலங்களில் பங்கேற்றார்.

இலங்கையில் நிடித்த மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இவர் இயக்கிய ஆவணப்படத்தை, இன்று முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தப்பேரழிவை அம்பலப்படுத்திய செனல் 4 தொலைக்காட்சி அன்று இவரது அந்த ஆவணப்படத்தை நிராகரித்திருக்கிறது.

இலங்கையில் நீடித்த போர் எமது தமிழ் மக்களையும் தாயகத்தையும் இறுதியில் எங்குகொண்டுசென்று நிறுத்தும் என்பதை அறிந்துவைத்திருந்த தீர்க்கதரிசி அவர். அதனால் அன்டன் பாலசிங்கம் முதல் இலங்கை அரசுத்தலைவர்கள் வரையில் அவர் தனித்தும் பலருடனும் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்தார்.

ராஜேஸ்வரி, தமது இலக்கியப்படைப்புகள் திரைப்படத்துறை முதலானவற்றில் மாத்திரம் முழுமையாக கவனம் செலுத்தியிருந்தால் எமது தமிழ் சமுதாயத்திற்கு ஒரு அபர்ணா சென்னோ, ஒரு மீரா நாயரோ, ஒரு தீபா மேத்தாவோ கிடைத்திருப்பார்.

ஆனால், அவர் தமது பணிகளை எமது தேசத்து பாதிக்கப்பட்ட மக்கள் பக்கம், குறிப்பாக பெண்கள் பக்கம் தொடர்ந்தார். உண்மையான படைப்பாளி - பத்திரிகையாளர் எப்பொழுதும் பாதிக்கப்பட்டவர்கள் பக்கம்தான் நிற்பார். அதற்கு சிறந்த முன்னுதாரணம் ராஜேஸ்வரி.

# 'இனி பாஸ்வேர்டே தேவையில்லை' - கூகுளின் புதிய தயாரிப்பு அறிவிப்பு

இணையதளங்களில் ஒருவரின் தனிப்பட்ட தகவல்களை பாதுகாக்கும் கடவுச்சொல்லுக்கு மாற்றாக கூகுள் நிறுவனம் "டைட்டன் செக்யூரிட்டி கீ" என்னும் புதிய தயாரிப்பை அறிமுகம் செய்துள்ளது.

உலகம் முழுவதும் பல இணையதளங்கள் ஹேக் செய்யப்பட்டு பயனரின் தனிப்பட்ட தகவல்கள் பொதுவெளியில் வெளியாகும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. கடினமான கடவுச்சொல் அமைப்பது மட்டுமல்லாமல், பயன்படுத்தும் இணையதளங்களின் பாதுகாப்பை பரிசோதிப்பது, 2 கட்ட கடவுச்சொல் சரிப்பார்ப்பை பயன்படுத்துவது போன்ற



பல பாதுகாப்பு சார்ந்த விடயங்கள் வல்லுநர்களால் பயனர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இந்நிலையில், உலகம் முழுவதுமுள்ள தனது 85,000 பணியாளர்கள் கடவுச்சொல் பாதுகாப்புக்கு பென் ட்ரைவ் போன்ற ஒரு பாதுகாப்பு கருவியை பயன்படுத்தி வருவதாக தெரிவித்த சில தினங்களில் கூகுள் நிறுவனம் "டைட்டன் செக்யூரிட்டி கீ" என்னும் புதிய தயாரிப்பை அறிமுகம் செய்துள்ளது.

அதாவது, இந்த கீயை உங்களது கணினியில் செருகிவிட்டால் குரோம் உலாவியில் (புரௌசர்), ஃபேஸ்புக், ட்ராப்பாக்ஸ் போன்ற இணையதளங்களை எவ்வித கடவுச்சொல்லையும் பதிவிடாமல், ஒரு கிளிக்கில் பயன்படுத்த முடியும்.

இந்தக் கீயை முதல் முறையாக பயன்படுத்தும்போது மட்டும் கடவுச்சொல்லை பதிவிட்டால் அது பயனரின் கணினி மற்றும் கடவுச்சொல் பதியப்பட்டுள்ள இணையதளம் போன்றவற்றை எவரும் திருடமுடியாத என்க்ரிப்ட் வடிவில் சேமித்துக்கொள்ளும்.

தற்போதைக்கு கூகுளின் கிளவுட் சேவை பயன்பாட்டாளர்களுக்கு மட்டுமே அறிவிக்கப்பட்டுள்ள இந்த கருவி, விரைவில் மற்ற பயன்பாட்டாளர்களுக்கும் விற்பனைக்கு வரும் என்று கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

# அம்மா விமானப் பணிப்பெண் : மகள் விமானி

தொடர்ச்சி...

"எனக்கு மகிழ்ச்சியாகவும், உற்சாகமாகவும் இருக்கிறது. என் மகிழ்ச்சிக்கு காரணம் மக்கள் என் உணர்வுகளை புரிந்து கொண்டார்கள். உற்சாகத்திற்கு காரணம் அவர்கள் இதனை கொண்டாடுகிறார்கள்" என்றார் சின்சான்கர்.

முன்னதாக பூஜா தனது ட்விட்டர் கணக்கில், "என் அம்மா தான் விமானப் பெண்ணாக பணிபுரியும் கடைசி நாளில், அந்த விமானத்தை நான் இயக்க வேண்டும் என்று விரும்பினார். நான் அந்த விமானத்தைன் இயக்கப் போவது மகிழ்ச்சி அளிக்கிறது" என்ற தொனியில் ட்வீட் செய்திருந்தார்.

பலரும் இதனை பாராட்டியிருக்கிறார்கள். பாரம்பரியம் தொடரட்டும் என்கிறது ஏர் இந்தியா.

# என்.எம்.பெரேரா சிறையிலிருந்து தப்பிய கதை

தொடர்ச்சி...

கலங்கடித்த உரை. ஆனால் இறுதித் தீர்ப்பாக மீண்டும் என்.எம்.பெரேராவுக்கும் பிலிப் குணவர்த்தனவுக்கும் 6 மாத கடூழிய சிறைத்தண்டனையுடன் 100 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டு, கண்டி-போகம்பரை, கொழும்பு –வெலிக்கடை, பதுளை சிறைச்சாலை என்பவற்றில் சிறைவாழ்க்கையை அனுபவித்தார்கள்.

சிறையில் இருக்கும் போது அவர் "சுதந்திரக் கல்வியின் வடிவம்" என்கிற நூலை எழுதினார். அது மட்டுமன்றி லண்டனில் இருக்கும் போது 1933இல் D.S.C பட்டப்படிப்பிற்காக அவர் சமர்ப்பித்த "பாராளுமன்ற ஜனநாயகம் : ஆங்கிலேய முறைமை பற்றிய ஒப்பீட்டு ஆய்வு" (Parliamentary Democracy: A Comparative Study of the English System) என்கிற ஆய்வுக்காக அவருக்கு உயர் பட்டம் அறிவிக்கப்பட்டது. அப்போது அவர் சிறையில் இருந்தார்.

30.05.1945 அன்று சகல அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும் என்கிற யோசனை முன்வைக்கப்பட்டு அரசாங்க சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதற்கு ஆதரவாக 28உம், எதிராக 2 வாக்குகளும் மட்டுமே அளிக்கப்பட்டன. பெரும்பான்மை வாக்குகளால் அது நிறைவேற்றப்பட்டது. அங்கு உரையாற்றப்பட்டவை இன்றைய தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை விடயத்திற்கு சிறந்த உதாரணமாக இருக்க முடியும்.

இந்தத் தீர்மானத்தால் குழப்பமடைந்த ஆளுநர் நிபந்தனைகளுடன் அவர்களை ஒரு மாதத்தின் பின்னர் விடுவிக்கலாம் என்றார். நிபந்தனையின்றி விடுவிக்காவிட்டால் தாம் உண்ணாவிரதம் இருப்போம் என்று என்.எம். பெரேரா உள்ளிட்ட அரசியல் கைதிகள் ஏகமானதாக தெரிவித்ததுடன், ஜூன் 18 அன்று உண்ணாவிரதத்தையும் தொடங்கினார்கள். அவர்களின் விடுதலைக்காக சிறைக்கு வெளியிலும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. இடதுசாரிக் கட்சிகள், தொழிற்சங்கங்கள் வெகுஜன அமைப்புகள் இணைந்து யூன் 18-25 வரை ஒரு வாரம் அரசியல் சிறைகைதிகளுக்கான வாரமென பிரகடனப்படுத்தி பல்வேறு பிரச்சார, மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். இறுதியில் ஜூன் 20 அன்று ஆளுநர் ஹென்றி மொன்க் மேசன் மூர் (Henry Monck-Mason Moore – இலங்கையின் இறுதி பிரிட்டிஷ் ஆளுநர்) அடிபணிந்தார். நிபந்தனையின்றி அனைவரையும் விடுவிக்க சம்மதம் தெரிவித்தார்.

யூன் 25 அன்று அந்த மக்கள் தலைவர்கள் பதுளை சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள்.

# நேற்று ஈ.பி.ஆர். எல்.எஃப், இன்று ரெலோ, நாளை புளொட்?

தொடர்ச்சி...

பிரேமச்சந்திரன்.

ஆனால், நடந்தது என்ன?

சம்பந்தனோ தமிழரசுக் கட்சியோ இவை எதையும் பொருட்படுத்தவேயில்லை. பதிலாக தாம் வகுத்துக் கொண்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே காரியங்களைச் செய்தன. இன்னும் செய்து கொண்டிருப்பதைக் காணலாம்.

அப்பொழுது சுரேஸ் தனித்து இந்தக் கோரிக்கைகளை முன்வைக்காமல், நெருக்கடிகளை உண்டாக்காமல் ஏனைய பங்காளிகளோடு கூட்டாகச் சேர்ந்து அவற்றை முன்வைத்திருக்க வேண்டும். கூட்டு நெருக்கடி உண்டாக்கும் அழுத்தம் சம்பந்தனையும் தமிழரசுக் கட்சியையும் பலவீனப்படுத்தியிருக்கும். நிர்ப்பந்தித்திருக்கும். கட்டுப்படுத்தியிருக்கும். இதெல்லாம் சம்பந்தனையும் தமிழரசுக் கட்சியையும் படியிறக்கிப் பதப்படுத்தியிருக்கும்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் விட்ட அதே தவறையே இப்பொழுது ரெலோ செய்கிறது. குறைந்த பட்சம் புளொட்டுடன் இணைந்து இந்தக் கோரிக்கைகளை முன்வைத்திருக்கலாம் ரெலொ. மட்டுமல்ல. தமிழரசுக்கட்சிக்குள்ளேயே நியாயமாகச் சிந்திக்கக் கூடியவர்களையும் இதில் சேர்த்திருக்கலாம்.

அப்படிச் செய்யவில்லை. ஆகவே சம்மந்தனுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இது இன்னொரு வெற்றியாகவே அமையும்.

இந்த இடத்தில் ரெலோவும் புளொட்டும் ஒரு விடயத்தைப் புரிந்து கொள்வது நல்லது. ஈ.பி ஆர்.எல்.எவ் முன்வைத்த கோரிக்கைகளையே இவ்வளவு தாமதத்திற்குப் பிறகு ரெலோ வைக்கும் நிலை வந்துள்ளது. இதை ஏற்கனவே ஈ.பி.ஆர்.எல்.எவ்வுடன் இணைந்து முன்வைத்திருந்தால் இன்று இப்படி அவலப்பட வேண்டியதில்லை. இன்று ரெலோ முன்வைக்கின்ற இந்தக் கோரிக்கைகளுக்கு ஆதரவளிக்காமல், இதனொடு தனக்குச் சம்மந்தமில்லை என்ற மாதிரி நல்லபிள்ளைப் பேரெடுப்பதற்காகத் தூர நிற்க முற்படுகிறது புளொட். நிச்சயமாக நாளைக்கு இதே அவலமும் நெருக்கடியும் புளொட்டுக்கும் உண்டாக்கும்.

ஏனென்றால் தமிழரசுக்கட்சி ஒரு பெரிய பூதத்தைப்போன்ற சிந்தனையைக் கொண்டது. எல்லாவற்றையும் விழுங்கி விடுவதே அதனுடைய இயல்பும் நோக்கமுமாகும்.

எனவே அறிவிக்கப்பட்ட மாதிரி 10 ம் திகதி கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நடக்கலாம். அதில் ஏற்கனவே நாம் சொன்னமாதிரி எந்தப் பெரிய – புதிய தீர்மானங்களும் எடுக்கப்படப்போவதில்லை. அதாவது அதிசயங்கள், ஆச்சரியங்கள் எதுவும் நடக்கப்போவதில்லை.

ரெலோவின் கோபம் தீர்வதற்கான வடிகாலாக மட்டும் அந்தக் கூட்டம் இருக்கும் அவ்வளவுதான்.



## மாமாங்கேஸ்வரர் ஆலய ஆண்டு விழா!

# நல்லையா உடையார் குடும்பத்தினரின் ஏழாம் திருவிழா (08 – 08 – 2018)

மட்டக்களப்பு பிள்ளையாரடியை பிறப்பிடமாகக் கொண்ட மறைந்த கணபதிப்பிள்ளை நல்லையா உடையார் அவர்களின் குடும்பத்தினரின், நூற்றுக்கும் அதிகமான ஆண்டுகளைக் கடந்த தொடர்ச்சியான உபயம் இது.
ஆன்மீகம் ஒரு புறமும், மக்களின் மறுமலர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட நோக்கம் மறு புறமுமாக இது, அவரது குடும்பத்தினரால் தொடர்ச்சியாக மாமாங்கத்தில் நடத்தப்பட்டு வருகின்றது.

ஆலயம் என்பது பக்திக்காக மக்கள் கூடும் ஓர் இடம் என்பதற்கு அப்பால், மக்கள் நலன் நோக்கிய சிந்தனைகளில் கவனத்தை செலுத்த வேண்டும் என்பது இந்தக்
குடும்பத்தினரின் நோக்கம்.

ஆங்கிலேய ஆட்சியில், உடையார் என்னும் அரச நிர்வாகப் பொறுப்பில் இருந்த நல்லையா அவர்கள், தனது வாழ்நாளில் ஊருக்காக உழைத்தவர். தனது குடும்பத்தினர் அதனையே தொடர வேண்டும் என்பது அவரது எதிர்பார்ப்பு. அதற்கமைய, உலகெங்கும் இன்று பரந்து வாழும் அவரது குடும்பத்தினர் மக்களின் நலன்களுக்காக பல செயற்பாடுகளில் ஈடுபட்டு
வருகின்றனர். அதேவேளை தாம் தமது ஊரில் இணையும் ஒரு வாய்ப்பாக இந்த ஏழாம் திருவிழாவை அவர்கள் நடத்தி வருகின்றனர்.

இந்த விழாவில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு உபயதாரர் அன்பாக அழைக்கின்றனர்.
மக்கள் தொண்டே மகேசன் தொண்டு!









Printed and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa